149

OVED FOR CLASS USE BY THE T. B. C., MADRAS

149

# BHARATHI TAMIL VACHAKAM

4/49

## BOOK VI

BY

V. NATARAJAN, B.A., L.T.

TB
031(6)
N47
86615

...KATARAMAN & CO.
... : KUMBAKONAM

# பாரதி தமிழ் வாசகம்

## ஆறும் புத்தகம்

OFFICE OF THE REGISTRAR OF B
18 OCT 1947
MADRAS

(முதல் பாரத்திற்கு
அல்லது
ஆறும் வகுப்புக்கு)

V. நடராஜன், B.A.,L.T.
ஜில்லா கல்வி அதிகாரி

APPROVED FOR CLASS USE BY THE T. B. C., MADRAS.
*(Vide Page 5 (Part I) & Page 18 (Part II) of Gazette D/20—5—1947)*

V. S. வெங்கடராமன் கம்பெனி
பப்ளிஷர்ஸ் : கும்பகோணம்

பதிவு செய்தது] [விலை 10 அணா

Reprinted July : 1947

IB
031(6)
N47

86615

Printed at the Royal Printing Works, Madras. M.S. 175
for V. S. Venkataraman & Co. Q. H. MS. 63
3000 Copies 25—7—47



கவியரசி சரோஜினி தேவி [பக்கம் 78

# முன்னுரை

தாய்மொழிப் போதனைபற்றித் துரைத்தனத்தார் வெளியிட்டுள்ள புதிய பாட திட்டம் பரம்பரை முறையி லிருந்து பெரிதும் மாறியது; புதியதொரு சீரிய வழியைக் காட்டுவது; வாழ்க்கைக்கு இன்றியமையாத தமிழறி வையும் உலக அறிவையும் அளிப்பதை வற்புறுத்துவது. அதை முற்றிலும் பின்பற்றித் தயாரிக்கப்பட்டுள்ள இப்புத்தகத்தில் அத்திட்டத்திலுள்ள விவரமான குறிப்புக் கள் ஒவ்வொன்றும் சிறப்பிடம் பெற்றிருக்கிறது.

ஆழ்ந்த படிப்பிற்கான வாசக புத்தகம் பெயர் பெற்ற இலக்கியங்களிலிருந்து தேர்ந்தெடுத்த பகுதிகள் அடங்கியதாக இருக்கவேண்டுமென்பது ஒரு புதிய மாறுதலாகும். அதற்கிணங்க, இதனிற் சேர்க்கப்பட் டுள்ள பாடப் பகுதிகள், அறிஞர் பலர் இயற்றிய நூல் களினின்று தொகுக்கப்பட்டுள்ளனவாகும். இவை பல திறப்பட்ட செவ்விய புதிய நடைக்கு எடுத்துக்காட்டாக அமையும்.

படிப்பின் வேகத்தையும், கருத்தைக் கிரகிக்கும் சக்தியையும் அதிகரிக்கச்செய்யும்பொருட்டு மௌன வாசிப்பு புதிய திட்டத்தில் மற்றுமோர் அம்சமாகும். இதுபற்றி மாணவர் தாமாகவே படித்து, குறித்த நேரத்தில் கண்டறிவதற்கான வினாக்கள் ஒவ்வொரு பாடத்தின் ஆரம்பத்திலும் கொடுக்கப்பட்டிருக்கின்றன. பலதிறப்பட்ட புதுமுறையான பயிற்சிகள் பாடத்தின் இறுதியில் அளிக்கப்பட்டுள.

இவ்வாசகத்தின் பதிப்பில் ஒப்புநோக்குதல் முதலி யன செய்து உதவிய தமிழ்ப் பண்டிதர், கோ. சேஷாத்ரி அவர்கட்கு எனது நன்றி உரித்தாகும்.

நூதன முறையில் தயாரிக்கப்பட்டுப் பலவிதச் சிறப்புக்களமைந்த இப் பாரதி ஆறும் வாசகம் மாண வர்க்கு மிக்க பயன் அளிக்குமென்று நம்புகிறேன்.

பதிப்பாசிரியர்

# நன்றி கூறல்

கீழே காணப்பெறும் பாடப் பகுதிகளை அச்சிட அனுமதி வழங்கிய உரிமையாளருக்கு எமது நன்றி உரியதாகும்.

| பகுதி | உரிமையாளர் |
|---|---|
| 1. சமூகத் தொண்டு | வித்வான் வே. வேங்கடராசுலு ரெட்டியார் அவர்கள் |
| 2. பாரத நாடு<br>3. மண்ணுலகம்<br>4. ஓவியர் மணி இரவி வர்மா | பாரதி பிரசுராலயம், சென்னை. |
| 5. ஆறு | திரு. S. தேசிகவிநாயகம் பிள்ளை அவர்கள் |
| 6. 'என்னுடைய கலியாணமும் இமயமலைப் பிரயாணமும் | திரு. சங்கு கணேசன் அவர்கள். |
| 7. தாயே! இதோ உன் தனயன் கடிதம்! | திரு. T. P. திரிகூடசுந்தரம் பிள்ளை அவர்கள், M.A., B.L. |
| 8. கவியரசி சரோஜினி தேவி | ஸ்ரீமதி ஸ்வர்ணம்பாள் அவர்கள் |
| 9. சுவாமி விவேகாநந்தர் கடிதம் | ஸ்ரீ ராமகிருஷ்ண மடம், மைலாப்பூர் |
| 10. விதியின் வலிமை | திரு. K. குப்புஸ்வாமி அவர்கள் |
| 11. படக்காட்சி | நிலைய அதிகாரி, அகில இந்திய ரேடியோ, திருச்சி. |
| 12. கடல் தோண்டப் பட்ட கதை | திரு. P. R. இராஜ சூடாமணி அவர்கள் |

V. S. வெங்கடராமன் கம்பெனி,
பப்ளிஷர்ஸ், கும்பகோணம்

# உள்ளுறை

| பாடம் | விஷயம் | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | சமூகத் தொண்டு | .... | 1 |
| 2. | பாரத நாடு | .... | 4 |
| 3. | சுகன்னி | .... | 6 |
| 4. | பயிற்சிப் பாடம் I | .... | 12 |
| 5. | மண்ணுலகம் | .... | 14 |
| 6. | கண்ணன் திருவிளையாடல் | .... | 21 |
| 7. | தானைத் தலைவன் | .... | 22 |
| 8. | பயிற்சிப் பாடம் II | .... | 29 |
| 9. | பள்ளுப் பாட்டு | .... | 32 |
| 10. | ஊசி செய்தல் | ... | 34 |
| 11. | கங்கை நதி | .... | 39 |
| 12. | ஆறு | .... | 45 |
| 13. | பயிற்சிப் பாடம் III | .... | 47 |
| 14. | யாழ் வென்றி | .... | 49 |
| 15. | 'என்னுடைய கலியாணமும், இமயமலைப் பிரயாணமும்' | .... | 54 |
| 16. | தேவாரம் | ... | 62 |
| 17. | பத்திரிகைச் செய்தி | ... | 65 |
| 18. | பயிற்சிப் பாடம் IV | .... | 69 |
| 19. | தாயே! இதோ உன் தனயன் கடிதம்! | .... | 73 |
| 20. | கவியரசி சரோஜினி தேவி | .... | 78 |
| 21. | குரங்கும் குருவியும் | .... | 84 |
| 22. | சுவாமி விவேகாநந்தரின் கடிதம் | .... | 85 |
| 23. | பயிற்சிப் பாடம் V | .... | 96 |
| 24. | விதியின் வலிமை | .... | 98 |
| 25. | சித்திர விளக்கம் | .... | 108 |

| பாடம் | விஷயம் | | பக்கம் |
|---|---|---|---|
| 26. | புத்திமானே பலவான் | .... | 111 |
| 27. | விசித்திரம்: ஆனால் உண்மை | .... | 118 |
| 28. | கடிதம் வரைதல் | .... | 122 |
| 29. | கடல் தோண்டப்பட்ட கதை | ... | 125 |
| 30. | மரங்கொத்தியின் கடிதம் | .... | 127 |
| 31. | ஓவியர் மணி இரவி வர்மா | .... | 132 |
| 32. | படக்காட்சி | ... | 135 |
| 33. | பொருளடக்கம் | .... | 139 |

செய்யுட் பகுதி

| | | | |
|---|---|---|---|
| 1. | நல்வழி | .... | 141 |
| 2. | இனியவை நாற்பது | .... | 144 |
| 3. | திரிகடுகம் | .... | 145 |
| 4. | திருக்குறள் | ... | 147 |
| 5. | நாலடியார் | .... | 148 |
| 6. | அல்லியரசாணி மாலை | .... | 148 |
| 7. | சமரஸக் கீர்த்தனை | .... | 149 |
| 8. | குமரேச சதகம் | .... | 150 |
| 9. | நகைச்சுவைப் பாக்கள் | .... | 151 |
| 10. | தமிழ் அணங்கு | .... | 152 |


———

# பாரதி தமிழ் வாசகம்

## ஆறும் புத்தகம்

---

## 1. சமூகத் தொண்டு

[வித்வான் வே. வேங்கடராஜுலு ரெட்டியார்]

குறிப்பு:—ஆசிரியர் 'படி' என்றதும் இப்பாடத்தைப் படிக்க ஆரம்பித்து, கடிகாரத்தில் மூன்று நிமிஷம் ஆனவுடன் அவர் 'நிறுத்து' என்றதும், விட்ட இடத்தைக் குறித்துக்கொண்டு நிறுத்திவிடுங்கள். படித்த சொற்களை எண்ணி ஒரு நிமிஷத்தில் நீங்கள் படித்துள்ள சராசரி வார்த்தைகள் எத்தனை யென்று கணக்கிடுங்கள். ஆசிரியர் வகுப்பில் பல மாணவருடைய படிப்பு வேகத்தை ஒப்பிட்டுத் தெரிவிப்பார். நாளடைவில் உங்கள் படிப்பின் வேகத்தை அதிகப்படுத்த முயலுங்கள்.

**செல்வச் சிறுமிகளே, சிறுவர்களே !**

உங்களிடம் இளமைக்குரிய அழகு, இனிமை, சுறு சுறுப்பு, உற்சாகம், வீரம், வினையுறுதி ஆகிய உயர் குணங்கள் திகழ்கின்றன. இக்குணங்கள் வாய்ந்த உங்களிடமே நாட்டின் முன்னேற்றம் உளது. 'வீட்டிற்கு உயிர் இனிய மக்கள்; நாட்டிற்கு உயிர் வீர இளைஞர்' என்று பெரியார் ஒருவர் நவின்றுளார்.

இளைஞர்களே, சமூகத் தொண்டினை வாழ்க்கையின் இலட்சியமாகக்கொண்டு கிராம சேவையில் ஈடுபடுங்கள். ஏனெனில், கிராமமே நாட்டின் உயிர்நாடி; கிராமம் செழித்தால் நாடு செழிக்கும்.

பாதிரிமார்கள் கிராமங்களில் தொண்டு செய்வதை நீங்கள் கவனித்திருப்பீர்கள். அவர்கள் தந்நலமற்ற உழைப்பால் எவ்வளவு பொதுநலப் பணிகளை ஆற்று கின்றனர்! கோயில் கட்டுகின்றனர்! மருத்துவச்சாலைகள் நிறுவுகின்றனர்! கல்விச்சாலைகள் ஏற்படுத்துகின்றனர்! இலவசச் சாப்பாட்டு விடுதிகளமைத்து, இளைஞர்களுக் குத் தொழிலும் கற்பிக்கின்றனர். மேலும், தங்கள் தேவைகளைக் குறைத்துக்கொண்டு எளிய வாழ்க்கை நடத்துகின்றனர் அல்லவா! நாடு விட்டு நாடு வந்து இத் தகைய நிலையான பணிகளை அவர்கள் செய்யமுடியு மானல், சொந்த நாட்டினராகிய நாம் ஏன் செய்ய லாகாது? 'விழிமின்! எழுமின்! உழைமின்!' என்னும் சுவாமி விவேகாநந்தரின் ஆப்தமொழிகளை ஞாபகத்தில் வையுங்கள்.

கிராமத்தை வெறுத்து நகரத்திற்குச் செல்லும் அவாவை மாற்றி, நாட்டுப்புறங்களிலேயே குடியேறிப் பாதிரிமார்களைப்போல் சமூகத் தொண்டுசெய்ய நீங்கள் முன்வரவேண்டும்.

வைத்தியர்களாகவும், ஆசிரியர்களாகவும், தொழி லாளர்களாகவும் கிராமங்களுக்குச் செல்லுங்கள். இனிய கானத்துடன் பஜனைகள் நடத்தி, கிராம மக்களுக்குப் பக்தி யூட்டுங்கள். வைத்தியத்தாலும், அவசர உதவி களாலும் ஊழியஞ் செய்து அவர்களது அன்பைப் பெறுங்கள். சுகாதார விஷயங்களை எடுத்துரைத்து ஆரோக்கிய வாழ்க்கை நடத்தத் தூண்டுங்கள். பள்ளிக் கூடங்கள் நிறுவி, அறியாமையைப் போக்கிக் கல்வியை ஓங்கச் செய்யுங்கள். ஜனோபகார சங்கங்கள் அமைத்து,

அவைகள் மூலம் விவசாயச் சீர்திருத்தம், தொழிற் சாலைகள், ஐக்கிய நாணய சங்கங்கள், பஞ்சாயத்து, மது விலக்கு இவைகளை ஏற்படுத்துங்கள்.

மேடைச் சொற்பொழிவுகள் போதும். 'என் கடன் பணி செய்து கிடப்பதே' என்னும் அப்பர் சுவாமி கள் திருவாக்கை மூலமந்திரமாகக்கொண்டு, தொண்டு ஆற்றுங்கள்.

இறைவன் உங்கட்கு உடலுறுதியும், நீண்ட ஆயு ளும், எல்லா நன்மையும் நல்குவானாக!

## பயிற்சி

[இப்பாடம் மாணவ மாணவிகளுக்குத் தமிழாசிரியர் ஒருவர் விடுக்கும் நன்மதிச் செய்தியாகும்.]

i. **கேள்விகள்:—**

1. இளமைக்குரிய உயர் குணங்கள் ஆறு கூறுக.

2. பாதிரிமார்கள் செய்யும் நான்கு பொதுநலப் பணிகளை விவரிக்க.

3. ஐந்தாவது பாரா எதைப்பற்றி விவரிக்கிறது? ஒரு வாக்கியத்தில் பதில் சொல்லுக.

4. ஆறுவது பாராவிலுள்ள மேற்கோள் யாது?

ii. **சொல் விளக்கம்:—** திகழ்கின்றன = விளங்குகின்றன. பணி = சேவை, தொண்டு. நவின்றுளார் = சொல்லியிருக் கின்றனர். சொற்பொழிவு = உபந்நியாசம், பிரசங்கம். சமூ கம் = சேர்ந்து வாழும் மக்களின் கூட்டம். ஆப்த = நேச. மேடை = பிரசங்க மேடை.

நவில், கூறு, பகர், சொல், செப்பு, உரை—இவை ஒரு பொருள் பல சொற்கள்.

iii. கட்டுரை:—நீ உனது கிராமத்துக்குச் செய்ய விரும்பும் பொதுநலப் பணி யொன்றை விவரித்து ஒரு பத்தி (பாரா) எழுது.

ஒரு பாரா என்பது ஒரே விஷயத்தை விவரிப்பதாக இருக்க வேண்டும். ஒன்றுக்கொன்று பொருத்தமில்லாத பல கருத்துக்களை ஒரே பாராவில் கூறுதல் தகாது.

## 2. பாரத நாடு

குறிப்பு:—பாட்டின் ஓசை நயத்தைக் கவனியுங்கள். இராகத்துடன் படியுங்கள்.

### பல்லவி

பாருக்குள்ளே நல்ல நாடு—எங்கள்
பாரத நாடு.

### சரணங்கள்

1. ஞானத்திலே பர மோனத்திலே—உயர்
மானத்திலே அன்ன தானத்திலே,
கானத்திலே அமுதாக நிறைந்த
கவிதையிலே யுயர் நாடு—இந்தப் (பாரு)

2. தீரத்திலே படை வீரத்திலே—நெஞ்சில்
ஈரத்திலே உப காரத்திலே,
சாரத்திலே மிகு சாத்திரங் கண்டு
தருவதிலே யுயர் நாடு—இந்தப் (பாரு)

3. நன்மையிலே யுடல் வன்மையிலே—செல்வப்
பன்மையிலே மறத் தன்மையிலே,
பொன்மயிலொத்திடு மாதர் தங் கற்பின்
புகழினிலே யுயர் நாடு—இந்தப் (பாரு)

4. தோட்டத்திலே மரக் கூட்டத்திலே—கனி
யீட்டத்திலே பயி ரூட்டத்திலே
தேட்டத்திலே யடங்காத நிதியின்
சிறப்பினிலே யுயர் நாடு—இந்தப் (பாரு)

—கவி சி. சுப்பிரமணிய பாரதியார்

## பயிற்சி

i. அன்னம்—சோறு, பட்சி; ஆதலால் இது பல பொருள் ஒரு சொல். கானம், பார், ஈரம், சரணம், கனி-இவை ஒவ்வொன்றுக்கும் இரு பொருள் கூறுக.

ஞானம், மோனம், மானம், தானம், கானம்—இச் சொற்களில் ஒலி ஒற்றுமையைக் கவனி.

இதேவிதம் தீரம், நன்மை, தோட்டம்—முறையே இவை ஒவ்வொன்றுக்கும் ஒலியொற்றுமையுள்ள சொற்களைக் கண்டு பிடித்து எழுது.

ii. பாரத நாட்டைப்பற்றிப் பாரதியார் கூறும் உயர் குணங்கள்: மானம், கவிதை செய்தல், வீரம், ஞானம், தானம், சாத்திரங் காணல், கானம், கற்பு.

பாரத நாட்டுப் பெரியார்: ராமகிருஷ்ண பரம ஹம்ஸர், கண்ணகி, அருணகிரிநாதர், கர்ணன், சிவாஜி, ரஜபுத்திரர், கம்பர், ஸர். சி. வி. ராமன்.

எந்தக் குணம் எந்தப் பெரியாருக்குப் பொருந்தும்? நேர் நேராக எடுத்தெழுது.

இவர்களைத் தவிர ஒவ்வொரு சிறப்புக்கும் வேறு உதாரண மானவர்கள் கூறுக.

iii. நமது நாட்டில் கிடைக்கும் அறுவகை மரங்கள், கனிகள், பயிர்கள் இவைகளின் பெயர்களை எழுதவும்.

iv. முந்திய பாடத்திற்கும் இந்தப் பாடத்திற்கும் வித்தியாசம் தெரிகிறதா? முந்திய பாடம் **வசனம்.** இந்தப் பாடம் **செய்யுள்.** வசனத்தை ராகத்தோடு பாடமுடியுமா? செய்யுளைப் பாட முடியுமல்லவா? வசன நூல்களும் செய்யுள் நூல்களும் பொதுவாக **இலக்கியம்** எனப்படும்.

இலக்கியத்தைத் திருத்தமாக எழுதக் கற்பிக்கும் நூல் **இலக்கணம்** ஆகும். நாம் தமிழ்மொழியைத் திருத்தமாகப் பேசவும் எழுதவும் அறிந்துகொள்ளுவதற்குத் தமிழ் இலக்கணம் உதவியாகும்.

v. **பிற நூல் ஆராய்ச்சி:—1.** பாரதியாரது வேறு எந்தப் பாடல்கள் நீ படித்திருக்கிறாய்?

2. பாரத நாடு—காரணம் கேட்டு அறிக.

3. பல்லவி, அநுபல்லவி, சரணம் இவைகளின் விளக்க உரையை அறிக.

# 3. சுகன்னி

**படித்துக் கதை சொல்:**

வகுப்பிலுள்ள மாணவர் எல்லோரும் இந்தக் கதையைப் பத்து நிமிஷத்திற்குள் மௌனமாகப் படிக்கவும். புத்தகத்தை மூடிக் கீழே வைத்துவிட்டு முதலில் ஒரு மாணவன் கதையை ஆரம்பித்துத் தனது சொந்த வார்த்தைகளில் ஒரு வாக்கியம் சொல்ல வேண்டும். அடுத்த மாணவன் அந்த வாக்கியத்தை யொட்டி இன்னொரு வாக்கியம் சொல்ல வேண்டும். இப்படியே ஒவ்வொரு பையனும் வரிசையாகச் சொல்லிக் கதையை முடிக்கலாம்.

1. சுகன்னியின் கற்பை விளக்கும் வாக்கியங்களைக் கண்டுபிடி.

2. சுகன்னியன் தந்நலமின்மை எந்த வாக்கியத்தால் அறியப்படுகிறது?

நிலவளம் நீர்வளம் மிக்க கோசல நாட்டில் அயோத்தி மா நகரத்திலே **சரியாதி** என்ற மன்னன் செங்கோல் செலுத்திவந்தான். அவனுக்குச் **சுகன்னி** என்னும் பெயர்கொண்ட ஒரே ஒரு மகள் இருந்தனள். அவனுடைய அரண்மனைக்கு அண்டையிலிருந்த சந்தனம், பாதிரி, வேங்கை, மகிழ், சண்பகம் முதலிய தாவரங்களடர்ந்த ஒரு பூஞ்சோலையின் நடுவில் அழகிய தாமரைத் தடாகமொன்றிருந்தது. அப்பொழிலின் ஒரு மருங்கில் **சியவனர்** என்ற ஒரு முனிவர் நெடுநாளாகத் தவங்கிடந்தனர். அவர் அசைவின்றி இருந்தமையால்,

அவர்மீது ஒரு புற்று வளர்ந்து மூடி, அவரிருந்த இடந் தெரியாமற் செய்துவிட்டது.

ஒரு நாள் சரியாதி மன்னன் தன் அருமைப் பெண் சுகன்னியுடன் தோட்டத்தில் உலாவி வந்த போது அவள் அங்குள்ள புற்றினருகே சென்று, அதனுள் மெல்லிய ஓசை கேட்கப்பெற்று, அப் புற்றினுள் யாதிருப்பதென்று தெரிய விரும்பி, ஒரு முள்ளை யெடுத்து அதனுட் புகுத்தினள். முள்ளை வெளியே எடுத்தபோது அதன் நுனியில் குருதி படிந்திருந்தமையால், அதனுள்ளிருக்கும் உயிரொன்றினைத் தான் துன்புறுத்தியதாகக் கருதி வருத்தமுற்றனள்.

பின்னர் சுகன்னியும், மன்னனும், பிறரும் அரண்மனைக்கு மீண்டனர். மீண்டது முதல் அரண்மனையிலுள்ள யாவரும் வாதநோய் கொண்டு நகர முடியாமல் வருந்தினர். அரசன் அமைச்சர்களை யழைத்து அதற்குக் காரணம் யாது என்று கேட்க, அவர்கள் பொழிலகத்தே தவங் கிடக்குஞ் சியவன முனிவருக்கு யாராவது இன்னல் விளைத்திருக்க வேண்டுமென்று விளம்பினர். அங்ஙனம் யார் செய்திருத்தல் கூடுமென்று அரசன் வினவியகாலை, வேலைக்காரர் அனைவரும் தாங்கள் தீங்கு யாதுஞ் செய்யவில்லையென்று கூறிவிடவே, சுகன்னி அரசன்பாற் சென்று புற்றினைத் தான் முள்ளாற் குத்தியதை யறிவித்தாள்.

உடனே அரசன், புற்றைப் பிரிக்கச்செய்து அங்கிருந்த சியவன முனிவரை வணங்கி, அரண்மனையிலுள்ள ஜனங்களுடைய நோயைத் தீர்க்க வேண்டுமென்று வேண்டினன். அப்போது முனிவர், “அரசனே!

முள்ளாற் குத்தப்பட்ட என் கண் குருடாகிவிட்டது. ஆயினும், அக் குற்றத்தை நான் பொறுத்துக்கொள் கின்றேன். உன் புதல்வியாகிய சுகன்னியை எனக்கு மணம் புரிவித்து, எனக்குப் பணிவிடை செய்வித்தால் உங்களது இன்னல் தீரும்'' என்றனர். மன்னன் தனது செல்வப் புதல்வியைக் குருடராயும் கிழவராயு மிருந்த சியவன முனிவருக்கு மனைவியாகக் கொடுப்பதற்கு மனம் இசையப்பெறாது வருந்தினன். ஆனால் அவ்வாறு செய்யாது, தன்னைச் சேர்ந்தவர்கள் படுந் துன்பத்தை நிவர்த்திசெய்ய முடியவில்லை. அத்தருணத்தில் சுகன்னி, தான் செய்த குற்றத்திற்குத் தானே தண்டனை பெறுதல் தகுதி யென்றெண்ணித் தன்னை முனிவருக்கு மணம் புரிவிக்குமாறு தந்தையை வேண்டி, அவ்வாறே செய்யப் பெற்று முனிவரின் இல்லக் கிழத்தியாயினள்.

பின்னர், சியவனரும் சுகன்னியும் காட்டிற்குச் சென்று ஓர் ஆச்சிரமத்தில் தங்கினர். கற்பரசியாகிய சுகன்னி தன் கணவரை ஒரு சிறிதும் இகழாது முழு அன்போடு அவருக்குப் பணிவிடை யாற்றிவந்தாள். அவளது கற்பினை விண்ணவரும் வியந்தனர்.

தேவ மருத்துவர்களாகிய அசுவினி தேவர்கள் சுகன்னியின் உருவழகினைக் கேள்வியுற்று மானுட இளைஞர் வடிவங்கொண்டு அவள்முன் தோன்றி "மிகுந்த அழகுடைய நீ, காட்டிலே மரவுரி தரித்துக் கண் தெரி யாத கிழ முனிவரின் பத்தினியா யிருப்பதைவிட எங்க ளுடன் வந்தால் சுகமாக வாழலாமே'' என்று இயம்பி னர். சுகன்னி அவர்களது தீய சொற்களைக் கேட்டு

உள்ளம் பதைத்து உடல் நடுங்கி அவர்களை நோக்கி, "நீங்கள் சொல்வது பெருங்குற்ற மென்பதை அறியீர்களோ? மரியாதையுடன் போகாவிட்டால் நீங்கள் கெட்டொழிவீர்கள்" என்று சினந்து கூறினள். அப்போது அவர்



கள் அவளுடைய கற்பைச் சோதிக்கவே தாங்கள் வந்ததாகவும், தங்களுக்குக் கெடுதற் சித்தமில்லை யென்றுங் கூறி, அவள் கணவரை அவளுக்கேற்ற இளைஞராக

மாற்றும் ஆற்றல் தங்களுக்கிருப்பதாகவுந் தெரிவித்தார்கள். அவர்கள் கருத்தினை யவள் சியவன முனிவருக்கு அறிவித்தாள். அவர் அதற்கிசைந்து, அவர்களை அழைத்து வரும்படி கூறினர்.

அசுவினி தேவ ரிருவரும் சியவன முனிவர்பால் சென்று, அவரியற்றிய வந்தனை வழிபாடுகளை யேற்றுக் கொண்டு அவரை ஒரு குளத்திற் கழைத்துப்போய் அவரோடு தாமும் அக்குளத்தில் மூழ்கினர். மூழ்கி யெழுந்தவுடன் மூவரும் அழகு மிக்க இளைஞர்களாகக் காணப்பட்டார்கள். மூவர்க்கும் யாதொரு உருவ வேறுபாடும் தோன்ருது போகவே, சுகன்னி மிகுந்த மனக்கலக்க முற்றனள். பின்பு அவள், தனது வழிபடு தெய்வத்தைத் தியானித்துத் துதித்துத் தன் கற்பு உண்மையாக இருந்தால், தான் எறியும் மாலையானது தன் கணவன் கழுத்திலேயே விழவேண்டுமென்று வேண்டிக்கொண்டு ஒரு மலர் மாலையைச் சுழற்றி எறிந்தாள். அது சியவன முனிவரின் கழுத்திலேயே விழுந்தது. அதனைக் கண்ட அசுவினி தேவர்கள் சுகன்னியின் அருங் கற்பைப் பாராட்டித் தம்முலகு ஏகினர். அவள் அளவற்ற மகிழ்ச்சியடைந்து, இளமைபெற்ற தன் கணவரோடு அயோத்தி சென்று, தாய் தந்தையரால் குதூகலத்தோடும் பெருங் களிப்போடும் வரவேற்கப்பெற்று இன்ப வாழ்க்கை நடத்தினள். இன்றும், இளமை கொடுக்கும் மருந்தொன்று சியவனப்பிராசம் என்ற பெயரோடு வழங்குகின்றது.

## பயிற்சி

[இது பாரதத்திலுள்ள ஓர் இனிய கதை]

i. **சொல் விளக்கம்** :—பொழில் = சோலை. மருங்கு= பக்கம். குருதி = இரத்தம். இன்னல் = துன்பம். இல்லக் கிழத்தி = மனைவி. மரவுரி=மரப்பட்டையால் செய்த ஒருவகை ஆடை. அமைச்சர் = மந்திரிகள்.

. **இலக்கணம்** :—

சரியாதிக்குச் சுகன்னி யென்னும்

இதில் சொற்கள் தொடர்ந்து வரினும் கருத்து முடிவு பெற வில்லை. இந்தச் சொற்றொடர் வாக்கியமாகாது. இது எச்சச் சொற்றொடர் எனப்படும்.

**சரியாதிக்குச் சுகன்னியென்னும் ஒரு மகள் இருந்தனள்.**

இவ்விதம் சில சொற்கள் தொடர்ந்து நின்று ஒரு முடிவான கருத்தைத் தெரிவிப்பது **வாக்கியம்** அல்லது முற்றுச் சொற்றொடர் எனப்படும். வாக்கியத்தின் முடிவில் **முற்றுப்புள்ளி** இருப்பதைக் கவனி.

இந்த வாக்கியத்தில் எத்தனை சொற்கள் இருக்கின்றன? ஒவ்வொரு சொல்லிலும் எத்தனை எழுத்துக்கள் இருக்கின்றன?

எழுத்துக்கள் சேர்ந்து சொல் ஆகும். சொல்=வார்த்தை =பதம். சொற்கள் சேர்ந்து வாக்கியம் ஆகும். பல வாக்கியங்கள் சேர்ந்து நின்று ஒரு பாரா அல்லது பத்தி ஆகிறது.

# 4. பயிற்சிப் பாடம் I

i. படத்தைப் பார்த்து விடை தெரிவிக்க:



1. நான்காவது படம் என்ன மரம்? எதனல் ஊகிக்கிருய்?

2. படத்தில் காணும் முப்பழங்கள் எவை? அவை எந்த மாதங்களில் கிடைக்கும்? உனக்கு இஷ்டமான பழம் எது?

3. ஐந்தாவது படம் சவுக்கு மரம். அதன் உபயோகங்களை மூன்று வாக்கியங்களில் எழுது.

4. முதல் படம் என்ன மரம்? அதற்கும், அடுத்த மரத்துக்கும் மூன்று வேற்றுமைகள் கூறு.

ii. இவர்கள் யார்? ஒரே வார்த்தையில் விடை குறி.

1. ஒரு நாட்டை ஆள்பவன்—(மன்னன்.)

2. ஒரு தேசத்தில் சர்வாதிகாரம் செலுத்துபவன்—.

3. போரில் சண்டையிடுவோன்—.

4. பிறருக்கு உதவுபவன்—.

5. சேனைகளை இயக்குபவன்—.

6. யானையை அடக்கி ஓட்டுபவன்—.

7. தனது தேசத்தில் பற்றுள்ளவன்—.

8. யாசிப்பவருக்குக் கொடுப்பவன்—.

9. கடலில் கப்பல் செலுத்துவோன்—.

10. பாடல்கள் இயற்றுவோன்—.

iii. நவராத்திரி விடுமுறைக்கு நீ ஊருக்குத் திரும்பியதும், உன்னைப் பின்வரும் கேள்விகள் கேட்கிறார்கள். மரியாதையான மறுமொழி யாது பகர்வாய்?

**அன்னை :** சுந்தரம், எப்பொழுது வந்தாய்? ஊரில் மாமன், மாமி முதலியோர் சௌக்கியமா?

**தகப்பனார் :** பரீட்சையில் நன்றாக எழுதியிருக்கிறாயா? மார்க்குகள் தெரியுமா?

**நண்பன் :** விடுமுறை எந்தத் தேதி வரையில்? உல்லாசமாக விளையாடலாமல்லவா?

**தம்பி :** அண்ணா! எனக்கு என்னென்ன பொருள்கள் வாங்கி வந்திருக்கிறாய்?

iv. சிந்தித்து விடை பகர் :

1. பருத்திப் பூக்களுக்கு ஐந்து இதழ்கள் உண்டு. என்னிடமுள்ள புஷ்பத்துக்கு ஐந்து இதழ்கள். அது பருத்திப் பூவாய்த் தானிருக்குமா?

2. பெரியோரெல்லோரும் உழைப்பாளிகள். ஓர் ஒட்டன் நாளுக்குப் பதினொன்கு மணி நேரம் வேலை செய்கிறான். இவன் பெரியோனா?

3. இரத்தினம் மணியை விடச் சிகப்பு. ஆனால் முருகனைவிடக் கறுப்பு. மூவரில் எவர் அதிகச் சிகப்பு?

4. ஒரே வரிசையில் மூவர் அமர்ந்திருக்கின்றனர். ஜயாவுக்கு வலது புறம் கமலம்; கனகம் கமலத்துக்கு வலது புறம். நடுவிலிருப்பவர் யார்?

# 5. மண்ணுலகம்

[கவி சி. சுப்பிரமணிய பாரதி]

**பத்து நிமிஷத்தில் படித்து விடை கண்டுபிடி :—**

1. பாரதியாரும் அவர் மனைவியும் உரையாடல் எந்தப் பாராவில் உளது?

2. மூன்ருவது பாராவின் கருத்தை விளக்க ஒரு தலைப்புப் பெயர் கொடு.

3. சிறிய தாயாரின் 'சன்மார்க்க போதனை' யாது?

4. ஆங்காங்குக் காணப்படும் நகைச்சுவைகளை உணர்ந்தறி.

5. இவர் தேசப்பற்றுள்ளவரென்பது எந்த வாக்கியத்திலிருந்து புலனாகிறது?

எனக்குத் தலைநோவு பலமாயிருந்தது. படுக்கையை விட்டிறங்கி, கிழக்கே இரண்டு மூன்று சந்துகளுக்கப்பால், ஏதோ பெயர் மறந்துபோன தெருவில் நான் கூலி கொடுத்து வாசம் செய்து கொண்டிருந்த வீட்டிற்கு வந்து சேர்ந்தேன். அந்த வீட்டைக் கொஞ்சம் வர்ணிக்கலாமா? கந்தர்வ நாட்டைப்பற்றிக் கேட்டீர்களே இந்த மண்ணுலகத்தில் நமக்குள்ள சௌகரியங்களைப் பற்றிச் சிறிது கேளுங்கள்.

நானிருந்த வீட்டிற்கு முன்பக்கத்திலே ஒரு கூடமும், அதைச் சுற்றி இரண்டு மூன்று அறைகளும் உண்டு. [மேற்கே பார்த்த வீடு.] அந்தக் கூடத்திற்குத் தென் புறத்திலே ஒரு முற்றம், இது முன் பகுதி. பின் பகுதியிலே சில அறைகள். ஒரு முற்றம். மேல் மெத்தை. அதில் இரண்டறைகள். இவ்விரண்டு பகுதிகளுக்குப் பொதுவாகத் தென் பாரிசத்திலே கொல்லைப்புறத்தில் ஒரு கிணறும் தண்ணீர்க் குழாயும் உண்டு. பின் பகுதியில் நான், என் சிறிய தாயார், மனைவி, மைத்துனிப் பெண், தம்பி, எனது குழந்தை ஆகிய அறுவரும் வசிப்பது. முன் பகுதியில் ஒரு ராயர் பெரிய குடும்பத்தோடிருந்தார். அவருக்குப் பகல் முழுவதும் உழைத்துக்கொண்டிருக்கும் படியாகத் தபால் கச்சேரியிலோ, எங்கேயோ ஓர் உத்தியோகம். உடம்பிலே கோபி மண் முத்திரைகள் எத்தனையோ, அத்தனை குழந்தைகள். அவர் மனைவி மறுபடியும் கர்ப்பம். அந்த முற்றத்திலேயே ஒரு பசுமாடு. இத்துடன் ஒட்டுக் குடியாக அவருடைய பந்துக்கள் சிலர் வசித்தார்கள்.

நான் இருந்த பகுதியிலேனும் மேன்மாடமென்று ஒன்றிருந்தபடியால் கொஞ்சம் காற்று வரும். ராயர் கூட்டத்தாருக்கு அதுகூடக் கிடையாது. இரவிலே கொசுக்களின் தொல்லை பொறுக்க முடியாது. எனக்குத் தூக்கமே வராது. ராயருக்குக் காச நோயாதலால் அவர் இருமிக்கொண்டேயிருக்கிற சப்தம் ஓயாமல் கேட்கும். அவருடைய குழந்தைகள் ஒன்று மாற்றி மற்றொன்று அழுதுகொண்டே யிருக்கும். கர்ப்பிணியாகிய அவர் மனைவி இடையிடையே விழித்துக் குழந்தைகளையோ, கடவுளையோ அல்லது ராயரைத்தானோ, யாரையோ

கன்னட பாஷையிலே திட்டிவிட்டு மறுபடியும் உறங்கி விடுவாள்.

ராயர் வீட்டு விஷயங்கள் இவ்வாறிருக்க, நமது வீட்டுச் சம்பிரமங்கள் இதைக் காட்டிலும் விசேஷம்.

கதையை இடையிலேயே விட்டுவிட்டேனே. வீர ராகவ முதலி தெருவிலிருந்து வீட்டிற்கு வந்தேனா? வரும் வழியிலே "ஜட்கா" வண்டிகள், "துரை"கள் போகும் "கோச்சு"கள், புழுதி, இரைச்சல், துர்நாற்றம் இவற்றை யெல்லாம் கடந்து, முன் பகுதியிலே பசு மாடு, ராயர் வீட்டம்மாள், குழந்தைக் கூட்டங்கள் முதலிய விபத்துக்களுக்கெல்லாம் தப்பிப் பின்புறத்திலே "மெத்தை"க்கு வந்து சேர்ந்தேன். அங்கே எனது படுக்கை, படிப்பு, எழுத்து, பகலில் சினேகிதர்கள் வந்தால் அவர்களுடன் சல்லாபம் முதலிய நாலாயிர விஷயங்களுக்கு உபயோகப்படுத்தப்பட்ட அறையின் வெளிப் புறத்தில் வந்து உட்கார்ந்துகொண்டு என் மனைவியைக் கூப்பிட்டேன். அவள் வந்து ஏனென்றாள். "தலைநோவு பொறுக்க முடியவில்லை. கொஞ்சம் மிளகு அரைத்துக் கொண்டு வா" என்றேன். "ஆமாம்; இரண்டு நாளைக் கொரு முறை இதொரு பொய்த் தலைவலி வந்துவிடும், என்னை வேலை யேவுகிறதற்காக. அதெல்லாம் சரிதான். பால்காரி வந்து மத்தியானம் பணம் கேட்டுவிட்டுப் போனாள். ராயர் வீட்டம்மாள் குடிக்கூலிக்கு ஞாபகப் படுத்தச் சொன்னாள். ராயர் நேற்றே சொன்னாராம். இந்த மாதம் குழந்தைக்குக் காப்புவாங்க ரூபாய் தரு வதாகச் சொல்லி யிருந்தீர்கள். என்னைத் தான் ஏமாற்று கிறது வழக்கமாகவே போய்விட்டது. இன்னும், அது இது" என்று ஆயிரங் கணக்குச் சொன்னாள். அன்று

மாலை அவள் சொல்லிய கணக்குகளை எல்லாம் தீர்க்க வேண்டுமானால் குறைந்த பட்சப் மூன்று லட்சம் ரூபாய் வேண்டுமென்று என் புத்திக்குப் புலப்பட்டது. கடைசியாக, "தெருவிலே போகிற நாய்களுக்கெல்லாம் பணத்தை வாரி யிறைக்கிறது! வீட்டுச் செலவைப்பற்றிக் கேட்டால் முகத்தைச் சுளிக்கிறது! இப்படிச் செய்து கொண்டே வந்தால், அப்புறம் என்ன கிடைக்கும்? மண் தான் கிடைக்கும்" என்று ஆசீர்வாதம் பண்ணிப் பிரசங்கத்தை முடித்தாள்.

"தலைநோவு தீர்ந்து போய்விட்டது. நீ தயவு செய்து கீழே போகலாம்" என்று வணக்கத்துடன் தெரியப்படுத்திக்கொண்டேன்.

"ஆமாம்! ஊர்க்காரர் கூட வெல்லாம் ஓயாமல் பேசித் தொண்டைத் தண்ணீரை வற்றவைத்துக்கொண்டிருக்கலாம். நான் ஒரு வார்த்தை பேச வந்தால் உடனே கோபம் வந்துவிடும்" என்றாள். அவள் மனத்தில் என்னைச் சமாதானப்படுத்துவதாக ஞாபகம். (அப்பால் பல தினங்கள் கழிந்த பின்புதான் நான் தர்பலோக யாத்திரை செய்வதாகத் தீர்மானம் செய்து வைத்திருந்தேன். இடையே நிகழ்ந்த சிற்சில சம்பவங்களும், காலதேச வர்ணனைகளுமே இங்கே எழுதப்படும்.) மண்ணுலகம் மிகப் பெரிது. அதில் என் அநுபவ முழுவதையும் எழுதவேண்டுமானால் மகாபாரதத்தைப்போலப் பதினெட்டு மடங்கு புத்தகமாகும்.

இங்கு ஓரிரண்டு "மாதிரி ஸீன்"களே குறிப்பிடப்படும்.

20-ம் தேதி:—குழந்தைக்குக் காய்ச்சல். மனைவிக்குக் குக் காது வலி. எனக்குப் பித்தக் கிறுகிறுப்பு.

21-ம் தேதி:—தம்பிக்குப் பாடசாலைச் சம்பளம் கொடுக்கவேண்டிய கடைசி நாள். காரியஸ்தலத்தி லிருந்து பணம் கொண்டுவந்து வைக்க மறந்துவிட்டேன். அவன் அதுபற்றிப் பாடசாலைக்குப் போவதையே நிறுத்தி விட்டான். நான் சுதேசிய விஷயத்தில் ஊக்கத்துடன் பாடுபடுவதன்பொருட்டாக, என்னை எப்போதும் கவ னித்து வரும்படியாக இராஜாங்கத்தாரால் அனுப்பப் பட்ட ஒற்றர்கள் எனது தம்பியிடம் செய்த சம்பாஷணை யில் "உம்முடைய அண்ணனது சிநேகிதரான இன்னாரை இராஜாங்கத்தார் பிடிக்கப்போகிறார்கள்" என்ற மங்கள சமாசாரம் சொல்லிவிட்டுப் போனதாகத் தம்பி வந்து சொன்னான்.

22-ம் தேதி.—மனைவிக்கும் சிறிய தாயாருக்கும் மனஸ் தாபம் வந்துவிட்டது. ஒருவரையொருவர் மாற்றி என் னிடம் பிழைகூறத் தலைபட்டார்கள். என் ஜீவ தர்மமாகிய "சுதேசியம்" தப்பு முயற்சி என்றும், வீணென்றும், அதில் நான் தலையிட்டதிலிருந்து குடும்பத்துக்குப் பற்பல கேடுக ளுண்டாகு மென்றும் சிறு தாயார் சன்மார்க்க போதனை செய்தாள். என் மூக்கில் அடிக்கடி ஒருவித ஊறுதல் உண் டாவது போலத் தோன்றிற்று. அது ஒரு பொல்லாத நோயா யிருக்குமோ வென்ற மூடத்தனமான கவலைகொண் டேன். அக் கவலையிலிருந்து மனதை அடிக்கடி திருப்பி யும், மனம் மீட்டும் மீட்டும் அதில் போய் விழுந்தது.

23-ம் தேதி.—வெற்றிலையில் சுண்ணாம்பு அதிகமாகச் சேர்ந்துவிட்டபடியால், வாயெல்லாம் புண்ணாய்ப் போய்

விட்டது. வாய்க்குள் ஜலம் விடுவதற்குக் கூடத் தகுதியில்லை. எனக்குச் சாதாரணமாகவே உழைப்பு அதிகமாதலால், அத்துடன் சோறும் விழுங்க முடியாமற்போகவே, சோர்வும், முகக் கடுகடுப்பும் அதிகப்பட்டன. இத்யாதி …………இத்யாதி.

இன்னும் எத்தனையோ காட்சிகள் மண்ணுலகத்திலிருந்து எடுத்துக்காட்டவேண்டுமென்ற விருப்பம் எனக்கிருந்தது. ஆனால் "பயனற்ற" இவ்வுலகத்தைப்பற்றி அதிகமாக விஸ்தரிப்பது பயனுடைய காரியமாகாதென்பது கருதி இத்துடன் நிறுத்திவிடுகிறேன்.

### பயிற்சி

[தினசரி வாழ்க்கையை, உள்ளபடி இப்பாடம் சித்திரிக்கிறது. நடையும் அதற்கேற்றவாறே எளிதாக அமைந்திருக்கிறது]

i. **விளக்கஉரை:**—'சம்பிரமங்கள்', 'ஆசிர்வாதம்', 'சன்மார்க்க போதனை', 'மங்கள சமாசாரம்'—சந்தர்ப்பம் பற்றி இவைகளின் வஞ்சகப் புகழ்ச்சி நயம் ஓர்க. 'நாலாயிர விஷயங்களுக்கு', 'மூன்று லட்சம் ரூபாய்' 'மகாபாரதத்தைப்போல்'—சிறியதைப் பெரியதாக்கும் நயம் அறிக.

ii. **இலக்கணம்:**—'அன்று' என்னும் சொல்லைக் கவனி. அ, ன், று என மூன்று எழுத்துக்கள் சேர்ந்து இந்தச் சொல் ஆகிறது.

1. ஓர் எழுத்தை உச்சரிக்கும்போது காதினால் கேட்கப்படுகின்ற ஓசையே ஒலிவடிவாகும். கண்ணுக்குப் புலப்படும்படி அதன் அறிகுறியாக எழுதப்படுவது வரிவடிவாகும். ஆதலால் எழுத்திற்கு ஒலி வடிவு, வரிவடிவு என இரண்டு வடிவங்கள் உண்டு.

2. **அ**—இந்த எழுத்தைத் தனித்து உச்சரிக்கலாம். இது **உயிர் எழுத்து** எனப்படும். **ன்**—இவ் வெழுத்தைத் தனித்து உச்சரிக்க முடியாது. இது **மெய் எழுத்து** எனப்படும். று (ற்+உ)—'ற்' என்னும் மெய்யெழுத்தோடு 'உ' என்னும் உயிர் எழுத்துச் சேருவதால் **உயிர் மெய் எழுத்து** ஆகிறது. எஃகு—இதில் ஃ **ஆய்த எழுத்து** எனப்படும். ஆகவே தமிழ் மொழியில் பின்வரும் நால்வகை எழுத்துக்கள் உண்டு.

அ ஆ இ ஈ உ ஊ எ ஏ ஐ ஒ ஓ ஔ என உயிரெழுத்துக்கள் 12.

க் ங் ச் ஞ் ட் ண் த் ந் ப் ம் ய் ர் ல் வ் ழ் ள் ற் ன் என மெய்யெழுத்துக்கள் 18.

க் என்னும் மெய்யெழுத்துடன் உயிர் எழுத்துக்கள் சேர **க கா கி கீ கு கூ கெ கே கை கொ கோ கௌ என உயிர் மெய் யெழுத்துக்கள்** ஆகின்றன. இதே விதம் 18 மெய் யெழுத்துக்களிலும் 12 உயிரெழுத்துக்களும் சேருவதாலாகும் உயிர்மெய் யெழுத்துக்கள் 12×18=216. **ஆய்த எழுத்து** 1. ஆகத் தமிழ் மொழியிலுள்ள மொத்த எழுத்துக்கள் 247.

**பயிற்சி**:—1. உயிர்மெய்யாகச் சேர்த்து எழுது:
2-ம். ட்+ஐ=டை.

| | | | |
|---|---|---|---|
| ப்+ஔ= . | ம்+ஈ= . | ழ்+உ= . | ற்+ஒ= |
| க்+ஊ= . | ல்+ஐ= . | ச்+எ= . | த்+ஊ= |

2. உயிர், மெய் பிரித்தெழுதுக: 2-ம் போ=ப்+ஓ.
மை, ஞே, ழீ, து, னே. ளு, வு, ரி.

iii. **கட்டுரை**:—தினசரிக் குறிப்பு வைக்கும் முறையை இப்பாடத்திலிருந்து அறிந்துகொள். ஒரு வாரத்திற்குத் தேதி யிட்டு உன் வாழ்க்கையின் தினசரிக் குறிப்புக்கள் எழுது.

iv. **பிற நூல் ஆராய்ச்சி**:—இப்பாடம் ஞானரதம் என்னும் நூலிலிருந்து எடுக்கப்பட்டிருக்கிறது. பாடசாலைப் புத்தகாலயத்திலிருந்து முழு நூலை வாங்கிப் படி.

# 6. கண்ணன் திருவிளையாடல்

1. நோக்கி யசோதை நுணுக்கிய மஞ்சளால்,
நாக்கு வழித்து நீராட்டும் இந் நம்பிக்கு
வாக்கும் நயனமும் வாயும் முறுவலும்,
மூக்கும் இருந்தவா காணீரே,
மொய்குழலீர், வந்து காணீரே!

— பெரியாழ்வார் திருமொழி

பயிற்சி

1. இச் செய்யுளில் காணும் சொற்சித்திரப்படி கண்ணனின் உருவத்தை, கண்ணை மூடிக்கொண்டு மனத்தில் சிந்தி.

2. பொருள் விளங்காத சொற்களை எடுத்தெழுது.

3. நம்பி, யசோதை, குழலீர்—இவர்கள் யார்?

II. தந்தம் உறியில் அவர் வைத்த
தயிர் பால் வெண்ணெய் எட்டாமல்
குந்தி உரலின் மிசையேறி,
இளங்கோ வியர்முன் கூத்தாடி,
நந்தன் மனையில் யசோதை இரு
நயனம் களிக்க விளையாடும்,
மைந்தன் இருதாள் ஒரு நாளும்
மறவா தாரே பிறவாதார்.

— வில்லி பாரதம்.

பயிற்சி

1. இச்செய்யுள் விவரிக்கும் கண்ணன் செயலை மனத்தில் உருவப்படுத்து.

2. 'அவர்'—எவர்?

3. கண்ணன் கழலிணை எவ்விதம் நற்றுணையாகும்?

4. மேற்கண்ட இரு செய்யுட்களையும் சிறு வாக்கியங்களில் வசனமாக மாற்றி எழுது.

# 7. தானைத் தலைவன்

[திரு. கா. சுப்பிரமணிய பிள்ளை]

**விடை கண்டுபிடி :**

1. இந்திரநாதன் எந்த ஊர்? என்ன குலம்?

2. இராஜா தோடர்மாலின் பிறப்பும், இளமைப் பருவமும் எந்தப் பாராவில் விவரிக்கப்படுகின்றன?

3. தோடர்மாலை அபுல் பஜல் என்ன பெயரால் பரிகாசஞ் செய்வதுண்டு? ஏன்?

4. இந்திரநாதனது தீரத்தன்மை எந்த வாக்கியத்தால் புலப்படுகிறது?

கங்கா நதி தீரத்திற்கு மிக்க வனப்பை யளிக்கும் முங்கேரியின் உன்னதமான கோட்டையின் நடுவண் ஒரு பெரிய வீதியில் ஓர் அழகிய மாளிகை யிருந்தது. அதன் உப்பரிகையின்கண் மேட்டிமை தங்கிய வீர புருடரொருவர் ஒரு பெரிய தவசின்மீது வீற்றிருந்தனர். இராஜா தோடர்மால் என்பவர் இவர்தான்.

அம் மாளிகையின் வெளி வாயிலிற் குதிரை வீரனொருவன் தன் வருகையை இராஜா தோடர்மாலுக்குத் தெரிவிக்கும்படி காவலாளனுக்குத் தெரிவித்துச் சற்றே உலாவிக்கொண்டிருந்தான். இவன் யாவன்? நமது இந்திரநாதனே.

இதுபோழ்து தோடர்மாலைச் சுற்றிலும் பரிசனங்கள் எவரும் அருகிலிருக்கவில்லை. நம்பிக்கையுள்ள இராஜ தந்திரிகள் சிலரோடு யுத்தவிஷயமான மந்திராலோசனை செய்து கொண்டிருந்தனர். அத்தருணம் ஒரு சிப்பாய் வந்து பணி

வுடன் வணங்கி, "மகராஜ்! குதிரை வீரனெருவன் தங்களைக் காணும் அவாவுடன் உத்தரவை யெதிர்பார்த்து வாயிலில் நிற்கின்ருன்" என்று தெரிவித்தான்.

தோடர்மால்:—அவனது வருகை யெது பற்றியது? வினவி வா.

சிப்பாய்:—வினவினேன் அரசே! 'தான் தெரிவிப்பதைச் சமுகத்திற்ருன் தெரிவித்துக்கொள்ள முடியு'மென்கின்றனன்.

தோடர்மால்:—அவன் இந்துவோ, மகமதியனே?

சிப்பாய்:—ஒரு காயஸ்த ஜமீன்தாரின் மகனும்.

இராஜா தோடர்மால் சற்று மௌனமாயிருந்து, 'வங்க தேசத்திலே சூரரும் பராக்கிரமசாலிகளுமான பல காயஸ்த ஜமீன்தார்களிடத்து மொத்தம் எண்ணுயிரம் படைஞர் இருப்பதாகக் கேள்வியுறுகிறேன். இவர்களின் உதவி நமக்கு அத்தியாவசியந்தான்' என்று தமக்குள் சொல்லிக்கொண்டு அந்தச் சிப்பாயை நோக்கி, "நல்லது, போய் அவனை வரச் சொல்" என்றனர். உத்தரவைச் சிரமேற்கொண்டு சிப்பாய் சென்ருன்.

க்ஷத்திரிய குலதிலகரான இராஜா தோடர்மாலைப் போலப் பன் மாண் குணங்கள் வாய்ந்த மகான்கள் இப் பரந்த உலகில் அடிக்கடி அவதரித்திருப்பது அருமையே. அவர்கள் ஒவ்வொரு தன்மையாற் சிறந்தவராயிருப்பர். இவரோ அறம், வீரம், நீதி என்ற இம்முக் குணங்களும் ஒருங்கே திரண்டு ஒருரு வெய்தியவர்.

இராஜா தோடர்மால் லாகூரிற் பிறந்தவர். இளமையிலேயே தந்தை இறந்துவிட்டதனால், இவர் வறுமையின் வாய்ப்பட்டனரெனினும், இவரது அன்னையார் அருமையுடன் இவரை வளர்த்து வந்தனர். இவர் சிறு வயதிலேயே தமது புத்தி நுட்பத்தால் சகல ஜனங்களும் விரும்புமாறு நடந்துகொண்டார். இவர் முதலில் ஒரு சாதாரணமான எழுத்தாளர் (குமாஸ்தா) வேலையிலமர்ந்தார்.



இந்திரநாதன்

கடைசியாகத் தமது நிகரற்ற அறிவின் வன்மையால் பல மேதாவிகள் அடங்கிய இராஜ சபையில் முதலிடத்தை வகிக்கலானார்.

இவர் இந்நாட்டுச் சமயக் கொள்கைகளில் உறுதியான பற்று வாய்ந்தவர். அபுல் பஜல் முதலிய அக்பருடைய

மகமதிய அமைச்சர்கள் தோடர்மாலை 'மதப் பித்தன்' என் றும் பரிகாசம் செய்வதுண்டு. சுய மதத்தில் நிகரற்ற அன்பு பாராட்டும் இவர்மீது உதார குணவானுகிய அக்பர் பாதுஷா எப்போதும் ஆதரவுடனேயே இருந்தார். இவ ருடைய கீர்த்தி முழக்கம் பரதகண்டம் முழுவதும் பரவி யிருந்தது.

பாரதநாடு முழுவதிலுமுள்ள கொள்ளைக்காரர்களையும், இராஜத் துரோகிகளையும் ஒழித்து எங்கும் அமைதி யுண் டாக்கும் பொறுப்பை அக்பர் பாதுஷா இராஜா தோடர் மாலின் மீது சுமத்தினர். அதனுல் இவர் மூன்று முறை வங்க தேசத்தின் மேல் படையெடுத்துச் சென்றனர். அம் மும் முறையிலும் தமது வீரத்தையும் ஒப்புயர்வற்ற போர்த் திறனையும் வெளிப்படுத்தினர். முதல் தடவை மனுயீம் கானுடைய விருப்பின்படியும், இரண்டாம் முறை ஹுசேன் குலிகானுடைய வேண்டுகோளின்பேரிலும் அவர் வந்திருந்தார். அந்த இரு முறைகளிலும் தமது திற மையினுலேயே அவர் வாகை சூடினுர். மூன்றுவது முறை அவர் இப்போது வங்காள நாட்டின் சுபேதாராக முங் கேரிக்கு வந்திருக்கின்றுர்.

சேனையாள் புதிய வாலிபனை யழைத்து வந்ததும் இராஜா தோடர்மால் "உன் பெயர் யாது?" என்று வினவ, வந்தவன் 'இந்திரநாத் சௌத்ரி' எனப் பணிவுடன் பதி லளித்தான்.

**தோடர்மால்:**—வாசஸ்தானம்?

**வந்தவன்:**—நதியா ஜில்லாவில் இச்சாபுரம், மகராஜ்!

**தோடர்மால்:**—உனக்குள்ள சேனைகளின் அளவை யாது?

**வந்தவன்:**— நாலாயிரங் காலாட் படை என் தந்தையின் வசமிருக்கிறது.

**தோடர்மால்:**—இங்குத் தனிமையாக வந்த காரணம்?

**வந்தவன்:**—பாதுஷாவின் சேவை புரிய.

இராஜா தோடர்மால் சிறிது சினந்து, அந்த யுவனை ஒரு விநாடி கடூர நோக்குடன் பார்த்தனர். ஆனல் இளைஞனுடைய முகத்தில் உதார குணத்தைத் தவிர வேறு தீய இயல்பொன்றும் புலப்படவில்லை. பின்பு அவர் மறுபடியும் "பாதுஷாவின் படைக்கு உன் பிதா ஏதேனும் உதவி செய்ய முடியுமா?" என்று உசாவினர்.

"உத்தரவானல் அவர் முழுச் சேனையையும் அனுப்பச் சித்தம். தற்போது இந்தச் சேவகனை இராணுவத்தில் அமர உத்தரவு அருளவேண்டும்" என்றியம்பிச் சரேலென்று தன் உடைவாளை உறையினின்றும் உருவி, வீரர்க்குரிய முறைப்படி இராஜா தோடர்மாலுக்குச் சலாம் செய்து மீண்டும் அதை உறையிலிட்டனன் இந்திரநாதன்.

ஸாதிக்கான் என்னும் வீரன், "இளைஞனே! நீ வாளைப் பிடிக்கும் விதத்தைப் பார்த்தால் யுத்தத்தில் உனக்கு அபஜெப மேற்படாதென்று தோன்றுகிறது" எனப் பாராட்டினன்.

தாரஸ்கான் என்னும் மற்றொரு சர்தார் இராஜா தோடர்மாலின் செவியில், "மகாராஜ்! இவன் பகைஞருடைய ஒற்றன்; இவனை யுடனே மாய்த்துவிடுங்கள்" என்று மெல்லென ஓதினன்.

இராஜா தோடர்மால் ஒன்றும் பேசவில்லை. அந்த யுவனை இமை கொட்டாமற் கூர்மையான பார்வையுடன்

பார்த்துக்கொண்டிருந்தார். வாலிபனுடைய உருவத்தி லும் நடையுடை பாவனையிலும் அவருக்கு யாதொரு விப ரீத இயல்பும் காணப்படவில்லை. அவர் மறுபடியுமவனைப் பார்த்து, "தனிமையாக வந்து சேனையில் அமரும் நோக்கம் யாது?" என்று வினவினர்.

இந்திரநாதன் :— மகராஜ்! நான் கற்ற போர்க் கலைகளனைத்தையும் மறவாமல் விருத்திபண்ணும் பொருட்டே.

இராஜா தோடர்மால்:—எங்கள் சேனையில் கலகமூட் டும்பொருட்டு மாற்றார் அடிக்கடி இரகசிய ஒற்றர்களை யனுப்புகிறார்கள். உன்னை எவ்வாறு நம்புவது?

இந்திரநாதன்:....(ஆவேசத்துடன்) காயஸ்த ஜமீன் தார் குலத்தில் எத்தகைய அவநம்பிக்கையும் வைக்க இட மில்லையே?

இராஜா தோடர்மால், "பல தடவைகளில் துஷ்டர் களும் மகா யோக்கியரைப்போல வேடந் தரித்து மோசம் பண்ண வருகின்றனர்; உயர்குடிப் பிறப்பினரும் சில தரு ணங்களில் நம்பிக்கைத் துரோகஞ் செய்துவிடுகின்றனர். எத்தகைய போலியாட்களையும் அவரவர் முகத்திலும், கடைக்கண்ணிலும், தோற்றத்திலும் எளிதில் கண்டறியக் கூடும். இதில் எனக்கு நீண்ட அனுபவமுண்டு இவன் யோக்கியனே," என்று சர்தார்களுக்குச் சொல்லி கௌர வப்படுத்தி இந்திரநாதனை ஆயிரம் படைஞ ரடங்கிய ஒரு சேனைக்குத் தலைவனாக்கினர்.

## பயிற்சி

[வங்காள அறிஞர் ராமேச சந்திர தத்தர் 'வங்க விஜய' மென்னும் நவீனத்தை வங்காள மொழியில் எழுதியுள்ளார். அதன் வழி நூலாகிய 'தோடர்மால்' எனும் சரித்திர நவீனத்தி லிருந்து இப் பகுதி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.]

i. **சொல் விளக்கம்** :—உப்பரிகை = மேன் மாடி. மேட்டிமை = மேன்மை. தவிசு = ஆசனம். மந்திராலோசனை = மந்திரிகளுடன் கலந்து ஆலோசனை செய்வது. தானை = சேனை. திலகர் = நெற்றிப்பொட்டுப் போன்றவர். பன்மாண் குணங்கள் = பல சிறப்பான குணங்கள். ஒற்றர் = இரகசிய வேவுகாரர்.

'புருஷர்' என்னும் வடமொழிச் சொல் தமிழில் 'புருடர்' என்று வரும். நிமிஷம் = நிமிடம். வருஷம் = வருடம். விஷயம் = விடயம். விஷம் = விடம்.

ii. **இலக்கணம்** :—

1. அன்பும் ஆதரவும்—அ ஆ இவை ஒவ்வொன்றையும் உச்சரி. அ குறுகிய ஓசையுள்ளதால் அது **குற்றெழுத்து** எனப்படும். ஆ நீண்ட ஓசையுள்ளதால் **நெட்டெழுத்து** எனப்படும்.

அ, இ, உ, எ, ஒ—இந்த ஐந்தும் குற்றெழுத்துக்கள்.

ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ இந்த ஏழும் நெட்டெழுத்துக்கள்.

உயிர்மெய் யெழுத்துக்களிலும் குற்றெழுத்துக்கள், நெட்டெழுத்துக்கள் இருப்பதைத் கவனி. (உ-ம்.) க, கா.

2. அக்பர், அமைச்சர், நுட்பம், உத்தரவில், பன்மாண் குணங்கள்—இவைகளில் பின்வரும் எழுத்துக்களை உச்சரித்துப் பார்.

**க், ச், ட், த், ப், ற்—இந்த ஆறும் வலிய ஓசையுடையன. வல்லெழுத்து அல்லது வல்லினம் எனப்படும்.**

ங், ஞ், ண், ந், ம், ன்—இந்த ஆறும் மெல்லிய ஓசையுடையன; மெல்லெழுத்து அல்லது மெல்லினம் எனப்படும்.

ய், ர், ல், வ், ழ், ள்—இந்த ஆறும் நடுத்தரமான ஓசையுடையன; இடையெழுத்து அல்லது இடையினம் எனப்படும். வல்லினம், மெல்லினம், இடையினம் என மெய்யெழுத்துக்கள் மூன்று வகைப்படும்.

ர, ற :—ர, இடையின எழுத்து : ற, வல்லின எழுத்து.

ற் வரும்போது வார்த்தையில் எழுத்துக்கள் இரட்டிப்பதில்லை. விற்கிறன் (விற்க்கிறன்—இது தப்பு.)

பின் வரும் எழுத்துக்களைக் குறில் நெடில்களாகப் பிரித்து எழுதுக :—இ, ஐ, ஓ, எ, ஔ, ஞே, நீ, சி, கீ, ரௌ, லை, பே, பூ த, வா, று, ஒ, கெ.

பின் வரும் எழுத்துக்களை வல்லினம், மெல்லினம், இடையினம் என மூன்று வரிசையில் பிரித்து எழுதுக :—

ச், ஞ், ர், ண், வ், ன், ள், ப், ய், ணீ, கு, ழே, நி, ளோ, ரு.

iii. பிற நூல் ஆராய்ச்சி :—'தோடர்மால்' என்னும் முழு நூலைப் புத்தகாலயத்திலிருந்து வாங்கிப் படி.

# 8. பயிற்சிப் பாடம் II

1. சொற்களைச் சுலபமாகப் பொறுக்கி யெடுக்க எப்படி எழுதுவது? அ, ஆ, இ, ஈ..........................என்று எழுத்துக்களின் வரிசை தெரியுமல்லவா? அ எழுத்து ஆரம்பிக்கும் சொற்களை முதலில் ஒன்றின் கீழ் ஒன்ருக எழுதி, பிறகு ஆ ஆரம்பிக்கும் சொற்களையும், முறையே இ.... முதலிய எழுத்துக்கள் ஆரம்பிக்கும் சொற்களையும் வரிசைப்படுத்தி எழுதினல் வார்த்தைகளைச் சுலபமாகப்

பொறுக்கி அறியலாம். இதற்கு அகர வரிசையில் எழுதுவது என்று பெயர்.

இப் பதங்களை அகர வரிசிசையில் மாற்றி ஒன்றன் கீழ் ஒன்றாக எழுது:—

உச்சம், களஞ்சியம், அட்டவணை, சரீரம், இமை, ஏற்றம், ஆச்சரியம், ஓடம், வாணி, ஐக்கியம், தரித்திரம், ஈட்டி, மாளிகை, ஒய்யாரம், ஊக்கம், நகம், பத்திரிகை, யசமானன், ஞாயிறு, லக்கம், எஃகு, வஞ்சகம், ஔடதம்.

2. தமிழ் அகராதி என்னும் புத்தகத்தை வாங்கிப் பார். அதில் சொற்களின் வரிசையைக் கவனி. பொருள் தெரியாத ஒரு புது வார்த்தையின் அர்த்தம் என்னவென்று பார்க்க அகராதியை உபயோகிக்கப் பழக்கஞ் செய்து கொள். அகராதியின் மாதிரிப் பக்கம் ஒன்று இங்கே கொடுக்கப்பட்டுள்ளது. வரிசையின் முதல் பதமும் கடைசிப் பதமும் மேலே கொடுக்கப்பட்டிருப்பதன் பயன் யாது?

மறு பக்கம் காணும் அகராதி ஏட்டில் பின்வரும் சொற்களின் பொருளைக் கண்டுபிடித்து எழுது (10 நிமிஷத்துக்குள்).

புராதன, ஒருமிக்க, விளம்பரம், அறிகுறி, நிபுணர், ஈடு, மாண்பு, கன்னல், திகைத்து: நவின்று, விந்தை, ஏகு, உள்ளம், கானம், மணம், பன்னரும், விண், பொலிந்த, பிரவாகம், கதி.

அஞ்சு = பயப்படு
அணி = வரிசை
அதிர்ஷ்டம் = பாக்கியம்
அபூர்வமான = அதிசயமான
அளி = கொடு
அறிகுறி = அடையாளம்
ஆச்சரியம் = அதிசயம்
ஆண்டு = வருஷம்
ஆதரி = காப்பாற்று
ஈடு = சமானம்
உபகாரம் = உதவி
உள்ளம் = மனது
உறுதி = பலம்
எளிதாக = சுலபமாக
ஏகு = செல், போ
ஒருமிக்க = ஒன்றுசேர
ஒளி = பிரகாசம்
கதி = நிலைமை
கதிரவன் = சூரியன்
கவரும் = இழுக்கும்
கன்னல் = கரும்பு
கானம் = இசை
சஞ்சாரம் = நடமாட்டம்
சடுதியில் = சீக்கிரத்தில்
சினேகிதன் = தோழன்
சேதம் = நாசம்
திகைத்து = தவித்து
தினுசு = மாதிரி
தொலைவு = தூரம்
தோழன் = நண்பன்
நட்பு = சிநேகம்
நண்பன் = சிநேகன்
நவின்று = சொல்லி
நவீன = புதிய
நிகழ்ந்தது = நேரிட்டது
நிபுணர் = சமர்த்தர்
நூற்றாண்டு = நூறு வருஷம்
பரிவாரம் = இனம்
பன்னரும் = சொல்லமுடியாத
பிரவாகம் = வெள்ளப்பெருக்கு
புசி = சாப்பிடு
புராதன = பழைய
பொலிந்த = விளங்கிய
பொருமை = அசூயை
போற்றி = புகழ்ந்து
மணம் = வாசனை
மாண்பு = பெருமை
மித்திரன் = தோழன்
முயற்சி = பிரயாசை
மெச்சுதல் - புகழ்ந்துபேசுதல்
மொழி = சொல், பாஷை
வஞ்சகம் = சூது
வலிமை = பலம்
விசித்திரம் = அதிசயம்
விண் = வானம்
விந்தை = ஆச்சரியம்
விருப்பம் = ஆசை
விரைவில் = சடுதியில்
விளம்பரம் = அறிவிப்பு
விநோதம் = விசித்திரம்

# 9. பள்ளுப் பாட்டு



1. பள்ளன் ஏர் உழுதது, எருவிட்டது, தண்ணீர் கட்டியது, வேலி நட்டது,—இவை ஒவ்வொன்றும் முறையே எந்தச் செய்யுட்களில் கூறப்படுகிறது ?

2. 'பள்ளர் வாழ்வு இன்ப முடைத்து' என்பது எந்த வரிகளால் அறியப்படுகிறது ?

3. தொழுது தெய்வக் கடன் கழித்தான் (விதை முகூர்த்தஞ் செய்தான்). ஏன் ?

1. பள்ளன் எழுந்து நிலைதரித்தான் நின்ற
பள்ளியர்கள் முகம் பார்த்துச் சிரித்தான்.
மெள்ளப் புருவம் கோட்டி நெரித்தான்
மாட்டை
மீண்டும் பூட்டி உழத் தரித்தான்.

2. உழுத உழவைக் கண்டு களித்தான் பள்ளர்
உள்ள பேரை யெல்லாம் விளித்தான்
தொழுது தெய்வக் கடன் கழித்தான் அந்தத்
தொழியில் விதைகள் எல்லாம் தெளித்தான்.

3. முளைத்தமுளைக்குத் தண்ணீர் அடைத்தான்
[கொல்லை
முழுவதும் மறுநாள் வெட்டி விடுத்தான்
வளைத்து வேலிசூழ நட்டான் நாற்று
வளர நாளும் எரு விட்டான்.

4. வளர்ந்த நாற்று முகம் கண்டான் சேரி
மள்ளர் கூட மது உண்டான்
அளந்திடா மகிழ்ச்சி கொண்டான் பண்ணை
ஆண்டவற்குச் செய்தி விண்டான்.

பயிற்சி

[இது 'முக்கூடற் பள்ளு' என்னும் நூலிலிருந்து எடுக்கப்பட்ட ஒரு நாட்டுப் பாட்டு. 'பள்ளு' என்பது பயிர்த்தொழில் செய்யும் உழுவர் (பள்ளர்), உழத்தியர் (பள்ளியர்) வாழ்க்கையைக் கவிதைச் சுவையுடன் வர்ணிக்கும் நூல். திருநெல்வேலி ஜில்லாவிலுள்ள தாமிரவருணி யாறு, சித்திரா நதி, செண்பகக் கோதை ஆறு இம்மூன்றும் கலந்து ஒன்றுகூடுமிடத்தில் அமர்ந்த சிற்றூர் முக்கூடல் என்பது.]

i. பொருள் விளக்கம்:—தொழியில் = வயலில், பண்ணையாண்டவன் = நிலச் சொந்தக்காரர், பண்ணையார்.

ii. கட்டுரை:—படத்தில் உழுவன் என்ன செய்கிறான்? உழத்தி என்ன செய்கிறாள்? ஒவ்வொரு படத்தையும் விவரித்து இரண்டிரண்டு வாக்கியங்கள் எழுது.

iii. பிறநூல் ஆராய்ச்சி:—மேற்கண்ட பாட்டில் பள்ளர் செய்த தொழில்களை இக்குறளில் காண்க:

ஏரினும் நன்றால் எருவிடுதல், நட்டபின்
நீரினும் நன்றதன் காப்பு.

---

# 10. ஊசி செய்தல்

[திரு. S. சுவாமிநாதன், B.A., L.T.]

படித்து விடையறி:

1. ஊசியை முதன்முதல் எந்நாட்டினர் கண்டுபிடித்தனர்?
2. ஊசி செய்வதில் படிப்படியான ஆறு செயல்களையும் ஆறு சொற்றொடர்களால் சுருக்கிச் சொல்.
3. ஊசிகள் மலிவாக இருப்பதற்குக் காரணம் என்ன?

சந்திரன்:—அம்மா, அக்கா என்னை அடிக்கத் துரத்திக் கொண்டு ஓடி வருகிறாள்.

அன்னை:—என்ன கிரிஜா, குழந்தையை ஏன் துரத்துகிறாய்?

கிரிஜா:—இதோ பார், என் தாவணியை! அவன் என்னைப் பிடிக்க வரும்பொழுது நான் விரைவாக ஓடி ஒளியப் போனேன். அப்பொழுது ஆணியில் மாட்டிக்கொண்டு என் தாவணி கிழிந்துவிட்டது. என்னம்மா செய்கிறது?




அன்னை:—சரி, சரி. குழந்தையை விட்டுவிடு. இந்தா, ஊசியும் நூலும். உடனே அதைத் தை.

**கிரிஜா** :—எனக்குத் துணி தைக்கத் தெரியாதே! கூட இருந்து சொல்லிக்கொடுங்கள்.

**அன்னை** :—அங்குஸ்தானை வலது கை நடுவிரலில் மாட்டிக்கொண்டு ஊசியில் நூலைக் கோத்துக்கொள்.

**கிரிஜா** :—கோத்துவிட்டேன்.

**அன்னை** :—ஒட்டுத் துணியைக் கத்தரித்து, கிழிந்த இடத்தில் பரப்பிப் பிடித்து, நகராமலிருக்கக் குண்டூசிகளைக் குத்தி வை.

**கிரிஜா** :—அவ்விதமே செய்துளேன். தைப்பதைப் பாருங்கள்.

**சந்திரன்** :—அன்னையே! இந்த ஊசிகள் பளப்பளப்பாகவும் கூர்மையாகவும் இருக்கின்றனவே. அவைகளை எப்படிச் செய்கிறார்கள்?

**கிரிஜா**:—காசுக்கு நான்காக அவ்வளவு மலிவாகக் கிடைக்கின்றனவே!

**அன்னை** :—முற்காலத்தில் இரும்புக் கம்பிகளைக் கல்லில் தேய்த்துக் கூராக்கி, மிகுந்த பிரயாசையுடன் ஊசிகள் தயாரித்தனர். ஆதலால், விலையும் அதிகமாகவே இருந்தது. சீனர்களே முதன்முதல் ஊசியைச் செய்ததாகப் பெருமை பாராட்டிக்கொள்ளுகிறார்கள்.

**சந்திரன்** :—இந்த ஊசியெல்லாம் சீனாவிலிருந்தா வந்தவை?

**அன்னை** :—இல்லை, இல்லை. இங்கிலாந்திலுள்ள ரெட்டிச் என்னும் ஊரில் செய்யப்பட்டு வந்தவை.

**கிரிஜா** :—அங்கே கையினாலா செய்கிறார்கள்?

**அன்னை** :— அப்படியில்லை. ஊசி செய்யும் பெரிய தொழிற்சாலைகள் இருக்கின்றன. ஊசிப் பருமனுள்ள எஃகுக் கம்பிகளைச் சுருள்களாக வாங்கி, இரண்டு ஊசியளவு நீளமுள்ள துண்டுகளாக இயந்திரங்களினுதவியால் கத்தரிக்கிறார்கள். சிறிது வளைந்திருக்கும் இத்



துண்டுகளை நேராக நிமிர்த்தி, பதினாயிரக்கணக்கில் பெரிய உலைகளிலிட்டுப் பழுக்கக் காய்ச்சுகிறார்கள். பழுக்கப் பழுக்க இருக்கும் இக்கம்பித் துண்டுகள் இரும்பு மேசை மீது பரப்பப்பட்டு இரும்பு உருளைகளால் பன்முறை தேய்க்கப்படுகின்றன.

**சந்திரன்:**—கம்பிகளைப் பின்பு எவ்வாறு கூராக்குகின்றனர்?

**அன்னை** :—இயந்திரத்தினுதவியால் இரு நுனிகளையும் சாணைக் கல்லில் தேய்த்துக் கூராக்குகிறார்கள். இது ஆபத்தான வேலை. எஃகுப் பொடிகள் பறந்துவந்து வேலைசெய்வோரின் நாசித்துவாரங்களிலும், நுரையீரலிலும் சென்று உயிருக்கு ஆபத்தான நோய் விளைவிக்கும்.

**கிரிஜா** :—இந்தப் பேராபத்தைத் தடுக்க வழியில்லையா?

**அன்னை** :—உண்டு. இக்காலத்தில் அத்தூள்கள் தொழிலாளர் பக்கம் வராமல் மின்சார விசிறிகளால் ஒதுக்கிவிடுகிறார்கள். எல்லாத் துண்டுகளையும் மின்சாரச் சம்மட்டியால் அழுத்தி, ஒவ்வொரு துண்டின் நடுவிலும் காதுக்கான குழிவு அமைக்கிறார்கள்.

**சந்திரன்** :—இப்பொழுது நூல் கோக்க முடியுமா?

**அன்னை** :—அவசரப்படாதே. குழிவு விழுந்த இடத்தில் கூரிய துறப்பணத்தால் காதுத் துளைகள் இடப்படும். பின்னர், துளைகளிலுள்ள ஓரச் சிலும்புகளை அரத்தால் அராவிச் சுத்தஞ் செய்வார்கள்.

**கிரிஜா** :—இன்னும் ஏதாகிலும் செய்யவேண்டுமோ?

**அன்னை** :—இப்பொழுது கம்பிகள் மிருதுவாகவும் துவளக்கூடியனவாயு மிருக்கும். மறுமுறை பழுக்கக் காய்ச்சிக் குளிர்ந்த எண்ணெயில் தோய்ப்பதால் அவை உறுதியான பதம்பெறும்.

**சந்திரன் :**—இரட்டை ஊசிகளாக அல்லவா இருக்கும்?

**அன்னை :**—ஆமாம். இரட்டை ஊசிகளை மெருகு தேய்த்துத் தனி ஊசிகளாகத் துண்டித்து, எண்ணிப் பொட்டலங்களாகக் கட்டி விற்பனைக்குத் தயாராக இயந்திரங்களே செய்துவிடும்.

**கிரிஜா :**—இத்தனை வேலைகொள்ளும் ஊசி மலிவாயிருப்பது எப்படி ?

**அன்னை :**—இது நல்ல கேள்வி! இயந்திரங்களின் மூலம் ஒரே நாளில் லட்சக்கணக்கான ஊசிகள் செய்ய முடிவதால், காலணுவுக்கு இருபத்தைந்து ஊசிகள் கிடைக்கும்படி அவ்வளவு மலிவாக இருக்கின்றன.

**கிரிஜா :**—ஊசித் தொழிலின் வரலாற்றைக் கேட்டுக் கொண்டே செய்த தையல் வேலை சரியாக அமைந்திருக்கிறதா, பாருங்கள்.

**அன்னை :**—நிரம்பச் சரி.

### பயிற்சி

[ஒரு நவீனத் தொழிலைப்பற்றியது இப்பாடம். சம்பாஷணை முறையை அறிக.]

i. அடியிற்காணும் பொருள்களை வகைப்படுத்தி இக் கட்டங்களில் எழுது.

| தாவரப் பொருள் | தாதுப் பொருள் | பிராணிப் பொருள் |
|---|---|---|
| | | |

கர்ப்பூரம், கஸ்தூரி, வைரம், சர்க்கரை, தேன், ஊசி, சாணைக்கல், நிலக்கரி, பவளம், பெருங்காயம், எஃகு, சீரகம், சுவர்ணம், கம்பளி, மனோரஞ்சிதம், பட்டு.

ii. **இலக்கணம் :—**

அவன், இவன் :—'அவன்' சிறிது தொலைவிலுள்ளவனையும், 'இவன்' அருகிலுள்ளவனையும் குறிக்கிறதல்லவா? இதே விதம் 'உவன்' என்றால் நடுவிலுள்ளவனைக் குறிக்கும். அவ்வீடு, இவ்வீடு, உவ்வீடு என்பதையும் கவனிக்க.

அ, இ, உ இம்மூன்று எழுத்துக்களும் சொல்லுக்கு முதலில் நின்று ஒரு பொருளைச் சுட்டிக்காட்டும் பொழுது **சுட்டெழுத்துக்கள்** எனப்படும்.

எவன், யாவன், அவனு, ராமனோ, ஏன்,—இச் சொற்களில் எ, யா, ஆ, ஓ, ஏ இந்த ஐந்து எழுத்துக்களும் கேள்வி கேட்பதில் வந்து வினப் பொருளை உணர்த்துவதால், அவ்விதம் உணர்த்தும்போது இவை **வினு எழுத்து** எனப்படும்.

iii. கட்டுரை :—உன் கிராமக் கருமானைப்பற்றி ஒரு சிறு கட்டுரை எழுதுக. (உலைக்களம், உபயோகிக்கும் ஆயுதங்கள், செய்யும் கருவிகள் இவை ஒவ்வொன்றுக்கும் ஒரு பத்தி எழுதலாம்.)

# 11. கங்கை நதி

**படித்து விடைசொல் :—**

1. ஒவ்வொரு பாராவுக்கும் பொருத்தமான தலைப்புப் பெயர் அமை.

2. இருக்கு, ஜங்ஹா, திரிவேணி, மிதிலை—இச்சொற்கள் வரும் வாக்கியங்களைக் கண்டுபிடி.

3. நான்காவது பாராவில் கண்ட விஷயங்களைப் பற்றி ஆறு கேள்விகள் அமை. (மாணவர் ஒருவரையொருவர் கேட்கும்பொருட்டு.)

" தாருவில் சந்தானம், விரதத்திற் சோமவாரம், தகைபெறு நிலத்தினிற் காச்மீர கண்டம், தலத்திற் சிதம் பரம், சீறுலாவு ரிஷிகளில் வசிட்டர், பசுவிற் காமதேனு, முனிவரில் நாரதர், நவமணிகளிற் பதுமராகம், நதிகளிற் கங்கை யாகுமன்றே ?" என்று புலவர் புகழ்ந்து போற் றும் கங்காநதி நான். ஜீவ நதியாகிய நான் இந்துஸ்தானத் திற்கு ஓர் அணிகலனும், அதன் உயிர்நாடியாகவும் விளங்குகின்றேன். வட இந்தியாவின் பெருமைக்கும், செல்வத்திற்கும், செழிப்பிற்கும், ஜன நெருக்கத்திற்கும் காரணம் யானே. வானளாவிய இமயமலையில் உற்பத்தி யாகி, ஆயிரம் மைல் அகன்ற சமவெளிப் பிரதேசத்தில் ஊர்ந்து சென்று, பல்லாயிர வருஷங்களாக மக்களை உண வூட்டி வளர்க்கின்றேன்.

ஆதிகாலத்தில் இங்குக் குடியேறிய ஆரியர் தம் உயிர் நிலைபோன்ற என்னைத் தெய்வமாகப் போற்றினர். அவர் கள் பாடிய இருக்கு வேதத்தில் இரண்டு இடங்களில் என்னைத் துதித்தனர். இராமாயணத்திலும், மகா பார தத்திலும் என்னைப் புகழ்ந்து பல கதைகள் கூறியுளர். மிகத்தொன்மை வாய்ந்த என்னை இன்றும், இந்தியர்கள் தங்களது பாவங்களைப் போக்கக்கூடிய புண்ணிய நதி யாகவே கருதுகின்றனர். அயல் நாட்டார்களும், எனது புனிதத்தைப்பற்றி வியந்து கூறியுளர்.

முற்காலத்தில் கடுந்தவம் புரிந்து பகீரதன் என்னும் மன்னன் என்னை விண்ணுலகிலிருந்து மண்ணுலகுக்கு அழைத்து வந்ததையும், பரமசிவன் என்னைத் தலையில் தாங் கினதையும், ஜந்ஹு என்னும் மகரிஷி என்னைச் செவியி னல் வாங்கி வெளியிட்டதையும், நான் குமரக் கடவுளை

மிக்க பரிவுடன் தாங்கி வளர்த்ததையும், நானும் உமாதேவியும் பர்வத ராஜனுகிய இமவானின் இரண்டு பெண்களென்பதையும், எனக்குப் பாகீரதி, ஜான்ஹவி முதலிய பெயர்கள் வந்ததன் காரணத்தையும் ஸ்ரீமத் இராமாயணத்தில் படித்திருப்பீர்கள்.

இமய மலையில் கங்கோத்ரி என்னும் இடத்திற்குக் காத தூரத்திற் கப்பால் நான் உற்பத்தியாகின்றேன். அங்ஙனம் யான் உற்பவிக்குமிடம், கடல் மட்டத்திலிருந்து பதினுலாயிரம் அடி உயரத்தில் உள்ள ஒரு கற்பாறையின் அடித்தளமாகும். அப்பாறையின் மேல் எக்காலத்தும் பனி படிந்திருக்கும். அவ்விடத்தில் நான் இருபத்தேழு அடி அகலமும், ஓரடி ஆழமும் உள்ள ஓர் ஓடையாகச் சமவெளியை நோக்கி ஓடி வருகிறேன். கடல் மட்டத்திற்கு இரண்டாயிரம் அடி உயரத்தில், தேவப்பிரயாகை என்னுமிடத்தில் **அலகநந்தம்** என்னும் வேருேர் ஆறு என்னுடன் கூடுகின்றது. இதன் பின்னர்த்தான் என்னைக் கங்கையென்று அழைக்கிருர்கள். அதுவரை என் பெயர் பாகீரதி எனப்படும். பிறகு நான் இன்னும் ஓர் ஆயிரம் அடி கீழிறங்கி **ஹரித்துவார**த்தை அடைகின்றேன். பிறகு தென் கிழக்காக முகமாக நானூற்றெண்பத்தெட்டு மைல் ஓடி, **பிரயாகை** [அலகாபாத்] என்னுமிடத்தில் யமுனைப் பேராற்றுடன் கலக்கின்றேன். இவ்விடத்திற்குத் **திரிவேணி** என்று பெயர். இதுவரை தோணிகள் செல்ல முடியாதபடி அத்துணை வேகமாக ஓடிவந்த யான், அலகாபாத் முதல் ஆழமுடையேனுய் அகன்று, மிகவும் மெதுவாகச் செல்லுகின்றேன். அலகாபாத் வருமவரை எனது நீளம் அறுநூற்றறுபத்தெட்டு மைல்கள். பின்னர் ஐக்கிய

மாகாணம், பேகார், வங்காளம் முதலிய மாகாணங்களிற் பாய்ந்து வங்காளக் குடாக்கடலிற் சங்கமமாகின்றேன்.

எனது வடபால் இமயமும், தென்பால் விந்தியமும் இருப்பதால், அவ்விரு மலைகளிலும் உற்பத்தியாகும் பல சிற்றாறுகளும் பேராறுகளும் ஏராளமான நீரையும், மிக்க வளமுள்ள வண்டலையும் கொண்டு என்னிற் சேர்க்கின்றன. இதனாலே வட இந்தியாவில் பயிர்கள் செழித்தோங்கி வளர்ந்து எங்குப் பார்த்தாலும் பச்சைப் பசேலென்று பொலிகின்றன. எனது உப நதிகளில் முக்கியமானவை யமுனை, சோனை, கோமதி, கோக்கிரா, கண்டகி முதலியன.

என்னினின்று, அறுபது மைல் நீளமுள்ள இரு கால்வாய்களையும், பல கிளைக் கால்களையும் அரசாங்கத்தார் வெட்டியிருக்கின்றனர். அன்றியும், கடலிலிருந்து இருபது காத தூரத்தில் நான் பல சிற்றாறுகளாகப் பிரிந்து தாழ்ந்த சதுப்பு நிலமான காட்டிடங்களின் ஊடே ஓடிக் கடலிற் கலக்கின்றேன். அவ்விதம் பிரிவனவற்றில் ஹூக்ளி முக்கியமானது.

ஆதியிலே இந்துஸ்தானத்தில் புகழ் வாய்ந்த அயோத்தி, மிதிலை முதலிய பழம்பதிகளும், பின்னர் மகத நாடும், அதன் பின்னர், மொகலாய இராச்சியத்தின் பெரும் பாகமும் நான் ஓடும் சமவெளியிலேயே யிருந்தன. மேலும், இந்தியாவின் மதங்களுட் பல தோன்றிய இடமும், இச்சமவெளியேயாகும். இந்துக்கள் மிகப் புனிதமாகக் கருதும் ஹரித்துவாரம், காசி க்ஷேத்திரம், பிரயாகை முதலிய இடங்களும், காளி கட்டமும் [கல்கத்தா] எனது கரையோரத்தில் உள்ளனவே.

அலகாபாத் முதல் முகத்துவாரம் வரை எனது நீரோட்டத்தில் தோணிகளும் படகுகளும் பிரயாணஞ் செய்யலாம். அதனால் பண்டங்களை ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்குக் குறைந்த செலவிலே கொண்டுபோக வசதி யுண்டாகிறது. இவ்வசதிகளெல்லாம் நான் இடையறாத நீர்ப் பெருக்குடையவளாய் இருப்பதாலேயே அமைந்துள்ளன.

பலவிதங்களில் நன்மை புரிந்து வட இந்தியாவின் உயிர்நாடியாகவுள்ள என்னைக் கங்காதேவி எனத் தொழுவது இயற்கை யன்றோ?

பயிற்சி

[ஒருவன் தன் கதையைத் தானே சொல்வதுபோல் எழுதப்பட்ட இப் பாடம், சுய சரித்திரம் எழுதும் முறையை விளக்குகிறது.]

i. அருஞ் சொற்கள் :—

தரு, தாரு = மரம். சந்தனம், சந்தானம் = சந்தன மரம். தகை = பெருமை. சோமவாரம் = திங்கட்கிழமை. தலம் = க்ஷேத்திரம். சீர் உலவு = பெருமை விளங்கும். பதும ராகம் = செந்நிறமான இரத்தினக் கல். ஜீவநதி = கோடையிலும் வற்றாமல், வருடம் முழுவதும் தண்ணீர் ஓடும் நதி. பதி = ஊர். இடையறாத = இடைவிடாத.

காமதேனு = தெய்வப் பசு; பசு உடலும் பெண் தலையும் உடையது; வேண்டுவன அளிக்கவல்லது.

நவமணிகள்—கோமேதகம், நீலம், பவளம், புட்பராகம், மரகதம், மாணிக்கம், முத்து, வைடூரியம், வைரம்.

இப்பாடத்தில் காணும் வடமொழிச் சொற்களைப் பொறுக்கி எழுதுக.

ii. **இலக்கணம் :—**

1. **பரமசிவன் கங்கையைத் தலையில் தாங்கினர்.**

பரமசிவன், கங்கை, தலை-இவை பொருள்களின் பெயரைக் குறிப்பதால் **பெயர்ச் சொற்கள்.**

தாங்கினர்,—இது ஒரு செய்கையைக் குறிப்பதால் **வினைச் சொல்** எனப்படும்.

இப்பாடத்தின் முதற் பத்தியிலுள்ள பெயர்ச்சொற்களையும், வினைச் சொற்களையும் எடுத்தெழுது.

2. நானும் உமாதேவியும் சகோதரிகள். கங்கையைப் போலப் புனிதமான நதி வேறில்லை. **உம், போல, ஐ** இவைகள் தனியாக இருந்தால் ஒருவிதக் கருத்தும் காட்டா. பெயர்ச் சொல்லை அல்லது வினைச்சொல்லைச் சார்ந்து இருந்தால்தான் கருத்து விளங்கும் இவ்விதச் சொல் **இடைச்சொல்** எனப் படும்.

3. நவமணிகளில் சாலச் சிறந்தது பதுமராகம். **சால,** நனி, கூர்-இவை மிகுதி என்ற குணத்தைக் காட்டும். இவை **உரிச் சொல்** எனப்படும்.

iii. **கட்டுரை :—** உற்பத்தி இடத்திலிருந்து கடலோடு கலக்கும்வரையுள்ள கங்காநதியின் வரலாற்றைப் படர்க்கையிடமாகச் சுருக்கி எழுதுக.

iii. **பிற நூல் ஆராய்ச்சி :—** 1. பகீரதன் கங்கை கொண்டு வந்த வரலாற்றை இராமாயணத்தில் படிக்கவும்.

2. வட இந்தியா படம் வரைந்து, அதில் கங்கை நதி பாயும் வழியையும், அதன் கரையோரத்திலுள்ள முக்கிய ஊர் களையும் குறி.

# 12. ஆறு

படித்து விடை கூறு:

1. ஆறு யாரைக் காணச் செல்லுகிறது?

2. ஆறு அடித்து வரும் ஆறு பொருள்களை நவில்க.

3. நன்செய், புன்செய் வழியாகப் பாய்வது எந்தச் செய்யுளில் கூறப்படுகிறது?

1. கல்லும் மலையும் குதித்து வந்தேன் - பெருங்
காடுஞ் செடியும் கடந்து வந்தேன்.
எல்லை விரிந்த சமவெளி எங்கும் - நான்
இறங்கித் தவழ்ந்து தவழ்ந்துவந்தேன்.

2. ஏருத மேடுகள் ஏறிவந்தேன் - பல
ஏரி குளங்கள் நிரப்பி வந்தேன்.
ஊருதஊற்றிலும் உட்புகுந்தேன் - மணல்
ஓடைகள் பொங்கிட ஓடிவந்தேன்.

3. ஆயிரம் காலால் நடந்து வந்தேன் - நன்செய்
அத்தனையும் சுற்றிப் பார்த்து வந்தேன்.
நேயமுறப் புன்செய்க் காட்டிலும் - அங்கங்கு
நீரை இறைத்து நெடுகவந்தேன்.

4. மாங்கனி தேங்கனி வாரி வந்தேன் - நல்ல
வாச மலர்களும் அள்ளி வந்தேன்.
தீங்கரும் பாயிரம் தள்ளி வந்தேன் - மிகத்
தேனும் தினையுமே சேர்த்துவந்தேன்.

5. அல்லும் பகலும் அலைந்து வந்தேன் - எங்கள்
ஆழி இறைவனைக் காணவந்தேன்.
நில்லும் எனக்கினி நேரமில்லை - இன்னும்
நீண்ட வழிபோக வேண்டும்அம்மா.

திரு. சி. தேசிக விநாயகம் பிள்ளை.

## பயிற்சி

[இச் செய்யுளும் சுய சரிதை முறையில் எழுதப் பட்டுள்ளதை ஓர்க.]

i. வாக்கியங்களில் உபயோகி:— அல்லும் பகலும், காடும் செடியும், வாசமலர், தவழ, ஆழி, நன்செய், புன்செய்.

ii. கொல்—கொள். விலங்கு—விளங்கு.

லகர, ளகர, ழகரங்கள் சொற்களில் வரும்பொழுது பொருள் வேறுபடுவதைக் காண்க.

வேறு உதாரணங்கள் ;

| | | |
|---|---|---|
| தலை | வால் | ஆல் |
| தளை | வாள் | ஆள் |
| தழை | வாழ் | ஆழ் |

இரந்தான்—பிச்சையெடுத்தான். இறந்தான்—மரித்தான்.

ரகர, றகரங்கள் சொற்களில் வரும்பொழுது பொருள் வேறுபடுவதைக் காண்க.

எரி, ஏரி, உரி, உரை, மரம், பரி.
எறி, ஏறி, உறி, உறை, மறம், பறி.

iii. ஒவ்வொரு இனத்திற்கும் அதே வகையான மூன்று வேறு பொருள்கள் எழுது.

1. ஆறு, ஏரி, குளம், ———, ———, ———.
2. உருது, தமிழ், தெலுங்கு, ———, ———, ———.
3. சீனு, ஜப்பான், ஜெர்மனி, ———, ———, ———.
4. வீணை, தவுல், புல்லாங்குழல், ———, ———, ———.
5. வழக்கறிஞர், கவிஞர், சிற்பி, ———, ———, ———.

iv. பிற நூல் ஆராய்ச்சி:—தற்காலக் கவிஞராகிய திரு. சி. தேசிகவிநாயகம் பிள்ளை யவர்களது மலரும் மாலையும் என்னும் நூலிலிருந்து வேறு பாடல்கள் சிலவற்றைப் படித்தறிக.

# 13. பயிற்சிப் பாடம் III

i. குணமறிந்து சொல்:

1. விமலா பண்டங்களைச் சிந்தமாட்டாள். தாய் தந்தையர் கொடுக்கும் சில்லறைகளில் மிகுந்தவைகளை ஓர் உண்டியில் போட்டு வருவாள்.

விமலா எக்குணம் வாய்ந்தவள்? (சோம்பல், சிக்கனம், ஒழுங்கு, வாய்மை.)

2. மூட்டைகளை வைத்துக்கொண்டும், கையிற் குழந்தையுடனும் ஒரு ஸ்திரீ நெருக்கடியினால் ரயில் வண்டிக்குள் ஏற முடியாமல் தவித்தாள். வண்டிக்குள்ளிருந்த ஜயசந்திரன் உடனே எழுந்து கதவைத் திறந்து அவள் வைத்திருக்கும் மூட்டைகளை வாங்கி மேற்றட்டின் மேல் வைத்தான். அவள் வண்டியில் ஏறியதும், வேறு இடமில்லாததால், தான் இருந்த இடத்தில் அவளை உட்காரச் செய்துவிட்டு அவன் நின்றுகொண்டிருந்தான்.

அவன் குணத்தை விவரிக்கும் சொல் எது? (கருத்துள்ளவன், பொறுமையுள்ளவன், தன்னலமற்றவன், மரியாதையுள்ளவன், ஒழுங்குள்ளவன்.)

3. ஸர் பிலிப் ஸிட்னி என்பவர் போர்க்களத்தில் மரணத்தறுவாயி லிருக்கும்பொழுது, தாகமெடுத்துத் தண்ணீர் கேட்டார். ஒருவன் தண்ணீர் கொணர்ந்து கொடுக்கும்போது காயப்பட்டு அண்மையிற் கிடந்த மற்றொரு போர்வீரன் தண்ணீர்க் கோப்பையை ஆவலுடன் நோக்கினன். அக்குறிப்பை யறிந்த ஸிட்னி துரை, 'என் தேவையைவிட உன் தேவையே பெரிது' என்று அவ

னைப் பார்த்துக் கூறி, அவனுக்கு அந்தக் கோப்பைத் தண்ணீரைக் கொடுக்க ஏவினர். அந்த இடத்தில் வேறு தண்ணீர் கிடைக்க வசதியில்லை.

அவரிடம் இதனுல் புலப்படும் சிறந்த குணம் யாது?

ii. வரிசைப்படுத்தி வாசி:—

இப்பாடத்தை வாசித்து, கதைத் தொடர்ச்சி விளங்கும்படி வாக்கியங்களை வரிசைப்படுத்தி 1, 2, 3 முதலிய இலக்கங்கள் இடு. பிறகு தொடர்ச்சியாக வாசி.

சிபி, 'புருவைக் கொல்லாதே. அது பயந்து என்னிடம் அடைக்கலம் புகுந்துள்ளது. உனக்கு வேறு உணவு கொடுக்கிறேன்' என்றார். இராஜாளியும் அதைப் புசித்துப் பசி தீர்ந்து களிப்படைந்தது. பல்லாயிர வருடங்களுக்கு முன், பரத கண்டத்தை ஆட்சி செய்த சிபிச் சக்கரவர்த்தி தமது உத்தியானவனத்தில் ஒரு மாலைப் பொழுதில் உலாவிக்கொண்டிருந்தார். புருவும் மட்டற்ற மகிழ்ச்சியுடன் அவர் முகத்தைப் பார்த்தது. உடனே சிபி வேந்தர், புருவைத் தராசின் ஒரு தட்டில் வைத்து மற்றொரு தட்டில் அதற்கு ஈடாகத் தமது தொடையினின்று ஊனை நறுக்கி வைத்து நிறுத்துக்கொடுத்தார். இராஜாளி, "என் புருவைக் கொடு. எனக்குப் பசிக்கிறது. அதைக் கொன்று தின்னவேண்டும்" என்று கேட்டது. அத்தருணம் ஓர் இராஜாளி துரத்திக்கொண்டு வந்த புரு ஒன்று அவர் பாதத்தடியில் விழுந்து பதுங்கிக்கொண்டது. இராஜாளி, "அங்ஙனமாயின் உன் உடலினின்று இப்புருவின் நிறையுள்ள மாமிசம் கொடு" என்று கேட்டது. சிபி அப்புருவை எடுத்துத் தடவிக் கொடுத்தார்.

iii. சம்பாஷணையாக எழுது :

இந்தக் கதையைச் சம்பாஷணை முறையில் புத்தகத்தைப் பார்க்காமல் உனது சொந்த நடையில் எழுது. கதைக்குப் பொருத்தமான பெயர் இடு.

---

# 14. யாழ் வென்றி

[திரு. வி. சாமிநாதப் பிள்ளை]

1. 'யாழ் வென்றி'—இப்பெயர் பாடப்பகுதிக்கு எவ்வாறு பொருந்தும் ?
2. இன்னிசையால் எவரெவர் அறிவு மயங்கினர் ?
3. சுயம்வர நிபந்தனை யாது ?
4. காந்தருவ தத்தை யார் ?

மறுநாள் சீதத்தன் காந்தருவ தத்தையின் திருமணத்தை அரசன் கட்டியங்காரன் மூலமாகத் தேசத்தவருக்கு அறிவிக்கக் கருதி, விலையுயர்ந்த இரத்தினங்களை எடுத்துக்கொண்டு அரசன் சமுகத்தை அடைந்து, அவற்றைக் காணிக்கையாக வைத்துக் கண்டனன். அரசனும் அவ்வணிகனுக்குத் தகுதியான ஆசன மளித்தான். சீதத்தன் அரசனை நோக்கி, "அரசரே! வித்யாதரவுலகத்தரசன் கலுழவேகன்: அவனுடைய மகள் காந்தருவ தத்தை; அவள் வீணையில் மிகுந்த தேர்ச்சியுடையவள்; அப்பெண்ணை வீணையில் வென்றவனே அவளுக்கு மணாளனாக உரியவனென்று தெரிவித்து, தந்தை அக்குமாரியை என்னிடம் சேர்ப்பித்திருக்கிறான்

அப்பெண்ணின் சுயம்வரத்தைத் தங்கள் மூலமாக நடத்த யான் விரும்பி விண்ணப்பித்துக்கொள்கிறேன்" என்றான். அரசனும் அதற்கு உடன்பட்டு, வெளி நகரங்களிலுள்ள பலருக்குச் சுயம்வரவோலை யனுப்பியும், தன்னகரத்தி லுள்ளோர்க்குப் பறை சாற்றுவித்தும் தெரிவித்தான். பிறகு சீதத்தன் அழகான சுயம்வர மண்டபம் ஒன்று அமைத்தான்.

இங்ஙனமிருக்கச் சுயவரம் வோலையைக் கண்ட அரசர்களும் மற்றவர்களும் இராசமாபுரத்தே வந்து சேர்ந்தனர். இதனை யறிந்த கட்டியங்காரன் அவ்வரசர்களை வரவேற்று அவரவர்களுக்குத் தகுதியான விடுதிகளை அமைத்தனன்.

பிறகு, அரசனும் மற்றவர்களும் சுயம்வர மண்டபத்தை அடைந்தனர். சீதத்தன் காந்தருவ தத்தையை அலங்கரிக்கச் செய்து, உடன்கொண்டு பல வாத்திய கோஷங்களோடு பல்லாயிரம் பெண்கள் பக்கத்தே சூழச் சுயம்வர மண்டபத்தை அடைந்தான். அவ்வமயம் வீணாபதி அவையினரை நோக்கி, "ஐயன்மீர்! இப்பெண் திருவை யாழில் வெல்பவர் யாவராயினும், அவரே இவளுக்கு நாயகராவர்" என்று தெரிவித்து, அழகிய ஒரு பீடத்தில் காந்தருவதத்தையை அமரச் செய்தனள்.

அவளும் அரங்க மேடையில் அமர்ந்து வீணையை மீட்டிக் கண்ணிமைத்தல், தலையாடல், அழுமுகங் காட்டல் முதலிய விகாரம் யாதுமின்றி, எழுதின சித்திரம்போல் அமைந்து யாழ் வாசித்துப் பாடத் தொடங்கினள். அப்பொழுது, இசையின் குணம் குற்றம் அறியும் 'கின்னர

மிதுனம்' என்னும் பறவைகள் சுயம்வர மண்டபத்தைச் சூழ்ந்து மெய்ம்மறந்து கிடக்கலாயின. பிறகு காமனை யொத்த காவலர் ஒருவர் ஒருவராய் யாழ் வாசிக்கத் தொடங்கினர். அங்குச் சூழ்ந்து கிடந்த அப்பறவைகள் அவர்களைப் பரிகசிப்பன போல் ஆகாயத்தை அடைந்தன. இவ்வாறு ஏழு நாள் அரசர்களும் மற்றவர்களும் யாழ் வாசித்துத் காந்தருவதத்தைக்கு ஒவ்வொருவரும் தாழ்ந்து தோல்வியுற்றனர். இத்தோல்வியைக் கின்னர மிதுனங்கள் என்னும் துலையால் யாவருமறிந்தனர். இதனைக் கண்ட கட்டியங்காரனும், இவ்வுலகில் இவளை வெல்பவர் எவரும் இலரென்று இருந்தனன்.

சீவகனும் தன் தோழர்களுடன் சுயம்வர மண்டபம் அடைந்தான். அங்கு அவன், தனக்காக அமைக்கப்பட்ட தவிசின் மேல் அமர்ந்து, உடுக்கள் மத்தியில் ஒளி நிறைந்த மதி விளங்குவது போன்று விளங்கினன்.

இஃதறிந்த வீணைபதி, யாழ் ஒன்றைக் கொண்டுவந்து சீவகன் கையிற் கொடுத்தனள். அவன் அதை வாங்கி, நரம்பின் ஓசையால் அதன் இயல்பை யறிந்து, வீணைபதி யைப் பார்த்து, 'இம்மரம் இளமை யுடையது' என்று அவ்வீணையியன்ற மரத்தின் குற்றத்தைத் தெரிவித்து, 'இது வேண்டா' என்றனன். அவள் மற்றொரு யாழைக் கொடுக்க, 'அழுகின மரத்தால் செய்த இது வேண்டா' வென்றான். இவ்வாறு அவள் குற்றமுடைய வீணைகளையே ஒன்றன்பின்னொன்றாகக் கொடுக்க, அவனும் இது முறிந்த மரம், இது இடியேறுண்ட மரம், இது வெந்த மரம் என்று அவையியன்ற மரங்களின் குற்றங்களைத் தெரிவித் தான். அதனையறிந்த வீணைபதி, அவன் திறமையை

வியந்து, வேறு நல்ல யாழ் ஒன்று கொடுத்தனள். அதனை வாங்கி 'இதுதான் நல்ல யாழ்' என்று சொல்லி நரம்பை மீட்டிப் பாடத் தொடங்கினன்.

அவ் விசையைக் கேட்டதும், கின்னர மிதுனங்கள் முன்னையிலும் மிக மயங்கி வீழ்ந்தன. தேவ கின்னரர் தாம் வாசிக்கும் வீணையைக் கைவிட்டனர். விஞ்சையர் நெஞ்சுருகி மெய் சோர்ந்தனர். மனிதர் தாங்கள் எப் பொழுதும் அறியாத இசையைக் கேட்ட மயக்கத்தாலே அறிவு மயங்கினர். முனிவர்களும் இது பேரின்ப மென்று உட்கொண்டனர். காந்தருவதத்தையும் யாழ் வாசித்துப் பாட வெடுத்த கீதத்தில் அவனுக்குச் சிறிது குறைந்து தோற்றனள். எனினும், விஞ்சையர் மகளாகிய காந்தருவ தத்தை மானிடனாகிய சீவகனது யாழ் வென்றியை ஏற்றுக் கொண்டு, மணமாலை யொன்றை அவன் கழுத்தில் சூட்டி, அவன் அடியைத் தொழுது நின்றனள்.

சீதத்தன் ஒரு நல்ல நாளில் முனிவர்களைக் கொண்டு சீவகனுக்கும் காந்தருவதத்தைக்கும் திருமணம் முடித்தான்.

### பயிற்சி

[ஐம்பெருங் காப்பியங்களுள் ஒன்றாகிய 'சீவக சிந்தாமணி' என்னும் பண்டைத் தமிழ் நூல் திருத்தக்க தேவர் என்பவரால் செய்யுளாக இயற்றப்பட்டது, இது ஒரு கற்பனை நூல். அக்கதையின் சுருக்கம் வசனமாக எழுதப்பட்டு, அதினின்று இச்சுவையானன் பகுதி தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறது.]

i. விளக்கவுரை :—

1. சீவகன் கதாநாயகன்; இராசமாபுரத்தரசன் சச்சந்தனுடைய மகன்; கந்துக்கடன் என்னும் வணிகன் வீட்டில் வளர்ந்து வருபவன்.

2. கட்டியங்காரன் சச்சந்தனின் துன்மந்திரி; அவனைக் கொன்றுவிட்டு நாட்டைக் கைப்பற்றி ஆள்பவன்.

3. வீணாபதி காந்தருவ தத்தையின் தோழி.

4. சீதத்தன் ஒரு வணிகன்; காந்தருவதத்தையை வளர்த்தவன்.

ii. பொருள் விளங்காத சொற்களைப் பொறுக்கி எழுது. பொருளை அகராதியிற் கண்டறி.

iii. **இலக்கணம் :—**

1. **திணை :—**மனிதர்களும், தேவர்களும் பகுத்தறிவு உள்ளவர்களாதலால், அவர்களைக் குறிக்கும் சொற்கள் **உயர்திணைப்** பெயர்கள் எனப்படும். (உ-ம்) அரசன் கந்தருவர், சீவகன், வீணாபதி, சிவன்.

மிருகம், பட்சி முதலிய உயிருள்ளவைகளையும், பெட்டி, கல் முதலிய உயிரில்லாதவைகளையும் குறிக்கும் சொற்கள் **அஃறிணைப்** பெயர்கள் எனப்படும். (உ—ம்) யாழ், பட்சி, மரம், மான்.

உயர்திணை = உயர்வாகிய சாதி. அஃறிணை (அல் + திணை) = உயர்வு அல்லாத சாதி. திணை = சாதி, பிரிவு.

2. **பால்;** திணையின் உட்பிரிவு **பால்** (= பகுப்பு) எனப்படும்.

அரசன், நாயகன், சீவகன் இவைபோல் ஓர் ஆணைக் குறிக்கும் சொல் **ஆண்பால்** ஆகும்.

அரசி, நாயகி, கண்ணகி இவைபோல ஒரு பெண்ணைக் குறிக்கும் சொல் **பெண்பால்** ஆகும்.

அரசர்கள், அரசிகள், தோழர்கள், தோழிகள், மக்கள் இவைபோல (ஆணயினும் பெண்ணயினும்) ஒன்றுக்கு அதிகமான பலரைக் குறிக்கும் சொல் **பலர் பால்** ஆகும்.

ஆண் பால், பெண் பால், பலர் பால் இம்மூன்றும் உயர் திணைக்கு உரியவை.

மரம், மாடு, வீணை, நாய் இவைபோல அஃறிணைப் பொருள்களில் ஒன்றைக் குறிக்கும் சொல் **ஒன்றன் பால்** ஆகும்.

மரங்கள், மாடுகள், வீணைகள், நாய்கள் இவைபோல அஃறிணைப் பொருள்களில் பலவற்றைக் குறிக்கும் சொல் **பலவின் பால்** ஆகும்.

பயிற்சி :—முதல் பாராவில் முதல் இரண்டு வாக்கியங்களிலுள்ள பெயர்ச் சொற்களை எடுத்தெழுதி, அவைகளுக்குத் திணையும், பாலும் கூறுக.

iv. **கட்டுரை :**—நீ பார்த்துள்ள மணவிழா ஒன்றை விவரித்து மூன்று பத்திகள் எழுது.

v. **பிறநூல் ஆராய்ச்சி :**—இப்பாடப் பகுதி யடங்கியுள்ள சீவகன் என்னும் முழு நூலைப் பாடசாலைப் புத்தகாலயத்திலிருந்து வாங்கிப் படி.

# 15. 'என்னுடைய கலியாணமும் இமயமலைப் பிரயாணமும்,

**பாடத்தைப் படித்துக் கண்டுபிடி :**

1. ஜவஹர்லால் நேரு அமரநாத் குகையைக் காணச் சென்றபோது அவருக்கு ஏற்பட்ட விபத்து யாது ?

2. மலை யேறுவதில் இருந்த மூன்று இடர்களைக் கூறுக.

3. மலையின் இயற்கைத் தோற்றங்களை வர்ணிக்கும் வாக்கியங்களைக் கண்டுபிடி.

4. நாலாவது பாராவின் முக்கியக் கருத்து யாது ?

5. இவ்வரலாற்றால் புலப்படும் நேருவின் குணாதிசயங்கள் மூன்று கூறுக.

1916-ம் ஆண்டில் டில்லி மாநகரில் என்னுடைய கலியாணம் நடைபெற்றது. வசந்த பஞ்சமி அன்றைக்கு எனக்கு விவாகம். அந்த வருஷக் கோடையில், நாங்கள் சில மாதங்கள் காஷ்மீரில் கழித்தோம். என்னுடைய குடும்பத்தாரைப் பள்ளத்தாக்கில் விட்டுவிட்டு, நானும் என்னுடைய சகோதரர் ஒருவரும் பல வாரங்கள் மலை மீதேறிக் காலங் கழித்து, "லாடக்" ரஸ்தா வழிவரையும் போனோம். மலைச்சரிவுகளின் மூலமாகத் திபெத்துப் பிராந்தியத்திற்குச் செல்லும் ஒடுக்கமான ஒற்றையடிப் பாதைகளும், ஒடுங்கிக் கிடந்த பள்ளத்தாக்குகளும் ஆகாயத்தில் இருப்பனபோலத் தோன்றின. இக் காட்சிகள் எனக்குப் புதியவை. சோஜீலாக் கணவாயின் உச்சியி லிருந்து பார்த்தால் பசுமை தவழ்ந்திருக்கும் மலைச்சரிவுகளை ஒரு பக்கத்தில் காணலாம்; இன்னொரு பக்கத்தில் பசுமை யென்பது மருந்துக்குக்கூடக் காண முடியாத குன்றுகள் கண்ணில் படும்.

நாங்கள் போனது ஒடுக்கமான பள்ளத்தாக்குப் பாதை. இரு மருங்குகளிலும் மலைகள். மலைச் சிகரங்களில் அடர்ந்த பனி உறைந்த பனிக் குன்றுகள் சிறிது சிறிதாகக் கரைந்து எங்கள் காலடி வரையில் வந்து விழும். நல்ல குளிர்காற்று ஆளை அடிப்பதுபோல வீசும். ஆனால் பகலிலோ வெயில் கொளுத்திவிடும். ஆகாயத்திலே தூசி ஒன்று மிருக்காது. வெகுதூரம் வரையிலும் பார்க்கலாம். எனவே, தூரத்திலிருக்கிற பொருள்கள் கிட்ட இருப்பதாக எண்ணி, பல தடவைகளில் நாங்கள் ஏமாந்துபோயிருக்கிறோம். ஒரே தனிமை. புல் பூண்டுகள் கிடையா. செடி கொடிகள் இல்லை. மரங்களையும் காணமுடியாது. சில சமயங்களில்

அழகான மலர்கள் கண்களில் தென்படும். அவைகளைத் தவிர மனதுக்கினிய பொருள்களைக் காணமுடியாது. குன்றும் பனியும் பனிக்கட்டிகளுந்தான். என்றாலும், இந்தப் பயங்கரமான இயற்கையின் தோற்றங்களைக் கண்டு என் உள்ளத்திலே ஒருவித அபூர்வ உவகை உண்டாயிற்று. எனக்கு அடங்காத உற்சாகமும் சந்தோஷமும் ஏற்பட்டன.

இவ்வாறு நாங்கள் பிரயாணம் செய்ததில், ஒரு அதிசய சம்பவம் எனக்கு உண்டாயிற்று. சோஜீலா கணவாயைத் தாண்டி வெகுதூரம் அப்பாற் போய்விட்டோம். அங்கே ஒரு இடத்துக்கு மாதாயான் என்று பெயர். அந்த இடத்திலிருந்து அமரநாத் குகை எட்டு மைல்தான் என்று சொன்னார்கள். நடுவே பிரமாண்டமான மலை படுத்துக்கொண்டிருந்தது. மலையின்பேரில் ஒரே பனி. இவைகளைக் கடந்து செல்லவேண்டும். ஆமாம்! அதனால் என்ன? எட்டு மைல்தானே! முடியாத காரியமா? உற்சாகத்தாலும் அனுபவக் குறைவாலும், இந்த எட்டு மைலைக் கடந்துவிடுகிறதென்று தீர்மானங்கொண்டோம். இப்பொழுது நாங்கள் கடற்கரையிலிருந்து 11,500 அடி உயரம் உள்ள ஒரு மலைமீது இருந்தோம். இந்த இடத்தை விட்டு நாங்கள் ஒரு சிறு கூட்டமாகச் சேர்ந்து புறப்பட்டோம். வழியிலிருந்த ஆடு மேய்ப்பவர் ஒருவர் எங்களுக்கு வழிகாட்டிக்கொண்டே போனார். பனி மலைச் சரிவுகளிற் கயிறுகளைப் பிடித்துக்கொண்டு ஏறினோம். ஏற ஏற எங்களுடைய கஷ்டங்கள் அதிகரித்துக்கொண்டே வந்தன. தாராளமாக மூச்சுவிடுவதுகூடக் கஷ்டமாகப் போயிற்று. எங்களுடைய சாமான்களைக் கூலியாட்கள் தூக்கிவந்தார்கள். சுமை அதிகக் கனமில்லை. இருந்

தாலும், அவர்கள் உடம்பில் இரத்தங் கக்க ஆரம்பித்துவிட்டார்கள். பனி பெய்தது; உறைந்த பனிக்கட்டிகள் வழுக்க ஆரம்பித்துவிட்டன. ஒவ்வொரு அடி யெடுத்து வைக்கும்போதும், மூச்சு வாங்க ஆரம்பித்தது. என்றாலும், இந்த முட்டாள்தனமான முயற்சியில் பிடிவாதங் கொண்டு சென்றோம். நாங்கள் முகாம் போட்டிருந்த விடுதியை விட்டுக் காலையில் நான்கு மணிக்குப் புறப்பட்டோம். விடாமல் பன்னிரண்டு மணி நேரம் மேலே ஏறினோம். அங்கே விஸ்தாரமான ஒரு பனி மைதானத்தைக் கண்டோம். நாலு பக்கங்களிலும் பனிச் சிகரங்களோடு தேவர்கள் நர்த்தனஞ் செய்யும் நடன மண்டபம்போல் அற்புதக் காட்சியாக விருந்தது. ஆனால் புதிதாகப் பெய்துகொண்டிருந்த பனியாலும், மூடு பனியாலும் இந்தக் காட்சி சீக்கிரம் எங்களுடைய கண்களிலிருந்து மறைந்து போயிற்று. நாங்கள் எவ்வளவு உயரத்தில் இருந்தோம் என்று நிச்சயமாகச் சொல்லமுடியாது. அமரநாத் குகையைக்காட்டிலும் உயரத்தில் இருந்ததால், 15,000 முதல் 16,000 அடி வரை இருக்கலாம். இந்தப் பனி மைதானத்தைத் தாண்டி அரை மைல் போனால், குகையின் இன்னொரு பக்கத்துக்கு வந்துவிடலாம். மலே ஏற்றம் முடிந்துவிட்டதால், இனி அதிகமான கஷ்டம் இராது என்று நாங்கள் எண்ணினோம். எனவே, சோர்ந்துபோனாலும் உற்சாகத்துடன் கீழே இறங்கத் தொடங்கினோம். ஆனால், அது மிகவும் மோசடியான காரியமாக ஏற்பட்டது. இடை யிடையே குன்றுகள்மீது இருந்த பனி மூட்டங்களால் எங்கே ஆபத்து இருக்கிறதென்று அறியக்கூட

வில்லை. ஒரு புதிய பனிக்குன்றிலே காலை வைத்தேன். அது உடைந்துபோனதால் தனது பேழ்வாயைத் திறந்து கொண்டிருந்த ஒரு குகைக்குள் நான் விழுந்துவிட்டேன். அது ஆழம் அண்டாத ஒரு குகை. அதிலே போனவர்கள் யுகயுகாந்தரங்கள் கழிந்தாலும் அதனுள்ளேயே பத்திரமாக இருப்பார்கள். ஆனால் நான் பிடித்துக்கொண்டிருந்த கயிறு அறுந்துபோகவில்லை. எனவே, நான் அந்தப் பிலத்துவாரத்தின் கங்கிலே தொத்திக்கொண்டேன். கயிற்றைப் பிடித்து என்னை வெளியே இழுத்துவிட்டார்கள். இந்த விபத்தினால் எங்களுக்கு நடுக்கம் உண்டாயிற்று. ஆனாலும் மேலே செல்லப் பிடிவாதம் கொண்டோம். இத்தகைய விபத்துகள் அதிகரித்துக்கொண்டே வந்தன. இவைகளைக் கடப்பதற்கான வசதிகள் எங்களிடம் இல்லை. எனவே, கடைசியாகத் திரும்பிவிட்டோம். ஏக்கமும் சோர்வும் அதிகம். அமரநாத் குகையை நாங்கள் காண முடியாமற் போயிற்று.

காஷ்மீரத்தின் மலைகளும் பள்ளத்தாக்குகளும் என் கண்களைக் கவர்ந்தன. எனவே, சீக்கிரத்தில் திரும்பி வந்து இவைகளைக் காணவேண்டுமென்று தீர்மானங் கொண்டேன். இதைப்பற்றி எத்தனையோ திட்டங்கள் போட்டேன். ஒரு திட்டம் போடும்பொழுதே எனக்கு அளவிலா ஆனந்தம் உண்டாயிற்று. அது, திபெத்தில் தெய்விக ஏரியான மானஸஸரோவருக்குப் போய், அதன் அருகே யிருக்கும் பனி நிறைந்த கைலாச பர்வதத்தைக் காணவேண்டு மென்பதுதான். இந்தத் திட்டம் போட்டு இப்பொழுது பதினெட்டு வருஷங்கள் ஆகின்றன. இன்னும்

மானஸஸரோவரும் கைலாசமும் மனக்கோட்டையில்தான் பார்க்கப்பட்டுவருகின்றன.

எவ்வளவோ ஆசைப்பட்டும் காஷ்மீரத்துக்குக்கூட இரண்டாவது முறை என்னால் போகமுடியவில்லை. அரசியல், பொதுஜன சேவை என்ற வலைகளிலே அதிகமாக வர வரச் சிக்கிக்கொண்டேன். மலைகளிலே ஏறியும், கடல்களைக் கடந்தும் திருப்தி செய்யவேண்டிய எனது யாத்ரா மோகத்தைச் சிறைக்குள் வந்து திருப்திசெய்ய நேரிட்டது. இன்னமும் நான் திட்டம் போட்டுக்கொண்டுதானிருக்கிறேன். சிறையிற்கூட, திட்டம்போடும் ஆனந்தத்தை என்னிடம் இருந்து யாரேனும் பறிமுதல் செய்துவிடக் கூடுமோ? மேலும், திட்டம்போடுவதைத் தவிர, சிறையிலே என்னதான் செய்ய முடியும்?

இமயமலைத் தொடர்களில் திரிந்து கடந்து கடைசியில் என் ஆசைக் களஞ்சியங்களான அந்த மானஸஸரோவர் ஏரியை அடைந்து, கைலாச மலையில் ஏறப்போவதாக என்றும் கனவுகாண்கிறேன். ஆனால் வாழ்க்கையோ ஒவ்வொரு நாளாகக் கழிந்துகொண்டே செல்கின்றது. இளமை கழிந்து நடுத்தர வயது வந்துவிட்டது. அதுவும் கழிந்து பயங்கரமான முதுமையும் ஏற்பட்டுவிடும். அப்பொழுது கைலாசத்துக்கும் மானஸ ஸரோவருக்கும் எப்படிப் போவேன் என்று நான் சில சமயங்களில் ஏங்குவதுண்டு. முடிவு கண்ணில் படவில்லையானாலும், அதற்காகப் பிரயாணத்தை நிறுத்திவிடலாமோ? முயற்சிக்குத் தக்க பயனுண்டு. ஒரு கவியின் மொழிகள் எனக்கு ஞாபகம் வருகின்றன:

"ஆமாம்! இந்த மலைகள் என் மனக் கண்களில் தோன்றுகின்றன. அவற்றின் அபாயம் நிறைந்த குன்றுகளும் குகைகளும் மாலை நேரத்தின் அழகு வெள்ளத்தால் ரோஜா வர்ணம் பூசப்பட்டிருக்கின்றன. அதைக் கண்ட என் ஆத்மா அம்மலைகளின் சாந்தமயமான பனிச் சிகரங்களில் அடங்காத ஆசை கொண்டு என்னைக் கண்கொட்ட விடுவதில்லை."

## பயிற்சி

[ஸ்ரீயுத ஜவஹர்லால் நேரு ஆங்கிலத்தில் எழுதியுள்ள சுயசரிதையின் தமிழ் மொழிபெயர்ப்பின் ஆறுவது அத்தியாயம் இப்பகுதியாகும். இஃது உண்மை அனுபவங்களையும் துணிகரச் செயல்களையும் பற்றியதொரு பாடமாகும்.]

i. வசந்த பஞ்சமி—பஞ்சாங்கத்தைப் பார்த்தறிக.

மானஸஸரோவர்—இச் சொல் வரும் வாக்கியங்களைக் கண்டுபிடி. அது என்ன?

வாக்கியங்களில் உபயோகி: மருங்கு, பிலம், பிராந்தியம், உவகை, மனக்கோட்டை, பறிமுதல்.

ii. **இலக்கணம்:—**

1. **எண்**:—பொருள்களின் எண்ணிக்கையைக் காட்டுவது **எண்** எனப்படும். புல், மலை, மாதம், நான், மான்—இவை ஒரு பொருளைக் குறிப்பதால் **ஒருமை எண்.**

புற்கள், மலைகள், மாதங்கள், நாங்கள், மான்கள்—இவை ஒன்றுக்கு அதிகமான பொருளைக் குறிப்பதால் **பன்மை எண்.**

ஐந்து பால்களில் ஆண்பால், பெண்பால், ஒன்றன்பால் இம்மூன்றும் ஒருமைக்கு உரிய பால்களாம். பலர் பால், பலவின் பால் இவ்விரண்டும் பன்மைக்குரிய பால்களாம்.

பயிற்சி :—இரண்டாவது பாராவிலுள்ள பெயர்ச் சொற்களைப் பொறுக்கி ஒருமை, பன்மையென இரண்டு கலங்களில் பிரித்தெழுது. பின்பு ஒருமைக்குப் பன்மையும், பன்மைக்கு ஒருமையும் எழுது.

2. **இடம்**,—நான், நாம், நாங்கள்—இச்சொற்கள் பேசுவோனையும், அவனைச் சார்ந்தோரையும் குறிப்பதால் **தன்மை** இடம் எனப்படும்.

நீ, நீர், நீங்கள்—இச்சொற்கள் பேசுவோனுக்கு முன்னே நிற்பவர்களைக் குறிப்பதால் முன்னிலை இடம் எனப்படும்.

அவன், அவள், அவர்கள் (அது, அவை)—இச் சொற்கள் தன்னையும் தன் முன் நிற்பவனையும் அல்லாது, பிறரைக் குறிப்பதால் **படர்க்கை** இடம் எனப்படும்.

| | | ஒருமை | பன்மை |
|---|---|---|---|
| தன்மை இடம் | ... | நான் | —நாம், நாங்கள் |
| | | யான் | —யாம், யாங்கள் |
| முன்னிலை இடம் | ... | நீ | —நீர், நீங்கள் |
| படர்க்கை இடம் | ... | அவன், அவள் | —அவர்கள் |
| | | அது | —அவைகள் |
| | | இவன், இவள் | —இவர்கள் |
| | | இது | —இவைகள் |

நான், நீ, நாங்கள், நீங்கள்—இவை ஆணையும் குறிக்கலாம்; பெண்ணையும் குறிக்கலாம்,

பயிற்சி :—தடித்த எழுத்திலுள்ள சொற்களுக்கு எண், இடம், பால் எழுதுக :—

1. **நானும்** என் சகோதரரும் காஷ்மீருக்குச்சென்றேம்.

2. **புல் பூண்டுகள்** கிடையா.

3. **வீணாபதி சீவகனிடம்** சில **வீணைகளைக்** கொடுத்தாள்.

4. அவர்கள் வந்தபின் நீ போ.

5. அது அவளுடைய தாவணி.

iii. கட்டுரை :—நீ பிறந்த இடம், காலம், குடும்பம், வாழ்க்கையில் முக்கிய நிகழ்ச்சிகள் இவற்றை விவரித்து, உன்னுடைய சுய சரிதையை ஒரு பக்கத்தில் எழுது.

iv. பிற நூல் ஆராய்ச்சி ;—மகாத்மா காந்தி, ஸ்ரீயுத ஜவஹர்லால் நேரு, டாக்டர் உ. வே. சாமிநாதையர் இவர்களின் சுய சரிதைகள் தமிழில் பிரதானமானவை.

---

# 16. தேவாரம்

(பண்—குறிஞ்சி)

1. இப்பாசுரத்தைப் பண்ணுடன் படித்து, இஃது எந்த ஊரைப்பற்றியதென்றும், இதை இயற்றியவர் பெயர், ஊர், கோத்திரம் முதலியவற்றையும் கண்டறிக.

2. சீகாழியின் நிலவளத்தைக் குறிக்கும் சொற்றொடரை எடுத்தெழுது.

3. கடுவனும் மந்தியும் யாது செய்யும் ?

4. சிவபெருமான் பாம்பணி யுள்ளவன், சடையில் மதி தரித்தவன், யானைத்தோல் போர்த்தவன், மாதொரு பாகன், ரிஷப வாகனன் என்பது எந்தெந்தச் சொற்றொடரால் அறியப்படும் ?

நன்றுடையானைத் தீயதில் லானை நரைவெள்ளே
றொன்றுடை யானை யுமையொரு பாக முடையானைச்
சென்றடை யாத திருவுடை யானைச் சிராப்பள்ளிக்
குன்றுடை யானைக் கூறவென் னுள்ளங்குளிரும்மே.

கைம்மக வேந்திக் கடுவனோ டூடிக் கழைபாய்வான்
செம்முக மந்தி கருவரை யேறுஞ் சிராப்பள்ளி
வெம்முக வேழத் தீருரி போர்த்த விகிர்தா நீ
பைம்முக நாகம் மதியுடன் வைத்தல் பழியன்றே.
தேனமம் பாடுஞ் சிராப்பள்ளி யானைத் திரைசூழ்ந்த
கானல்சங் கேறுங் கழுமல வூரிற் கவுணியன்
ஞானசம்பந்த னலமிகு பாட லிவைவல்லார்
வான சம்பந்தத் தவரொடு மன்னி வாழ்வாரே.

பயிற்சி

i. **விளக்கவுரை:**—சம்பந்தர், அப்பர், சுந்தரர் இம் மூவரும் சிவபிரானைப்பற்றிப் பாடியுள்ள பாடல்கள் சிறப் பாகத் **தேவாரம்** என்று அழைக்கப்படுகின்றன. தேவாரம்= தே+வாரம். தே=தேவனை (மகா தேவனை)ப் பற்றிய, வாரம்=ஒழுகிய ஓசையும் விழுமிய கருத்தும் உள்ள ஒரு வகை இசைப் பாடல்.

நாகமும் சந்திரனும் பகைகொண்டவை என்பது கிரகணத் தைப்பற்றிய ஐதிகத்தால் அறியப்படும்.

ஏறு=காளை மாடு, ரிஷபம். உமை=பார்வதி. குன்று= உச்சிப் பிள்ளையார் மலை. கடுவன்=ஆண் குரங்கு. மகவு= குழந்தை. ஊடி=பிணங்கி. வரை=மலை. வேழம்=யானை. உரி=உரித்த தோல். பைம்முகம்—பசுமையான முகத்தை யுடைய. கழை—மூங்கில், கரும்பு. திரை=அலை. கானல்= உப்பங்கழி (கால்வாய்). கழுமலம்—சீகாழி. கவுணியன்— கவுண்டின்ய கோத்திரத்தில் பிறந்தவன். மன்னி—பொருந்தி.

ii. **இலக்கணம்** :—1. ஆண்பால் பெயர்களும் பெண் பால் பெயர்களும் இவைகளில் கலந்திருக்கின்றன. ஒவ்வொரு ஆண்பால் பெயரையும் எடுத்தெழுதி, அதற்குப் பொருத்தமான பெண்பால் பெயரையும் நேராக எழுது :

செல்வி, குருடன், மைத்துனன், இடைச்சி, தலைவி, ஒருவன், பாக்கியவதி, நாயகன், கூலிக்காரி, தட்டாத்தி, யாவன், உழவன், குருடி, இடையன், மைத்துனி, உழத்தி, தலைவன், யாவள், பாக்கியவான், தட்டான், நாயகி, கூலிக்காரன், பேர்த்தி, உபாத்தியாயர், யுவதி, பேரன், யுவன், உபாத்தியாயினி, செல்வன், ஒருத்தி.

2. வினைச் சொற்களுக்கும் திணை, பால், எண், இடம் உண்டு. தடித்த எழுத்தில் அச்சிட்டுள்ள சொற்களின் பாலையும், எண்ணையும் மாற்றி வாக்கியத்தை எழுது.

மாதிரி: **சிறுவர்கள்** பள்ளிக்கூடம் செல்லுகிறார்கள்.
சிறுமி பள்ளிக்கூடம் செல்லுகிறாள்.
எனக்குச் **சிற்றப்பன்** இருக்கிறான்.
**எருதுகள்** புல் மேய்கின்றன.
**வேலைக்காரன்** துணி தோய்ப்பான்.
**பையன்கள்** பந்தாடினார்கள்.
**பூக்கள்** மலர்ந்தன.

iii. **கட்டுரை:**—இரண்டாவது பாசுரத்தின் கருத்தை வசன நடையில் எழுது.

iv, **பிறநூல் ஆராய்ச்சி:** திருஞானசம்பந்தரது தாய் தந்தையர் பெயர், அவர் நிகழ்த்திய அற்புதங்கள் இவைகளை ஆறுமுக நாவலரது பெரிய புராண வசனத்தில் படித்தறிக.

———

# 17. பத்திரிகைச் செய்தி

## கால்நடைப் போட்டிக் காட்சி

(நமது நிருபர்)

திருவண்ணமலை, டிச. 24

கார்த்திகைத்தீப உற்சவ கால மாட்டுச் சந்தை வழக்கம்போல் கூடுவதை முன்னிட்டு இவ்வாண்டில் சிறப்பாகக் கால்நடைப் போட்டிக் காட்சி ஒன்று நடைபெற்றது. இக் காட்சியை விவசாய இலாகா டிரெக்டர் மிஸ்டர்—திறந்து வைத்தார்.

காரியக் கழகத்தாரின் தலைவராகிய ஸ்ரீமான் அண்ணமலை ரெட்டியார் அவர்கள் சபையோர்களுக்கு நல்வரவேற்புக் கூறி, காட்சியைத் திறந்து வைக்கும்படி டிரெக்டரவர்களை வேண்டிக் கொண்டனர். அவர் கூறியதாவது :—

“அவைத் தலைவரவர்களே, சபையோர்களே !

எமது அழைப்புக் கிணங்கி இங்குக் குழுமியுள்ள சகோதர சகோதரிகளுக்கும், இக்காட்சியைத் திறந்து வைக்க இயைந்து ஈண்டு விஜயஞ் செய்துள்ள மிஸ்டர் — அவர்களுக்கும் காரியக் கழகத்தின் சார்பாக எனது மனமார்ந்த நன்றியைச் செலுத்துகிறேன்.

இத்தலத்தில் கால்நடைச் சந்தை ஆண்டுதோறும் கூடுவது வழக்கமெனினும், கால்நடைகளின் போட்டிக் காட்சி இவ்வாண்டிற்றான் முதன்முதல் நடைபெறுகிறது. இக்காட்சிக்குச் சுற்றுப்புற ஜில்லாக்களினின்றும் புஷ்டியாக வளர்க்கப்பட்ட பல சாதிக் காளைகளும் பசுக்களும் வந்துள்ளன.

இவ்விதப் போட்டிக்காட்சிகள் நடத்துவது நமது கிராமவாசிகளைக் கால்நடைப் பராமரிப்பில் தனிக் கவனஞ்

செலுத்துமாறு ஊக்கு மென்று நம்புகிறோம்.

முதல் தரமாக வளர்க்கப் பட்ட காளைகளையும் பசுக் களையும் தேர்ந்து கூற ஸ்ரீமதி லீலா சங்கரையும், மிருக வைத்திய டாக்டரையும், நகர சபைத் தலைவரையும் நீதிபதிகளாக இருக்க வேண்டியுள்ளோம். அவர் களின் தீர்ப்புப்படி சீரிய முறையில் பராமரிக்கப் பட்ட கால்நடைகளின் சொந்தக்காரர்களுக்குப்பரிசு கள் வழங்கப்படும்.

மறுமுறையும் உங்களுக்கு நல்வரவும் நன்றியும் கூறி, விவசாய இலாகா டிரெக்ட ரவர்களை இக்காட்சியைத் திறந்து வைக்குமாறு வேண்டுகிறேன்."

விவசாய இலாகா டிரெக் டர் தமது திறப்புரையில் பின் வருமாறு கூறினர்: "சகோதரிகளே! சகோ தரர்களே!"

இவ்வரிய காட்சியைத் திறந்து வைக்கும் பெரு மையை எனக்களித்ததற் காகக் காரியக் கழகத்தாருக் கும், சிறப்பாக அதன் தலை வராகிய ஸ்ரீயுத அண்ணா மலை ரெட்டியாரவர்கட்கும் எனது நன்றியைத் தெரிவித் துக்கொள்கிறேன். ஒரே தருணத்தில் ஆயிரக்கணக் கான கால்நடைகளைக் காண் பது நம்மனைவர்க்கும் மட் டற்ற மகிழ்ச்சி யளிக்கிற தல்லவா?

நமது தேசம் பயிர்த் தொழிலை உயிர்த்தொழி லாகக் கொண்டுள்ளது. அப் பயிர்த் தொழிலுக்கு ஆடு மாடுகள் இன்றியமையா தன. விவசாயிகளுக்கு மக் கட் செல்வத்துக்கு அடுத்த படியாக வுள்ளது கால் நடைச் செல்வமே. நமது மொழியில் மாடு என்ற சொல்லுக்குச் செல்வம் என்று பொருள். இதன் காரணம், மிகப் பழமை யான காலத்திலிருந்து மனி தர்களுக்கு மாடே செல்வ மாக இருந்தது என்பதே. இக்கால்நடைகளின் பரா மரிப்பில் மே. த. வைஸ்ராய் லின்லித்கோ பிரபு அவர் களுக்கு உள்ள பேரூக்கம் யாவரு மறிந்ததே. பொலி

காலைகளைக் கிராமந்தோறும் வாங்கி வைத்து, உயர்சாதி மாடுகளை விருத்தி செய்வது கிராமத்தாரின் கடமையாகும். ஸ்ரீமான் அண்ணமலை ரெட்டியாரவர்கள் தெரிவித்தவாறு, இவ்விதப் போட்டிக் காட்சிகள் கால் நடைகளின் அபிவிருத்தியில் பொது மக்களுக்கு அதிக சிரத்தை உண்டு பண்ணு மென்பதற் கையமில்லை.

இத் தருணத்தில் இந் நகரத்தாருக்கு ஒரு வேண்டுகோள்: சுத்தமான பாலின் தேவையைப்பற்றி உங்களுக்கு நான் எடுத்தியம்புவது மிகையாகும். பல உயர் தரப் பசுக்களை வாங்கி வைத்து, பால் பண்ணையொன்று இவ்வூரின்கண் கூட்டுறவு முறையில் நடத்துவதற்கான ஏற்பாடுகளை நிர்ணயிக்க நீங்கள் முன்வர வேண்டும். இதுபற்றிக் கூட்டுறவு இலாகா அதிகாரிகளிடமும் பேசியுள்ளேன். இறைவனருளால் அது விரைவில் நிறைவேறிப் பெரும் பயனளிக்குமென்று நம்புகிறேன். மறுமுறையும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, இக்காட்சியைத் திறந்து வைக்கிறேன்."

வந்தனோபசாரம் கூறியதும், அனைவரும் கால்நடைகளைப் பார்வையிட்டனர்.

### பயிற்சி

i. வினாக்கள்:—1. கால்நடைப் போட்டிக் காட்சி நடத்துவதால் ஏற்படும் நன்மை யாது?

2. பால் பண்ணையின் பிரயோசனங்களை விவரிக்க.

ii. அரும்பதங்கள்:—திருபர், பத்திராதிபர், தலையங்கம், சந்தா, மே. த., விவசாய இலாகா, கூட்டுறவு இலாகா, காரியக் கழகம், திறப்புரை—இவைகளுக்கு விளக்கவுரை அறிக. இவைகளை உபயோகித்து வாக்கியங்கள் அமைக்க.

ஸ்தலம் என்னும் வடமொழிச் சொல் தமிழில் தலம் என வரும். புஸ்தகம் = புத்தகம்; வஸ்திரம் = வத்திரம்.

மிஸ்டர், டிரெக்டர் இவை தமிழ்ச் சொற்களா? இதேபோல் வேறு இரு பதங்கள் இப்பாடத்தில் கண்டுபிடி.

iii. **இலக்கணம் :**

முருகன் வந்தான்.
முருகனைக் கண்டேன்.
முருகனால் வீடு கட்டப்பட்டது.
முருகனுக்குப் புத்தகம் தந்தான்.
முருகனின் கந்தன் சிறியவன்.
முருகனது பசு.
முருகனிடம் பணம் இருந்தது.
முருகா! பாடம் படி.

முருகன் என்ற பெயர்ச் சொல் முருகன், முருகனை, முருகனால், முருகனுக்கு, முருகனின், முருகனது, முருகனிடம், முருகா—என இவ்விதம் உரு மாறுதலால் பொருள் வேற்றுமைப்படுவதைக் கவனியுங்கள். பெயர்ச்சொல்லின் பொருளை வேறுபடுத்துவது **வேற்றுமை** யாகும். பெயர்ச் சொற்களின் பொருளை வேறுபடுத்த இறுதியில் வரும் இடைச் சொற்கள் **வேற்றுமை உருபுகள்** எனப் பெயர் பெறும். அந்தந்த வேற்றுமைக்குச் சேர்க்கும் உருபுகளாவன :

முதல் வேற்றுமை : உருபு இல்லை.

| | | | |
|---|---|---|---|
| 2-ம் | ,, | : ஐ | உருபு |
| 3-ம் | ,, | : ஆல், ஒடு | ,, |
| 4-ம் | வேற்றுமை | : கு | ,, |
| 5-ம் | ,, | : இன், இருந்து | ,, |
| 6-ம் | ,, | : அது, உடைய | ,, |
| 7-ம் | ,, | : இல், இடம் | ,, |
| 8-ம் | ,, | : ஏ | ,, |

எட்டாம் வேற்றுமையை விளி வேற்றுமை யென்றும், முதல் வேற்றுமையை எழுவாய் வேற்றுமையென்றும் சொல்வதுண்டு.

iv. **பேச்சுப் பயிற்சி:**—பின்வரும் விஷயங்களில் ஒன்றைப்பற்றி வகுப்பின் முன் வந்து பேசு.

1. மாணவர் சங்கத்தில் தலைமை வகிக்க ஒருவரை வேண்டிக்கொள்ளுதல். 2. கூட்ட முடிவில் வந்தனம் கூறுதல்.

v. **பிறநூல் ஆராய்ச்சி:**—தமிழ் நாட்டில் பிரசுரிக்கப் படும் தினத் தாள், வாரப் பத்திரிகை, மாத சஞ்சிகை, ஆண்டு மலர் எவை? வகைக்கு இரண்டின் பெயரை எழுதுக.

---

# 18. பயிற்சிப் பாடம் IV

இதுவரை படித்த பாடங்களில், . ; ? ! இவைபோன்ற நிறுத்தக் குறிகளை அடிக்கடி கவனித்திருக்கிறீர்கள் அல்லவா? இவை எதற்காக, எங்கெங்கே போடப்படுகின்றன?

ஒருவர் படிக்கும்போது படிப்போர்க்கும் கேட்போர்க்கும் கருத்து விளங்கும்படியும், இனிய ஓசை நயத்தோடும் வாசித்தல் வேண்டும். வாக்கியங்களை எங்கெங்கு, எவ்வளவு நேரம் நிறுத்தவேண்டு மென்பதையும், எவ்வித உணர்ச்சியோடு வாசிக்கவேண்டுமென்பதையும் அறிந்து வாசித்தாலொழியப் பொருள் விளங்காது. அவ்வாறு நிறுத்தவேண்டிய இடங்களை உணர்த்தும்பொருட்டு

வாக்கியங்களில் சில குறிகளை உபயோகிக்கிறோம். அவைகள் நிறுத்தக் குறிகள் எனப்படும். ஆகவே, நாம் ஒன்றைப்பற்றி எழுதும்பொழுது ஆங்காங்கு பொருத்தமான நிறுத்தக் குறிகளை அமைத்து எழுதவேண்டும்.

இதைப் படித்துப் பார் :

'புஷ்பங்களில் ரோஜா பறவைகளில் கிளி மிருகங்களில் மான் இவை கண்கவரும் வனப்பு வாய்ந்து மனோகரமானவை யென்று யாவராலும் போற்றப்படுகின்றன வன விலங்குகளாகிய மான்களின் பளபளப்புள்ள மேனியும் மிரளும் கண்களும் மெல்லிய கால்களும் இலேசான உடலும் துள்ளிக் குதித்தோடும் பரபரப்பும் அச்சக் குணமும் சாதுத் தன்மையும் பார்ப்போருக்கு மகிழ்ச்சியளித்து ஒருவித உல்லாசத்தை விளைவிக்கின்றன.

நிறுத்தாமல் ஒரே மூச்சில் வாசிக்க முடிகிறதா ? பொருள் விளங்கும்பொருட்டு எந்தெந்தச் சொற்களின் முடிவில் நிறுத்தவேண்டியிருக்கிறது ? அவ்விதம் நிறுத்த வேண்டிய இடங்களில் ஒரு சிறிய செங்குத்துக் கோடு இடு.

வாக்கியங்களில் சிறு கோடுகளுக்குப் பதிலாக நிறுத்தக் குறிகள் இடுவது வழக்கம், நிறுத்தக் குறியென்பது நிறுத்திப் படிக்கவேண்டிய கால அளவைக் குறிப்பதாம்.

. இது முற்றுப்புள்ளி. இக்குறியை ஒவ்வொரு வாக்கியத்தின் முடிவிலும் அமைக்கவேண்டுமென்று முன்னமே அறிந்திருக்கிறோம். முற்றுப்புள்ளியுள்ள இடத்தில் நான்கு மாத்திரை நேரம் நிறுத்தவேண்டும்.

மாத்திரை யென்பது கண்ணிமைப்பொழுது அல்லது கைநொடிப்பொழுதாம்.

, இது காற்புள்ளி(கமா)அடையாளம். முற்றுப்புள்ளி யுள்ள இடத்தில் நிறுத்தும் நேரத்தில் கால்பங்கே காற் புள்ளியுள்ள இடத்தில் நிறுத்தவேண்டும்.

காற்புள்ளி போடவேண்டிய இடங்கள் :

(க) காட்டில் யானை, சிங்கம், புலி, மான் முதலிய மிருகங்கள் உண்டு.

இவ்விதம் பல பெயர்ச் சொற்கள் தொடர்ந்து நிற் கும்பொழுது, ஒவ்வொன்றுக்கும் இடையில் காற்புள்ளி போடுவது வழக்கம்.

(உ) ஆகையால், அவன் வருந்தினன். ஆனல் அது சரியன்று.

ஆகையால், ஏனெனில், என்றாலும், ஆனல் முதலிய சொற்களுக்குப் பிறகும் காற்புள்ளி போடுவதுண்டு.

(ச) தேவதை சொல்வதைக் கேட்டு, அதைப்பற்றி நினைத்து, பின்பு மகிழ்ச்சி யடைந்தான்.

ஒரே வாக்கியத்தில் பல வினைச்சொற்கள் தொடர்ந்து வரும்போதும் காற்புள்ளி இடவேண்டும்.

(ரு) அம்மா, இங்கே வா.

விளியாக வரும் ஒரு பெயருக்குப் பின்னும் காற் புள்ளி அடையாள மிடுவதுண்டு.

பயிற்சி :—கோடு உள்ள இடங்களில் காற்புள்ளி அல்லது முற்றுப்புள்ளி அமை.

புள்ளிமான் - கலைமான் - கவரிமான்-கஸ்தூரி மான் - பனிப்பிரதேசக் கலைமான் என மான்களிற் பலவகையுள- எஸ்கிமோ என்னும் சாதியார் - உறைபனிமேல் ஓடும் சக்கரமற்ற ஒருவகை வண்டிகளை இழுக்க இவைகளை உபயோகிப்பதுடன் - இவற்றின் பாலை அருந்தியும் - புலாலைப் புசித்தும் - தோலை உடையாகத் தரித்தும் - எலும்புகளை ஆயுதங்களாக ஆக்கியும் பிழைத்து வருகின்றனர் -

இதை வாசித்துக் கவனி:

மலையும், மலை சார்ந்த இடமும் குறிஞ்சி நிலம் எனப்படும்; அது குறவர் முதலியோருக்கு உறைவிடமாகும்.

'மலையும்' என்னும் சொல்லுக்குப் பிறகு நிறுத்தும் நேரத்தைவிட அதிக நேரம், 'எனப்படும்' என்பதற்குப் பிறகு நிறுத்தவேண்டியிருக்கிறதல்லவா ?

; இது அரைப்புள்ளி (செமிகோலன்) அடையாளம். அரைப்புள்ளி இடத்தில் இரண்டு மாத்திரை நேரம் நிறுத்த வேண்டும்.

? இது வினாக் குறி (கேள்விக் குறி) ' வினா வாக்கியங்களின் முடிவில் முற்றுப்புள்ளிக்குப் பதிலாக இக் குறி அமைக்கவேண்டும். (உ-ம்) அவன் வந்தானா? பெட்டியைத் திறந்தது யார் ?

! இது வியப்புக் குறி (ஆச்சரியக் குறி, விளிக் குறி). வியப்பு, புகழ்ச்சி, இகழ்ச்சி, பயம், கோபம், இரக்கம் முதலிய உணர்ச்சிகளையும், விளித்தலையும் குறிக்குமிடங்களில் இக்குறி அமைக்கப்படும். (உ-ம்) ஆகா ! என்ன விந்தை. அந்தோ ! பாவம் . வாருங்கள் ! வாருங்கள் !!

“ ” இது மேற்கோள் குறி (நேர்கூற்றுக் குறி). ஒருவன் சொன்ன சொற்களை அவன் நேரில் கூறுவது போல் எழுதும்போது இக்குறியை உபயோகிக்க வேண்டும்.

(உ-ம்) “என் இனிய சிறிய பாடகி” என்று காந்தியடிகள் சரோஜினியை அழைப்பர்.

முற்றுப் புள்ளி, அரைப்புள்ளி, காற் புள்ளி இவை கருத்தை விளக்க இடும் நிறுத்தக் குறிகள். இவைகளில் நிறுத்துங் கால அளவு மாறுபடுகிறது. வினக் குறி, வியப்புக் குறி, மேற்கோள் குறி இவைகள் வாக்கியத்தின் தன்மையைக் காட்டுவன. இவை ரூபக் குறிகள் எனப்படும்.

பயிற்சி

பொருத்தமான நிறுத்தக் குறிகள் அமைக்க:

பாண்டு மன்னனுக்குக் குந்தி மாத்திரி என மனைவிமார் இருவர் புதல்வர் ஐவர் தருமன் வீமன் அருச்சுனன் நகுலன் சகாதேவன் என்பவர் இவர்கள் திருதராட்டிரனல் பாதுகாக்கப் பெற்றனர். ஏன் திருதராட்டிரன் மூத்த தந்தை வீமன் அருச்சுனன் நகுலன் சகாதேவன் என்ற இந்நால்வரும் தமது தமையனுகிய தருமனது வார்த்தைகளைப் பொன்போலப் போற்றி வந்தனர் என்னே இவர்களது அன்பு.

---

# 19. தாயே! இதோ உன் தனயன் கடிதம்

[திரு. தி. பொ. திரிகூட சுந்தரம் பிள்ளை, M. A., B. L.]

**படித்துக் கண்டுபிடி (10 நிமிடத்துக்குள்):** 1. தனயன் பெயர் யாது? அவனுக்கு என்ன நேர்ந்தது? எவ்வாறு?

2. தாயின் மனம் முறிந்ததை எவ்வாறு கவிஞர் புலப் படுத்துகிருர் ?

3. இக்கதை நம் நாட்டுக் கதை அன்று என்பதை எச் சொற்களால் ஊகிக்கிருய் ?

அப்பா! வயலிலிருந்து வாரும்; இதோ நம் பிட்ட ரிடமிருந்து ஒரு கடிதம்.

அம்மா! வயலுக்கு வாரும்; இதோ உம் அருமை மகனிடமிருந்து ஒரு கடிதம்.

அதோ, மரங்கள் பச்சைப் பசேலென்று குளிர் நிழல் கொடுத்து நிற்கின்றன; இலைகள் காற்றில் அலை கின்றன.

தோப்புக்களில் ஆப்பிள் பழுத்துத் தொங்குகின்றன; கொடிகளில் திராட்சை கொஞ்சுகின்றன.

உயர, வானத்தில் அவ்வளவு அமைதி, அவ்வளவு தெளிவு, விந்தையான மேகங்கள்.

கீழும் எல்லாம் அமைதியே, எல்லாம் அழகே, விளை வும் மிகுதியே.

அதோ வயல்களில் அனைத்தும் செழிப்பே. ஆனல் இப்பொழுது மகள் அழைக்கவே தந்தை வயலிலிருந்து வருகின்ருர்; ஆமாம். தாயும் வாயிலுக்கு வருகின்ருள்.

விரைந்து வருகின்ருள்—மனத்தில் கலக்கம்—நடை யில் பதட்டம்—குழலில் குலைவு—

கடிதத்தைச் சீக்கிரம் திற—கடிதத்தைச் சீக்கிரம் திற; ஓகோ, இது நம் மகன் கையெழுத்தன்று; ஆயினும் இது அவன் கையொப்பமே.

ஓகோ, நம் மகனுக்காக வேறு யாரோ எழுதியுளர். ஐயோ துயருறும் தாயின் ஆன்மாவே!

அவள் கண்முன் அனைத்தும் சுழல்கின்றன; முழு வாக்கியங்கள் கேட்கவில்லை; முக்கியமான மொழிகளே செவியில் விழுகின்றன—

"குதிரைப் படைச் சண்டை, குண்டுக் காயம் மார்பில், வைத்தியசாலையில் சயனம், அசௌக்கியம் இப்பொழுது, ஆனால் சீக்கிரம் குணம்"—

ஆகா, அன்னையின் முகம் நோயுற்று வெளுத்துவிட்டது; தலையில் மயக்கம்; நிற்க முடியாது கதவில் சாய்கின்றாள்.

"அம்மா! அன்னம் அயரேல்" என்று பெரிய மகள் அழுதுகொண்டே கூறுகிறாள்.

சிறு குழந்தைகள் வாய் பேசாது மனம் திகைத்துச் சூழ்ந்துகொள்கின்றன.

"அம்மா, இதோ பார், பீட்டர் சீக்கிரம் குணமடைவான் என்று கடிதம் கூறுவதைக் கேள்."—

ஐயோ, அவன் ஒரு நாளும் குணமடையான்—வாயிற்படியில் அவர்கள் வருந்தி நிற்கும்பொழுதே அவன் மடிந்துபோனான்—ஒரே மகன் உயிர் துறந்துவிட்டான்.

ஆனால் தாய் குணமடையத் தேவை—கறுப்புடை தேகம் மெலிவு—பகலில் உணவு தொடுவதில்லை—இரவில் தூக்க மில்லை—அழுவதும் ஏங்குவதும்—ஆண்டவனை இறைஞ்சி வேண்டுவதுமே—

"இறைவா! யாவரும் அறியாவண்ணம் வாழ்வினின்றும் மௌனமாய்த் தப்பி வெளிப்போந்து என் அருமந்தச் செல்வனைத் தேடி, அவனோடு கூடியிருக்க அருள மாட்டாயா? இறைவா! என் பிரார்த்தனை இதுவே."—

### பயிற்சி

[வால்ட் விட்மன் என்னும் அமெரிக்கக் கவிஞர் எழுதியுள்ள வசன காவியங்களில் ஒன்றன் மொழி பெயர்ப்பு. 'புல்லிதழ்' என்னும் புத்தகத்தில் உள்ளது.]

i. விளக்கவுரை:—1. இது ஒரு குடும்ப வாழ்க்கைச் சித்திரம். இதில் கவிஞர் சொல்லாமற் சொல்லிப் பல விஷயங்களை ஊகிக்கச் செய்கிறார். முந்திய பாகத்தில் இயற்கை வனப்பையும் அமைதியையும் காட்டி, அதற்கு நேர்மாறாகப் பிந்திய பாகத்தில் குடும்பத்தாரின் மனக் கொந்தளிப்பையும், சோகத்தையும் வர்ணிக்கிறார். இந்த உணர்ச்சி ததும்பும் நயங்களை ஆய்ந்தறிக. இது ஒரு வசன கவி. எளிய நடையை ஓர்க.

கடந்த ஐரோப்பிய யுத்தத்தில் தினசரி நிகழ்ந்த தாங்கொணாத் துயரத்தை இது நன்கு விளக்குகிறது.

யாழ் வென்றி இன்ப முடிவுள்ள கதை; இது துன்ப முடிவுள்ள கதை. வேறுபாடு ஓர்க.

2. பாடத்தைப் பார்க்காமல் ஞாபகத்திலிருந்து கோடிட்ட இடங்களைப் பூர்த்தி செய். பிறகு பாடத்துடன் ஒப்பிட்டுப் பார். பிழைகள் எத்தனை என்று கண்டுபிடி. இதிலிருந்து உனது ஞாபக சக்தி எவ்வளவு என்பது விளங்குமல்லவா?

1. மரங்கள் பச்சை——— குளிர்——— கொடுத்து நிற்கின்றன.
2. கொடிகளில் திராட்சை ——,
3. வயல்களில் அனைத்தும் ——.
4. மனத்தில் ——.

5. கடையில் ——.
6. இறைவா என் —— இதுவே.
7. அன்னையின் முகம் —— ——விட்டது; கதவில் ———.

ii. இலக்கணம் :—

1. கீழ்க்கண்ட வார்த்தைகளில் ஐ, ஆல், கு, இன், உடைய, இல் (இடம்) இவ்வுருபுகளைச் சேர்த்து எழுது:

நீ, புலி, மரம், கை, நான்.

மாதிரி :—அவள், அவளை, அவளால், அவளுக்கு, அவளின், அவளுடைய, அவளிடம்.

பெயர்ச்சொல்லின் இலக்கணம் :—ஒரு பெயர்ச் சொல்லின் இலக்கணம் கூறு என்றால், அதன் திணை, பால், எண், இடம், வேற்றுமை, முடிவு இவைகளைச் சொல்ல வேண்டும்.

மாதிரி :—இராமன் சீதையை மீட்டான்.

இராமன் :—பெயர்ச்சொல், உயர் திணை, ஆண்பால், ஒருமை, படர்க்கை, முதல் வேற்றுமை, மீட்டான் என்னும் வினைமுற்றைக்கொண்டு முடிகிறது.

கோடிட்ட பெயர்ச்சொற்களுக்கு இலக்கணம் கூறு:

<u>இலைகள் காற்றில்</u> அலைகின்றன.

<u>தாயும் வாயிலுக்கு</u> வருகின்றாள்.

iii. கட்டுரை :—

12-வது பத்தியை ஒரு தந்திச் செய்தியாகக் கருதி, அதன் கருத்தை விரிவுபடுத்திப் பத்து வாக்கியங்களுக்குக் குறையாமல் ஒரு பாராவாக எழுது.

இதே விதம் 18-வது பத்தியையும் ஐம்பது சொற்களுக்குக் குறையாத ஒரு பாராவாக எழுது.

# 20. கவியரசி சரோஜினி தேவி

## [ஸ்ரீமதி ஸ்வர்ணம்பாள்]

விடை கண்டுபிடி :

1. முகப்பிலுள்ள சரோஜினி தேவியின் படத்தை உற்று நோக்கி, அவரது தோற்றப் பொலிவைப்பற்றி மூன்று வாக்கியங்கள் வரைக.

2. இக்கட்டுரை பின்வரும் தலைப்புக்கள் வகுத்துக் கொண்டு எழுதப்பட்டது: i. முன்னுரை, ii. சரோஜினி தேவியின் பிறப்பு, வளர்ப்பு, iii. இளமைப் பருவம், iv. கவிதா சக்தி உதித்தல், v. கல்வி, vi. குடும்பம், vii. பேச்சு வன்மை, viii. இயற்றிய நூல்கள், ix. முடிவுரை.

இத் தலைப்புக்களை அததற்குப் பொருத்தமான பத்தியின் ஓரத்தில் குறிக்க.

3. இப்பாடத்தில் வந்துள்ள பழமொழிகள் யாவை ?

4. சரோஜினியின் பேச்சு வன்மையை விவரிக்கும் வாக்கியங்களைப் பொறுக்கி எழுது.

5. அவரது கவி நயங்களை விளக்கும் வாக்கியங்களைக் கண்டெழுது.

6. 'என் இனிய சிறிய பாடகி'—இது யார் கூறியது ?

இக்காலத்து இந்திய மாதர்களில் தலைசிறந்து விளங்குபவர் சரோஜினி தேவியார் என்பது யாவரும் உணர்ந்ததே. ஸ்ரீமதி சரோஜினி ஆங்கில மொழியில் இனிய கவிகள் இயற்றியும், சொல்லழகும், பொருளழகும் பொருந்திய சொற்பொழிவுகள் நிகழ்த்தியும், அரிய சமூக சேவை புரிந்தும், உலகப் புகழையும், சர்வதேச மதிப்பையும் பெற்றுள்ளார். இக் கவியரசியின் வாழ்க்கை வரலாற்றை நீங்கள் அறியவேண்டுமல்லவா?

ஸ்ரீமதி சரோஜினி 1879-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 13உ ஐதராபாத்தில் தோன்றினர். இவரது தந்தை அகோரநாத் சட்டோபாத்தியாயர் வங்காளத்தைச் சார்ந்த அந்தணர். இவர் சீமை சென்று எடின்பரோ சர்வகலா சாலையில் விஞ்ஞானக் கல்வி பயின்று, திரும்பி வந்து ஐதராபாத்தில் நிஜாம் கலாசாலை ஏற்படுத்திக் கல்வித் துறையில் சிறந்த சேவை செய்துகொண்டிருந்தார். குழந்தை சரோஜினி மிகுந்த அழகும் மதி நுட்பமும் உள்ளவளாக இருந்ததால், தாய் தந்தையர்க்கு அவள்மீது அளவிலா அன்பு.

'விளையும் பயிர் முளையிலே தெரியும்' என்பதற்கிணங்க, ஸ்ரீ சரோஜினி தேவி இளமைப் பருவத்திலிருந்தே சிறந்த மேதையாக விளங்கினர்; கல்வி கற்பதில் வெகு ஆர்வமும் சிரத்தையும் காட்டினர்.

தமது புதல்வி கணிதம், விஞ்ஞானம் இவ் விரண்டிலும் தேர்ச்சியடைந்து, அரிய ஆராய்ச்சிகள் செய்து பெரும்புகழ் அடைய வேண்டுமென்று தந்தையார் விரும்பினர். ஆனல், மகளது இயல்போ இதற்கு நேர்மாருக இருந்தது. காவிய ஆராய்ச்சி செய்வதிலும், கவிதைகள் புனைவதிலும் அவரது மனம் சென்றது. இதைப்பற்றி ஒரு முறை வேடிக்கையாக சரோஜினியே பின்வருமாறு கூறியிருக்கின்ருர்:

"எனது பதினோராம் பிராயத்தில் பீஜ கணிதத்தில் ஒரு கஷ்டமான கணக்கைப் போட்டுக்கொண்டிருந்தேன். வழி தெரியவில்லை. 'அதைப் போட்டு முடிக்காமல் வெளியே போகக்கூடாது' என்பது தந்தையின்

கண்டிப்பான கட்டளை எப்படியாவது போட்டுவிடுவோ மென்றுதான் பலகையை எடுத்தேன். அப்பொழுது என் மனத்தில் ஓர் அருமையான கவிதான் உதித்தது. உடனே அதை ஏட்டில் எழுதிப் பார்த்தேன். அன்று முதல் கவி பாடலானேன். பதின்மூன்றாவது வயதிலே 'ஏரிக்கரைச் சீமாட்டி' என்பதைப் பொருளாகக் கொண்ட ஒரு கவி இயற்றினேன். அந்தக் கவி 1,300 வரிகள் கொண்டது. பாடி முடிக்க ஆறு நாளே பிடித்தது."

சரோஜினி தேவி தமது பன்னிரண்டாம் வயதில் சென்னைச் சர்வகலாசாலையில் பிரவேசப் பரீட்சையில் முதன்மையாகத் தேறினர். அந்த இளம் வயதிலேயே சிறந்த பேச்சு வன்மை பெற்றிருந்தார். அதனுல் இவருடைய புகழ் அகில இந்தியாவிலும் பரவத் தொடங்கிற்று. பின்னர், உயர்தரக் கல்வி பயிலும்பொருட்டு, 1895-ம் ஆண்டு இங்கிலாந்து சென்றூர். மூன்று வருடங்கள் அங்கே 'கிங்ஸ் கலாசாலை'யில் கல்வி பயின்றூர். உடல்நிலை காரணமாக அங்கே அதிகம் தாமதிக்க முடியவில்லை. தாய்நாட்டிற்கு வருமுன் இத்தாலி தேசம் சென்றூர். அங்கே அத்தேசத்தின் இயற்கை வனப்பும், அழகிய ஓவியங்களும், கண்ணைக் கவரும் சிற்ப வேலைகளும் அவரது பிறவித் திறமையாகிய கவிதா சக்தியை மேலும் தூண்டின. 1898-ம் ஆண்டு செப்டம்பர் மீ தமது தாய்நாடு திரும்பினர்.

சில நாட்களுக்குப் பிறகு டாக்டர் நாயுடு என்கிற 'பிரம்ம சமாஜி'யை மணந்துகொண்டார். தேவியாருக்கு இரு புதல்வரும், இரு புதல்விகளும் இருக்கிறூர்கள்

அவர்களுள் பத்மஜா என்னும் பெண்மணி 'தாயைப் போலப் பிள்ளை' என்பதற்கொப்பப் பல கலைகளையும் பயின்ற அறிவாளி; சமூக சேவையில் ஈடுபட்டுள்ளாள்.

நமது நாட்டில் மட்டுமன்றி ஸ்ரீமதி சரோஜினி தேவி அமெரிக்காவிலும், இன்னும் இதர மேற்றிசை நாடுகளிலும் சென்று பல அரிய சொற்பொழிவுகள் நிகழ்த்தியிருக்கிறார். இவர் பேச ஆரம்பித்தால் தங்கு தடையின்றி வாக்கியங்கள் மழைபோல் பொழியும். குயிலினு மினிய குரலால் அவர் உணர்ச்சியுடன் பேசுவது இன்னிசை போன்றிருக்கும்; கேட்போர் இதயத்தில் ஆவேசத்தையும் உற்சாகத்தையும் மூட்டும்.

இவரது கவிதைகள் பெரும்பாலும் ஆங்கிலத்திலேதான் இயற்றப்பட்டிருக்கின்றன. இவரது கவிதைகளுள் "தாய் நாடு அளித்த செல்வம்" என்கிற கவிதை மிகவும் சிறந்ததென்று பலராலும் புகழப்படுகிறது. 'நாட்டுப் பாட்டுக்கள்' என்பவை எளிமையும் அழகும் கொண்டவை என்று கருதப்பட்டு, வாசக பாடங்களிலும் சேர்க்கப்படுகின்றன. சின்னஞ்சிறு அழகிய சொற்களின்மூலம், ஒவ்வொரு காட்சியையும் ஒரு நொடியில் நமது கண்களின் முன்னே சித்திரித்துவிடுகிறார். உதாரணமாக, 'வளையல் வியாபாரிகள்' என்னும் பாடலிலே வளையல்களின் விசித்திர விசித்திரமான நிறங்களை வருணிக்கும்பொழுது "அவைகள் வெறும் வளையல்களல்ல; வானவில்லிலே தோன்றும் எல்லா நிறங்களையும் தம்முட்கொண்ட ஒளி வளையங்கள்" என்று சொல்லுகிறார்.

'மருத்தோன்றி,' 'பல்லக்குத் தூக்கிகள்' முதலிய பாடல்களிலே, இவரது கற்பனைத் திறன் மனதைக் கொள்ளை கொள்ளும் வண்ணம் அமைந்திருக்கிறது. எளிய அழகிய சொற்களால் நமது இதயங்களிலே இன்பத் தேனைப் பாய்ச்சிவிடுகிறார். இவரது கவிதைகளைப் படிக்குந்தோறும் மெய்ம்மறந்து ஒரு கற்பனை உலகத்திற்கே போய்விடுகிறோம்.

"திறமான புலமையெனில் பிற நாட்டார்
அதை வணக்கம் செய்தல் வேண்டும்."

என்றார் பாரதியார். அதேபோல இவரது கவிதைகள் பிறநாட்டினரால் பெரிதும் போற்றப்படுகின்றன. 'கவி கோகிலம்' என்று பல கவிஞர்கள் புகழ்ந்திருக்கின்றனர். மகாத்மா காந்தியடிகள் 'என் இனிய சிறிய பாடகி' என்று இவரை அழைப்பது வழக்கம்.

உயர் வகுப்புகளில் கவியரசி சரோஜினி தேவியின் ஆங்கிலக் கவிகளைப் படிப்பீர்களாக!

### பயிற்சி

[இது ஒருவரது ஜீவிய சரிதத்தை எழுதும் முறையில் அமைந்த கட்டுரை. சுய சரிதைக்கும் இதற்கும் உள்ள வேறுபாடு அறிக.]

i. சொல் விளக்கம் :—ஓவியம்=சித்திரம். சிற்பம்= மண், கல் அல்லது உலோகத்தினால் பதுமை அல்லது கட்டடம் அமைக்கும் தொழில். அளவிலா=அளவில்லாத. மதி நுட்பம்=புத்திக் கூர்மை. இயல்பு=குணம், தன்மை. கோகிலம்=குயில்.

மேல் + திசை = மேற்றிசை.
இனிமை + இசை = இன்னிசை.

விளக்கவுரை அறிக :—பிரம்ம சமாஜி, விஞ்ஞானம்.

ii. இலக்கணம் :—

1. பகுதி, விகுதி :—பொருளின் தொழிலை உணர்த்துவது வினைச்சொல் என்று 11-ம் பாடத்தில் அறிந்துள்ளோம்.

வந்தேன், வந்தோம், வந்தாய், வந்தீர், வந்தான், வந்தாள், வந்தார், வந்தது, வந்தன—என வா என்னும் வினை மாறித் திணை, பால், எண், இடம் காட்டுவதைக் கவனி. வினைச்சொல் வேற்றுமை ஏற்காது.

செயலை உணர்த்தி வினைச்சொல்லின் முதலில் நிற்பது பகுதியாம்: இறுதியில் நிற்பது விகுதியாம். படித்தான் என்பதில் 'படி'—பகுதி, 'ஆன்'—படர்க்கை ஆண்பால் விகுதி. விகுதியால் பால், எண், இடம் இவைகளை அறியலாம்.

2. காலம் :—சரோஜினி கவி இயற்றினாள்.
சரோஜினி கவி இயற்றுகிறாள்.
சரோஜினி கவி இயற்றுவாள்.

இவ்வாக்கியங்களில் வினைச்சொல்லின் காலத்தைக் கவனிக்க. வினை நிகழ்ச்சி எப்பொழுது நிகழ்வது என்பதைத் தெரிவிப்பது காலம் ஆகும். அது இறந்த காலம், நிகழ் காலம், எதிர் காலம் என மூவகைப்படும்.

பகுதிக்கும் விகுதிக்கும் இடையில் நின்று காலங் காட்டும் எழுத்துக்கள் இடைநிலை எனப்படும். (உ-ம்) செய்தான்=செய்+த்+ஆன். த் இடைநிலை, இறந்த காலம் காட்டிற்று.

த், ட், ற், இன் என்பன இறந்த கால இடைநிலைகள். கிறு, கின்று நிகழ் கால இடைநிலைகள். ப், வ் எதிர்கால இடைநிலைகள்.

**பயிற்சி :—**

பின் வரும் ஒவ்வொரு வாக்கியத்திலுமுள்ள வினைச் சொல்லின் காலத்தை மற்ற இரண்டு காலங்களாகத் தனித்தனி மாற்றி வாக்கியத்தை எழுது.

1. சரோஜினி வந்தாளா ?
2. அவன் உண்டனன்.
3. மாடுகள் மேய்கின்றன.
4. இராமன் பாடங்களைப் படிப்பான்.

iii. கட்டுரை :—தமிழ்ப் புலவர் ஒருவரின் ஜீவிய சரிதையைப் படி, கட்டுரைக்கான குறிப்புக்கள் எழுதிக் கொள். பாட முகப்பில் கண்ட தலைப்புக்களின் கீழ் அவரது வாழ்க்கை வரலாற்றைச் சுருக்கி ஒரு பக்கத்தில் எழுது.

---

# 21. குரங்கும் குருவியும்

**கேள்விகள்**

1. இந்தக் கதையைச் சொன்னவரின் பெயரைக் கண்டறி.
2. குரங்கு கோபித்துக் கூறியது யாது ?
3. குரங்கின் நிலைமையை விவரிக்கும் சொற்றொடர்களை எடுத்தெழுது.
4. இந்தக் கதையின் நீதி எந்த வரிகளால் உணர்த்தப் படுகிறது ?

பாடுறு மூடனுக்குப் பற்பல போதித்தாலும்
வீடுடையவனை வீட்டை இழந்திடச் செய்வான் என்று
நேடுறு சன்மன் சொல்வான் நெடியதோர் பழுமரத்தில்
கூடு கொண்டன இரண்டு தூக்கணங் குருவி தாமே.

குளிரினல் நடுங்கி, வானக் கொடுமழையில் நனைந்து
நளிர் சுரத்தோடு தேகம் நடுக்கியே பற்கள் கிட்டி,
வளம் அறுகுரங்கொன்றங்கு வந்தது ; குருவி பார்த்தே
இளகிய மனத்தினலே இன்சொல்லும் ஒன்று சொல்லும்.

கைகள் கால் இருந்தும் இந்தக் கன்மத்தை அனுபவிக்
கும்
செய்தி ஏன் என்ன, 'ஊசி மூஞ்சி கொள் சிறிய மூடா,
வைது நீ புத்தி சொல்ல வல்லையோ?' எனக் கோபித்து
நெய்திடும் அதன்றன் கூட்டை நெடுங்கையால்
பிய்த்ததன்றே.

—வீரமார்த்தாண்ட தேவர்

### பயிற்சி

[இது பஞ்சதந்திரக் கதை. கட்டுக்கதை இனத்தைச் சார்ந்தது.]

i. சொல் விளக்கம் :—பாடுறு = துன்பப்படுகிற. நேடுறு = ஆராய்கின்ற. நளிர் = குளிர். கன்மம் = கருமம். இன்சொல் × வன்சொல்.

ii. பஞ்சதந்திரக் கதைகள் யாரால், எவருக்குச் சொல்லப்பட்டன? கேட்டறிக. இதை ஏன் கட்டுக்கதையென்கிறோம்?

iii. கட்டுரை :—இக்கதையை வசனமாக எழுது.

---

## 22. சுவாமி விவேகாநந்தரின் கடிதம்

**வினுக்கள் :**

1. பாடம் முழுவதையும் ஒரு தடவை கருத்தறிந்து வாசி. எத்தனை நிமிஷத்தில் படிக்க முடிகிறதென்று கவனி. பிறகு ஒவ்வொரு பாராவின் கருத்துக்கேற்பத் தலைப்புப் பெயர் அமை.

2. இச்சொற்றொடர்கள் வரும் சந்தர்ப்பங்களைக் கண்டறி: 'மானிட வனம்', சீனக் குழந்தை ஒரு பெரிய ஞானி, உத்தரவுச் சீட்டு, சுரங்கப் பாதை.

3. ஜப்பானியருக்கும் சீனருக்குமுள்ள குண வேற்றுமைகளைக் கூறு.

4. விவேகாநந்தர் சீனவில் பார்த்த ஆலயம் யாது?

5. விவேகாநந்தர் எந்தெந்த ஊர் வழியாகச் சென்று ஜப்பானை அடைந்தார்?

6. சுவாமி விவேகாநந்தர் இந்தியச் சிறுவர்களைக் கோருவது யாது?

யோகஹாமா,
1893-ஆம் ஜூலைமீ 10உ

பிரியமுள்ள———,

நான் எங்கெங்கே செல்லுகிறேன் என்பதைத் தங்களுக்கு அடிக்கடி தெரிவியாததற்கு மன்னிக்கவும். எவனும் சாதாரணமாகவே சுறுசுறுப்பா யிருக்கிறான். அதினும் முக்கியமாக, சாமான்களை ஜாக்கிரதையாய் வைத்துக்கொள்ளும் வாழ்க்கைக்குப் புதிதான எனக்கு அதிக வேலை இருக்கிறது. அதைப்பற்றிக் கவலைப்படுவதே எனக்குப் பெரும் தொந்தரவாக இருக்கின்றது.

நாங்கள் கொழும்புத் துறைமுகம் போய்ச் சேர்ந்தோம். நாங்கள் ஏறிச் சென்ற கப்பல் அங்கு ஒரு நாள் தங்கிற்று. ஊரைப் போய்ப் பார்ப்பதற்கு வாய்த்த சமயத்தை நாங்கள் வீணாக்கவில்லை. வீதிகள் வழியே சவாரி செய்தோம். சாய்ந்தபடியே நிர்வாண தசையிலிருந்த ஸ்ரீ புத்த தேவரின் திருவடிவுள்ள ஒரு ஆலயந்தான் நான் பார்த்தனவற்றுள் என் மனத்தில் நன்றாய்ப் பதிந்திருக்கிறது.

பிறகு மலய தீபகற்பத்தில் கடலோரத்திலுள்ள பினாங்கில் நாங்கள் தங்கினோம். மலய ஜனங்கள் அனைவரும் முகம்மதியர்கள். அவர்கள் முற்காலத்தில் பெயர்பெற்ற கடற்கொள்ளைக்காரர்களாயும், (கடலின்மூலமாய்) வியாபாரிகள் பயப்படும்படியானவர்களாயுமிருந்தார்கள்.

ஆனல் பல அடுக்குகளுள்ள தற்காலத்திய யுத்தக் கப்பலின் பீரங்கிகள் மேற்கூறிய மலேயர்களைச் சாத்விகத் தொழிலைக் கைப்பற்றச் செய்தன. பினங்கு, சிங்கப்பூர் போகும்பொழுது சுமத்ரா தீவு கொஞ்சம் புலப்பட்டது. போகும் வழியில், முற்காலங்களில் கடற் கொள்ளைக்காரர்கள் பிரியத்துடன் தங்கிய பல இடங்களைக் கப்பற்றலைவன் எனக்குக் காட்டினன். ஜலசந்திக் குடியேற்ற நாடுகளுக்குச் சிங்கப்பூர் தலைநகரம். பலவிதப் பனைமரங்களுள்ள தாவரக் காட்சிசாலை யொன்று இங்கிருக்கிறது. விசிறி வாழை இங்குச் செழுமையாக வளர்கின்றது. பலாமரம் எங்கு மிருக்கின்றது. சென்னையில் மாமரங்கள் இருப்பது போலவே இங்கே பேர்பெற்ற மங்கோஸ்டீன் என்னும் மரம் அபரிமிதமாய்க் காணப்படுகின்றது. ஆனாலும் நம் மாமரத்திற்கு ஈடாக ஒன்றும் கிடையாது. இப்பிரதேசம் பூமத்ய ரேகைக்கருகே இருந்தபோதிலும், ஜனங்கள் சென்னையிலுள்ளவரைப்போல் அவ்வளவு கறுப்பல்ல. சிங்கப்பூரில் நல்ல காட்சிச்சாலையு மிருக்கிறது.

அடுத்தது ஹாங்காங்கு. இங்குச் சீனர்கள் அதிகமாகக் காணப்படுவதாலேயே நாம் சீன தேசம் வந்துசேர்ந்தோமென்பது தெரியவரும். எல்லா வேலைகளும், வியாபாரமும் அவர்களிடமே இருக்கின்றன. ஹாங்காங்கே ஒரு சிறு சீன தேச மென்னலாம். கப்பல்கள் நங்கூரம் பாய்ச்சினவுடனே நூற்றுக்கணக்கான சீனப் படகுகள் ஜனங்களைக் கரைக்குச் சேர்க்கச் சூழ்கின்றன. இரண்டு சுக்கான்களுள்ள இப் படகுகள் விசித்திரமானவை. அதன் சொந்தக்காரன் அதிலேயே வசிக்கிறான். அவன் மனைவி அநேகமாய்ச் சுக்கான்களிடம் இருந்துகொண்டு ஒன்

றைக் கைகளாலும், மற்றொன்றைக் கால்களாலும் திருப்புகின்றாள். அநேகமாய் அவள் குழந்தை, கால்களையும் கைகளையும் வெளியே தொங்கவிட்டபடி அவள் முதுகில் ஒரு துணியில் கட்டப்பட்டிருக்கும். குழந்தை வெகு சாந்தமாய்த் தூங்கும்போது அவள் முழுப் பலத்தோடு படகைத் திருப்புவதையும், மூட்டைகளைத் தள்ளுவதையும் அல்லது வெகு சாமர்த்தியமாய்ப் படகுக்குக்குப் படகு தாண்டுவதையும் பார்த்தால் அதை ஓர் அதிசயமான காட்சி யென்றே சொல்லவேண்டும். இதனோடு சாதாரணப் படகுகளும், நீராவிப் படகுகளும் வெகு வேகமாக வருவதும் போவதுமாயிருக்கின்றன. இந்தத் தடபுடலில் பின்னிய கூந்தலுடைய சீனக் குழந்தையின் சிறு தலை பொடியாய்விடுமோ என்று நாம் பயந்தாலும் அந்தக் குழந்தை கொஞ்சமேனும் இலட்சியம் செய்வதில்லை. இவ்வித வாழ்வு அதற்குச் சந்தோஷமானதாகத் தோன்றுகிறது போலும்! பித்துப் பிடித்தவர்கள்போல் அங்குமிங்கும் அலைந்து வேலை செய்கிற அக்குழந்தையின் தாய்மார் கொஞ்ச நேரத்திற்கொருதரம் கொடுக்கும் இட்டிலி என்னவென்று அறிவதிலேயே அக்குழந்தை திருப்தியடைகின்றது. சீனக்குழந்தை ஒரு பெரிய ஞானி. நம் இந்தியச் சிறுவன் தவழுவதற்குமுன் சீனச் சிறுவன் சாவதானமாய் வேலைசெய்ய ஆரம்பிக்கிறான். தன் நிலைமைக்கேற்ற தத்துவ விசாரம் அவனுக்கிருக்கிறது. சீனர்களும் இந்தியர்களும் உயிரற்ற நாகரீகத்தில் அமிழ்ந்து கிடப்பதற்குக் காரணம் ஏழ்மைத்தனமே என்று சொல்லலாம். அன்றைக்கு வேண்டியவற்றைத் தேடுவதே ஓர் இந்துவுக்கும் சீனனுக்கும் நித்திய கண்டமா யிருப்பதால் வேறொன்றைப்பற்றியும் நினைக்க முடிவதில்லை.

ஹாங்காங்கு ஓர் அழகிய பட்டணம். அடிவாரத்தைவிடக் குளிர்ச்சியான ஒரு மலையின் உச்சியிலும் அதன் சாரல்களிலும் நகரம் கட்டப்பட்டிருக்கிறது. இருப்புக் கயிறுகளினுலும் நீராவியினுலும் இழுக்கப்படும் ஒரு ட்ராம் வண்டி செங்குத்தாய் மலையின் சிகரத்திற்குச் செல்கின்றது.

நாங்கள் மூன்று நாட்கள் ஹாங்காங்கில் தங்கி, பிறகு நதி வழியாய் 80 மைல் மேலேயுள்ள காண்டன் நகரத்தைப் பார்க்கப் போனேம். என்ன சந்தடி! என்ன ஜனங்களின் கூட்டம்! ஆற்றின் ஜலத்தை மறைக்கும்படியான கணக்கற்ற படகுகள்! வியாபாரம் செய்யும் படகுகள் நீங்கலாக, குடியிருக்கும் இடங்களாக உபயோகப்படும் படகுகள் நூற்றுக்கணக்கானவை. அவைகளில் பல பெரியவையாயும் நன்ருயுமிருக்கின்றன. சில, இரண்டு மூன்று மாடிகளும், சுற்றிலும் தாழ்வாரங்களும், நடுவில் வீதிகளும் கொண்டு மிதந்தபடியே இருக்கின்றன.

அயல் தேசத்தார் வசிப்பதற்காகச் சீன கவர்ன்மெண்டார் பிரித்துக் கொடுத்திருக்கும் இடத்தில் நாங்கள் தங்கினேம். ஆற்றின் இரு கரைகளிலும் மைல் கணக்காயிருக்கும் அப்பெரு நகரத்தில் ஜன சமூகம் என்னும் மானிட வனம் ஒருவரை யொருவர் தள்ளிக்கொண்டும், மோதிக்கொண்டும், கஷ்டப்பட்டுக்கொண்டும், கூச்சலிட்டுக்கொண்டு மிருக்கிறது. இத்தனை ஜனங்கள் இவ்வளவு சுறுசுறுப்புடன் இருந்தபோதிலும், நான் பார்த்த நகரங்களில் அந்நகரம் மிகவும் அசுத்தமானது என்றே சொல்லவேண்டும். நம் தேசத்தில் ஓர் ஊர் அசுத்தமானது என்று சொல்லுகிறேமே, அப்படியல்ல இவ் வசுத்தம். அசுத்தமான வெகு சிறு சிறு துண்டுகூடச் சீனர்களால் வீணுக்கப்

படுவதில்லை. ஆனால், ஒவ்வொரு சீனனும் நீராடுவதில்லையென்று பிரதிக்ஞை செய்திருப்பதுபோலத் தோன்றும்; ஒவ்வொரு வீடும் ஒரு கடை; கடையின் சொந்தக்காரர்கள் மாடியில் வசிக்கிறார்கள். தெருக்களோ வெகு நெருக்கம்; வழியே போகும் ஒருவன் கடைகளைத் தொடும்படியாக அவ்வளவு நெருக்கமாயிருக்கின்றன. பத்தடிக்கு ஒரு கசாப்புக்கடை. சிற்சில இடங்களில் பூனை, நாய் இவைகளின் மாமிசத்தை விற்கும் கடைகள் காணப்படுகின்றன. ஆனால் பரம ஏழைகளான சீனர்கள்தாம் நாய், பூனை இவைகளுடைய மாமிசங்களைப் புசிக்கிறார்கள்.

சீன தேசத்து ஸ்திரீயை நாம் எப்பொழுதும் பார்க்க முடியாது. வட இந்தியாவிலுள்ள இந்து ஸ்திரீகளைப் போல் இங்கும் ஸ்திரீகள் ஜாக்கிரதையாக அந்தப்புரங்களில் வைக்கப்பட்டிருக்கிறார்கள். கூலி வேலை செய்து பிழைக்கும் ஸ்திரீகளைத்தான் வெளியில் பார்க்கலாம். இந்த ஸ்திரீகளில் கூட நம் (தேசத்து) சின்னஞ் சிறு குழந்தையின் பாதங்களைவிடச் சிறிய பாதங்களையுடைய சிலரை இங்குக் காணலாம். இவர்கள் குதித்துக் குதித்துப் போகிறார்களேயொழிய நடக்கிறார்களென்று சொல்ல முடியாது.

பல சீன ஆலயங்களை நான் போய்ப் பார்த்தேன். இத்தேசத்தில் முதன்முதலில் புத்த மதத்தைத் தழுவின அரசர், அவருடைய ஐந்நூறு சீடர்கள் ஆகிய இவர்கள் ஞாபகார்த்தமாகக் கட்டப்பட்டிருக்கும் ஆலயமே எல்லாவற்றிலும் பெரியது. நடுவில் புத்தரது விக்ரகமும், அதன் கீழ்ச் சக்ரவர்த்தியின் உருவமும், பிறகு சீடர்களின் பிரதிமைகள் இரு பக்கங்களிலும் மரத்தில் செதுக்கப்பட்டிருக்கின்றன.

காண்டனிலிருந்து ஹாங்காங்குக்கும், அங்கிருந்து ஜப்பானுக்குப் போனேம். முதலில் நாகஸாகி துறை முகத்தை அடைந்ததும் கீழிறங்கிக் கொஞ்ச நேரம் பட்டணத்திற்குட் சென்றேம். சீனவுக்கும் ஜப்பானுக்கும் என்ன வேற்றுமை? இவ்வுலகிலுள்ள மாசற்ற ஜனங்களில் ஜப்பானியர் ஒருவர் என்று சொல்லும்படி எல்லாம் சுத்தமாயிருக்கின்றன. அநேகமாய் வீதிகள் மிகவும் விசாலமாய், நேராய் அமைக்கப்பட்டிருக்கின்றன. சிறிய வீடுகள் கூண்டுகளைப்போ லிருக்கின்றன. இங்குள்ள ஒவ்வொரு நகரத்திற்கும், கிராமத்திற்கும் பின்னல் மரங்களடர்ந்த சிறு குன்றுகளிருக்கின்றன. விசித்திர உடைகள் தரித்த மாசற்ற அழகிய ஜப்பானியர்களும், அவர்கள் வேலை செய்வதும், நடப்பதும், நிற்பதும்—எல்லாம் அதிசயமாயிருக்கின்றன. ஜப்பான் ஒரு விசித்திர தேசமென்றே சொல்லலாம். சிறு செடிகளும், புற்றரைகளும், சிறு செயற்கை நீர்வீழ்ச்சிகளும், கற்பாலங்களும், ஜப்பானிய முறைப்படி யேற்பட்ட தோட்டங்களும் ஒவ்வொரு வீட்டின் பின்புறத்திலு மிருக்கின்றன.

நாகஸாகியிலிருந்து கோப் போனேம். ஜப்பானின் உட்பிரதேசத்தைப் பார்க்க விரும்பி நான் கப்பலிலிருந்து இறங்கித் தரை வழியாக யோகஹாமாவிற்குப் போனேன்.

ஜப்பானின் நடுவில் பல தொழிற்சாலைகளுள்ள ஒஸாகா என்னும் பெரிய பட்டணத்தையும், முன்பு தலைநகராயிருந்த டோகியோ என்னும் பட்டணத்தையும் நான் கண்டேன். டோகியோ, கல்கத்தாவை விட விஸ்தீரணத்திலும், ஜனத்தொகையிலும் இரு மடங்கு பெரியது என்று சொல்லலாம்.

உத்தரவுச்சீட்டு இன்றி அயல் தேசத்தானெருவனும் இங்கே உட்பிரயாணஞ் செய்ய விடப்படுவதில்லை.

தற்காலத்திற்கு வேண்டியவை எவை என்பதை ஜப்பானியர்கள் இப்பொழுது நன்முக அறிந்திருக்கிருர்கள் எனத் தோன்றுகிறது. ஜப்பானிய உத்தியோகஸ்தர் ஒருவர் புதிதாக நிர்மாணித்த பீரங்கிகளையுடைய தேர்ந்த ஜப்பானிய சேனை அவர்களுக்குண்டு. (அவர்கள்) கப்பற் படையை மிகுதிப்படுத்திக்கொண்டே வருகிருர்கள். ஜப்பானிய இஞ்சினீயரால் துளைத்தமைக்கப்பட்ட சுமார் ஒரு மைல் நீளமுள்ளதொரு சுரங்கப் பாதையை நான் பார்த்தேன்.

தீக்குச்சிகள் செய்யப்படும் சாலையைப் பார்ப்பதற்கு ஆயிரங் கண்கள் வேண்டும். ஜப்பானியர்கள் தங்களுக்கு வேண்டியவற்றை யெல்லாம் தம் தேசத்திலேயே செய்து கொள்வதென்று தீர்மானித்திருக்கிருர்கள். ஜப்பானியக் கப்பல்கள் இப்பொழுது சீனுவிற்கும் ஜப்பானுக்கும் போய் வருகின்றன. வெகு சீக்கிரத்தில் அவற்றைப் பம்பாய்க்கும் யோகஹாமாவிற்கும் போகவிட உத்தேசமாம்.

இங்கு அநேகங் கோயில்களை நான் பார்த்தேன். ஒவ்வொரு கோயிலிலும், பழைய வங்காள எழுத்துக்களில் சம்ஸ்கிருத மந்திரங்கள் எழுதப்பட்டிருக்கின்றன. சில அர்ச்சகர்களுக்கு சம்ஸ்கிருதம் தெரியும். அவர்கள் எல்லோரும் புத்திசாலிகள். முன்னுக்கு வரவேண்டுமென்னும் பேராவல் இவ்வர்ச்சகர்களுக்கும் பரவிவிட்டது. இந்த ஜப்பானியர்களைப்பற்றிய என் கருத்தை ஒரு சிறு கடிதத்தில் எழுத முடியாது. என் கோரிக்கை என்னவெனில், ஒவ்வொரு வருஷமும் நம் சிறுவர்களிற் சிலர்

ஜப்பானுக்குப் போய் (அங்குள்ளவற்றைப்) பார்த்துவிட்டு வரவேண்டுமென்பதே.

* * *

உங்கள்,

விவேகாநந்தா

பின் குறிப்பு:—சாந்தம், மௌனம், விடா முயற்சி ஆகிய இவைகள் கொள்ளத்தக்கவையே தவிர, பத்திரிகை ஆடம்பரம், பேருக்குப் பாடுபடுதல் கூடாது என்பதை மனத்தில் வை. —வி

## பயிற்சி

[இப்பாடம் பிரயாண வரலாற்றுக்கு ஓர் உதாரணமாகும்; கடித முறையில் எழுதப்பட்டுளது.]

i. சொல் விளக்கம்:—புற்றரை=புல்+தரை. கற்பாலம்=கல்+பாலம். கப்பல்+தலைவன்=கப்பற்றலைவன். பேராவல்=பெருமை+ஆவல். ஜலசந்திக் குடியேற்ற நாடுகள்=ஸ்ட்ரெயிட்ஸ் ஸெட்டில்மெண்ட்ஸ். உத்தரவுச் சீட்டு=பாஸ்போர்ட்டு. ஸ்ரீ=திரு.

மாசற்ற=குற்றமில்லாத. கணக்கற்ற, மட்டற்ற, அளவற்ற—ஒப்பிடுக.

இயற்கை நீர்வீழ்ச்சி × செயற்கை நீர்வீழ்ச்சி.

விளக்கவுரை அறிக:—ஜலசந்தி, பூமத்திய ரேகை, நங்கூரம், சுக்கான், தத்துவ விசாரணை.

ii. இவைகளில் எவை உண்மை, எவை உண்மையல்ல? உண்மையல்லாததற்கு எதிராக × இந்த அடையாளம் செய்.

1. மலய ஜனங்கள் அனைவரும் புத்த மதத்தினர்.

2. கல்கத்தா டோக்கியோவைவிட இரட்டிப்பு ஜனத் தொகை யுடையது.

3. ஒவ்வொரு சீனனும் தினந்தோறும் நீராடுவதுண்டு.

4. ஜப்பான் ஒரு தீபகற்பம்.

5. ஜப்பானியர் விசித்திர உடையும், மாசற்ற மேனியும் உடையவர்கள்.

iii. **இலக்கணம் :—**

பயிற்சி வினாக்களில் **எழுது** என்றும், **எழுதுக** என்றும் குறிப்பிட்டிருப்பதைக் கண்டிருப்பீர்கள். எழுது, போ, வா— என்று முன்னின்றானைக் கட்டளையிடும் அல்லது ஏவும் வினைகள் **ஏவல் வினைமுற்று** எனப்படும். இது எதிர்காலம் ஒன்றிற்கே வருவது.

எழுதுக,—இது மரியாதையாக ஏவுவதாகும்; **வியங்கோள் வினைமுற்று** எனப்படும். வாழ்க, வாழிய, அருள்வானாக இவைகளும் வியங்கோள் வினைமுற்றுக்களே. இவை வாழ்த்தல் பொருளை யுணர்த்தும்.

வந்தான், வருவித்தான்—இவ்வினைகளின் வேறுபாட்டை நோக்குக. வந்தான்—**தன்வினை**. கருத்தா தானே செய்வதை உணர்த்தும் வினை தன்வினை. வருவித்தான்—**பிறவினை**. கருத்தா பிறரைக்கொண்டு செய்விக்கும் வினை பிறவினை.

**பயிற்சி**:—காட்டினான், செய், தா, ஓடினான், பயிலுகிறான்—இவ்வினைகளுக்குப் பிறவினை கூறுக.

வருவான்,—ஒரு தொழிலின் நிகழ்ச்சியைத் தெரிவிக்கும் வினை உடன்பாட்டு வினையாம்.

வாரான்,—தொழில் நிகழாமையைத் தெரிவிக்கும் வினை எதிர்மறை வினையாம்.

**பயிற்சி** :—இவைகளை எதிர்மறை வாக்கியங்களாக மாற்றி எழுது :

1. அவை வேகமாக ஓடும். 2. நான் அதைச் செய்வேன். 3. உறங்கு. 4. இங்கே இரு. 5. அவன் வந்தான்.

iv. **கட்டுரை** :—கடிதத்தின் முக்கிய தலைப்புக்களை இப்பாடத்தில் கண்டறி. [பின் குறிப்பு,—கடிதத்தில் மாணவர்கள் பின்குறிப்புக்கள் எழுதுவதை விலக்கவேண்டும்.] நீ சென்று வந்துள்ள ஓர் உல்லாசப் பிரயாணத்தைப்பற்றி ஒரு கட்டுரை எழுதத் தலைப்புக்களை மட்டும் குறி.

———

# 23. பயிற்சிப் பாடம் V




தஞ்சை நகரம் (தரைப்படம்)

1 அரண்மனை
2 காய் கறி மார்க்கெட்
3 எஸ். பி. ஜி. ஹை ஸ்கூல்
4 ஸ்ரீ ராஜகோபாலசுவாமி கோவில்
5 காமாட்சி அம்மன் கோவில்
6 வெங்கடேசப் பெருமாள் கோவில்
7 கலியாண சுந்தரம் ஹை ஸ்கூல்
8 சிவகங்கைத் தோட்டம்
9 பிரகதீசுவரர் கோவில்
10 ஆஸ்பத்திரி
11 மணிக்கூண்டு
12 ஜில்லா போர்டு காரியாலயம்
13 கச்சேரிகள்
14 ரயில்வே ஸ்டேஷன்
15 எஸ். பி. ஜி. கோயில்
16 அந்தோனி ஹை ஸ்கூல்

இது தஞ்சை நகரத்தின் தரைப்படம். இதை உற்று நோக்கி விடை கண்டுபிடி. (நேரம்: 15 நிமிஷம்)

1. படத்தின் கீழுள்ள குறிப்புக்களையும் படத்தினுள்ள எண்களையும் கவனித்து, இந்த இலக்கங்கள் குறிக்கும் கட்டடங்களின் பெயரை எழுது :

9 15, 2, 16, 7, 10, 12, 14.

2. கணபதி நகரில் வசிக்கும் மதனகோபால், கலியாணசுந்தரம் உயர்தரக் கல்விச்சாலையில் படிக்கிறான். அவன் பாடசாலைக்குச் செல்லும் வழியை விவரி.

3. ரயில்வே ஸ்டேஷனிலிருந்து ஒரு பிரயாணி கடைவீதிக்குப் போக விரும்புகிறார். அவர் போக வேண்டிய வழியை விளங்கும்படி எடுத்துரை. வழியில் அவர் காணக்கூடிய கட்டடங்கள் யாவை ?

4. இந்தப் பட்டணம் இராஜாக்கள் இருந்த இடமென்று எதனால் ஊகிக்கிறாய் ?

5. கல்லணைக் கால்வாய்க்கு எத்தனை பாலங்கள் உள ?

6. இந்த நகரம் நல்ல முறையில் அமைந்திருக்கிறதா ? காரணத்துடன் விளக்கு.

7. இவை சரியா, தவறா ? தவறானவற்றிற்கு எதிராக × இந்த அடையாளமிடு.

i. காமாட்சியம்மன் கோவில் பிருகதீசுவரர் கோவிலுக்கு நேர் தெற்கிலிருக்கிறது.

ii. மணிக்கூண்டிற்குக் கிழக்கில் ஜில்லா போர்டு காரியாலயமும், மேற்கில் ஆஸ்பத்திரியு மிருக்கின்றன.

iii. இந்த ஊர் ஒரு ரயில் சந்திப்பு.

iv. கச்சேரிகள் ஊரின் நடுவண் இருக்கின்றன.

v. இந்தப் பட்டணம் கிழ மேலாக வியாபித்திருக்கிறது.

vi. இங்கிருந்து கும்பகோணத்திற்கு இரு மார்க்கமாகச் செல்லலாம்.

---

# 24. விதியின் வலிமை

[திரு. K. குப்புஸ்வாமி]

இடம்: கல்கத்தாவில் ஹேமசந்திரன் குடியிருக்கும் மாளிகை

காலம்: காலை.

உறுப்பினர்: ஹேமசந்திரன் (ராமகாந்த பாபுவின் புதல்வன்)

கோபால் (அவன் நண்பன்)

ராமகாந்த பாபு (ராம் நகரிலுள்ள ஒரு சீமான்)

ஹரிதாசர் (ஒரு வக்கீல், சதி செய்பவர்)

(காளிந்தி, ஹேமசந்திரனின் அன்னை, சில காரணம் பற்றிச் சமையல்காரிபோல் வேடம் தரித்து யாருமறியா வண்ணம் மறைவாக வாழ்வதால் இந்தக் காட்சியில் ஹேமனைத் தன் மகனென்று அறியாள்.)

சுவர்ணலதா (ஹேமசந்திரனின் சகோதரி)

டாக்டர்

ஹேமசந்திரன் வியாதியாய்ப் படுத்திருக்கிறான். அவனருகில் கோபாலன் கவலையுடன் உட்கார்ந்திருக்கிறான். டாக்டர் பிரவேசிக்கிறார்.)

**கோபால் :**—வாருங்கள் டாக்டர்! தயவு செய்து ஹேமன் உடல்நிலையைப் பரிசோதித்துச் சொல்லுங்கள்.

**டாக்டர் :**—(ஹேமனைப் பரிசோதித்துவிட்டு, கவலைக் குறியுடன் கோபாலனைப் பார்த்து) இரவு இவர் தூங்கவில்லையா என்ன? நேற்றைவிட இன்று சுரம் இரண்டு டிகிரிகூட இருக்கிறதே.

(ஹேமசந்திரன் புரண்டு எழுந்து)

**ஹேம :**—ஏய், எங்கே போகிருய்? நில்; நானும் வருகிறேன். (பல்லை நறநறவென்று கடித்து மிரள மிரள விழிக்கிறுன்.)

**கோபால் :**—ஹேமா! யார் போகிறுர்கள்? நீ எங்கே போகிருய்? (கையைப் பிடித்துக்கொண்டு முகத்தைத் தடவிய வண்ணம்)

கண்ணைத் திற! டாக்டர் வந்திருக்கிறுர்.

**ஹேம :**—போ, போ. யார் வந்திருக்கிறுர்? எனக்கென்ன? அம்மா, அம்மா! (உளறுகிறுன்)

**டாக்டர் :**—(காகிதத் துண்டில் ஏதோ குறித்து) கோபால், நீங்கள் சைக்கிளில் அவசரமாகச் சென்று இந்த மருந்தை உடனே வாங்கி வாருங்கள். 'நிமோனியா' கண்டிருக்கிறது. (காளிந்தி பிரவேசிக்கிறுள்)

**காளிந்தி :**—கோபாலா, டாக்டர் என்ன சொல்கிறுர்? 'நிமோனியா' என்ருல் என்ன?

**கோபால் :**—ஒன்றுமில்லை அம்மா, ஜன்னிபோலிருக்கிறதாம்.

காளிந்தி :—என்ன ? ஜன்னியா, அட பாவமே !

கோபால் :—நான் அவசரமாய் மருந்து வாங்கிவரவேண்டும் ; இதோ வருகிறேன். நீங்கள் ஹேமனிடம் இருங்கள்.

(போகிறான்)

காளிந்தி :—டாக்டர் ஸார் ! ஒன்றும் பயமில்லையே ?

டாக்டர் :—ஒன்றும் பயமில்லை. சுர வேகத்தினால் ஜன்னி போலிருக்கிறது. நீங்கள் இவருடைய தாயார் தானே ?

காளிந்தி :—இல்லை. நான் ஒரு சமையல்காரி.

டாக்டர் :—இவருடைய தகப்பனார் எங்கிருக்கிறார் ? வேறு நெருங்கிய உறவினர்கள் இவ்வூரில் யாருமில்லையா ?

காளிந்தி :—இவருடைய தகப்பனார் ராம்நகரில் இருக்கிறார். வேறு நெருங்கிய உறவினர்கள் இங்கு யாருமில்லை.

டாக்டர் :—நான் சொல்வதற்காகப் பயப்படாதீர்கள். எதற்கும் அவருடைய தகப்பனாரைத் தருவிப்பது நல்லது.

காளிந்தி :—டாக்டர் ! ஹேமன் பிழைக்கமாட்டானா ? ஐயோ ! என்ன துரதிஷ்டம் ? (கண்ணீர் வடிக்கிறாள்)

டாக்டர் :—வீணில் வருந்தாதீர்கள். வியாதியஸ்தருக்கருகில் நெருங்கிய உறவினர்களிருந்தால் அவருக்குத் தைரியமாயிருக்குமே என்றுதான் சொன்னேன். (மருந்துடன் கோபால் பிரவேசிக்கிறான்)

TB 031(6) N47

எங்கே! (மருந்தைக் கையில் வாங்கிப் பிரித்து 'இஞ் செக்ஷன்' செய்கிருர். செய்தான பிறகு நோயாளியைக் கவனித்துவிட்டு)

கோபால், இந்த மருந்திஞல் இவர் அயர்ந்து நித்திரை செய்வார். அவருடன் ஒருவரும் பேச்சுக் கொடுக்கவேண்டாம். நான் சென்று மாலையில் வருகிறேன். அவசரமாக நான் வரவேண்டியிருந்தால் சொல்லியனுப்புங்கள், வருகிறேன்.

**காளிந்தி** :—கோபால், டாக்டர் நம்பிக்கையில்லாமல் ஏதோ சொல்லுகிருர். எதற்கும் ஹேமனின் தகப்பனுருக்குத் தந்தி அடித்துவிடு.

**கோபால்** :—அப்படியே செய்கிறேன். ஹேமனை ஜாக்கிரதையாய்ப் பார்த்துக்கொள்ளுங்கள். (செல்கிருன். ஹேமன் முணகிக்கொண்டே புரண்டு படுத்துக் கண்ணை விழித்துப் பார்க்கிருன்.)

**ஹேம** :—அம்மா! பசிக்கிறது.

(மறுபடியும் கண்ணை மூடுகிருன்)

86615

**காளிந்தி** :—இதோ கஞ்சி கொண்டுவருகிறேன்.

(உள்ளே சென்று கஞ்சி கொண்டுவந்து கொடுக்க, ஹேமன் அருந்திவிட்டுக், களைப்பால் மறுபடியும் கண்ணை மூடுகிருன்)

(தனக்குள்) இதற்கு முன் இரண்டு மூன்று தடவைகளில் கோபாலன் வியாதியாய்ப் படுத்திருந்த காலத்திலும் ஏற்படாத ஒருவிதத் திகிலும் படபடப்பும் இப்போது எனக்கு ஏற்படக் காரணம் என்னவாக இருக்கக்கூடும்?

இரத்த பாசமுள்ளவர்களுக்குத்தான் இப்படி ஏற்படு மென்று சொல்லுவார்கள்.

(கோபால் தந்தியடித்துவிட்டு வீடு வந்து அறைக்குள் பிரவேசிக்கிறான்.)

**காளிந்தி:**—தந்தி அடித்தாய்விட்டதா?

**கோபால்:**—ஆகிவிட்டது அம்மா. அவர்கள் இன்று சாயந்திரம் கட்டாயம் வந்துவிடுவார்கள்.

(தந்தியைப் பார்த்து, ராம்நகரிலிருந்து ராம காந்தர், சுவர்ணலதா, ஹரிதாசர் ஆகிய மூவரும் அன்று மாலையில் கல்கத்தா வந்து சேருகின்றனர். வாச லில் கோபாலன் நிற்கிறான்)

**ராம:**—(கோபாலனைப் பார்த்து) ஹேமனுக்கு உடம்பு எப்படியிருக்கிறது?

**கோபால்:**—கொஞ்சம் சௌகரியம் என்றுதான் சொல்ல வேண்டும். வாருங்கள், உள்ளே போவோம்.

(எல்லாரும் ஹேமசந்திரன் அறைக்குச் செல்கின் றனர்)

**ராம:**—ஹேமா, ஹேமா! உன்னை இந்த நிலைமையிலா காணவேண்டும்? தாயற்ற குழந்தையாகிய உன்னை இதற்காகவா மிகுந்த சிரமப்பட்டு வளர்த்தேன்.

(அழுகிறார்)

**சுவர்ணலதா:**—அண்ணா, அண்ணா!

(ஹேமனின் அண்மையில் அமர்ந்து)

இதற்கோ நீ கல்கத்தா வந்தது?

(அழுகிறாள்)

ஹரி :—ராமகாந்தரே, என்ன குழந்தை மாதிரி அழுகிறீர்? ஹேமனுக்கு இப்போது என்ன வந்துவிட்டது? சுரமாகப் படுத்திருக்கிறான். இன்னும் இரண்டு மூன்று தினங்களில் குணமாகிவிடும். வீணில் அலட்டிக் கொள்ளாதீர்.

சுவர்ணு! நோயாளியைத் தொந்தரவு செய்யாதே. எழுந்து இப்புறம் வா. டாக்டர் வந்துவிட்டார். அவர் ஹேமனைப் பார்க்கட்டும். (எல்லோரும் ஒருபுறமாய் ஒதுங்கி நிற்க, டாக்டர் ஹேமனைப் பரீட்சிக்கிறார்.)

ராம :—டாக்டர் ஸார்! பையனின் உடம்பு எப்படி இருக்கிறது?

டாக்டர் :—காலையிலிருந்ததற்கு இப்பொழுது சுரம் குறைந்திருக்கிறது.

ராம :—உயிருக்குப் பயம் இல்லையே?

டாக்டர் :—அதெல்லாம் ஒன்றுமில்லை. தாங்கள் தான் ஹேமனின் தந்தையோ?

ராம :—ஆமாம். சிறு வயதிலேயே தாயை இழந்த குழந்தை யென்று மிகவும் செல்வமாக வளர்த்து வந்தேன். தாங்கள்தான் இவனைக் காப்பாற்றி எனக்கு அளிக்கவேண்டும்.

டாக்டர் :—நீங்கள் ஒன்றுக்கும் கவலைப்படாதீர்கள். இன்னும் ஒரு வாரத்திற்குள் பூரணமாகக் குணமாய் விடும்.

கோபால், இந்த மருந்தை வாங்கிவந்து இரண்டு மணிக்கொருமுறை நான் சொன்னபடி கொடுங்கள்.

காலையில் வருவேன்; போய் வருகிறேன். (டாக்டர் வெளியே செல்வதைக் கண்ட காளிந்தி, ஹேமன் அறையில் நுழைகிறாள்; அங்கு பாபு, சுவர்ணலதா, ஹரிதாசர் ஆகிய மூவரையும் கண்டு திடுக்கிட்டுப் பின் வாங்கி அறையின் வெளிப்பக்க மிருக்கும் ஒரு பீரோ வின் மறைவில் நிற்கிறாள். ராமகாந்தரும் ஹரி தாசரும் காளிந்தியைக் கவனிக்கிறார்கள்.)

**காளிந்தி:**—(மறைவிலிருந்து) கோபால், கோபால்! சற்று இங்கே வா.

**ராம:**—கோபால், இப்போது உம்மை யழைத்த ஸ்திரீ யார்?

**கோபால்:**—அவள்தான் என் வளர்ப்புத் தாய் காளிந்தி. ஹேமனின் வற்புறுத்தலின்பேரில் அவளும் நானும் கொஞ்சகாலமாக இங்கு அவனுடன் இருந்துவரு கிறோம்.

**ராம:**—உங்களைப்பற்றி எனக்கு ஹேமன் முன்பே கடி தத்தில் தெரிவித்திருக்கிறான்.

**கோபால்:**—தாங்கள் தேநீர் அருந்திவிட்டு ஹேமனின் அருகில் இருங்கள். நான் சென்று மருந்து வாங்கி வருகிறேன். (மூவருக்கும் தேநீர் கொண்டுவந்து வைத்துவிட்டு, கோபாலன் வெளியே செல்லுகிறான்.)

**காளிந்தி:**—(தன் அறையில் தனிமையாக) ஹா ஈசா! என்ன ஆச்சரியம்? ஹேமன் என் மகனா? ஆம். அவரும் என் நாதர்தான். சந்தேகமில்லை. அவர் நெற்றியிலிருக்கும் காய வடு எனக்கு நன்றாய் ஞாபகமிருக்கிறது. ஹேமனின் அருகில் உட்கார்ந்

திருப்பவள் ஒருவேளை என் புதல்வியாக இருக்கக் கூடுமோ? என் நாதரின் அருகிலிருப்பவர் ஹரிதாசர் தான். ஹேமனுக்கு ஏற்பட்ட இந்த வியாதியினால் என் நாதரையும், மைந்தனையும், மகளையும் நான் தெரிந்துகொள்ளும்படி ஏற்பட்டது. எல்லாம் விதியின் வலி!

(பெருமூச்சு விடுகிறாள்)

ஹரி:—(மனத்தில் எழுந்த கலவரத்தை மிகுந்த வருத்தத்துடன் மறைத்துக்கொண்டு) பாபுஜி! நீங்கள் இங்கேயே இருங்கள். அடுத்த தெருவிலிருக்கும் என் நண்பர் சந்திரகாந்த பாபுவைப் பார்த்துவிட்டுச் சீக்கிரமே வந்துவிடுகிறேன்.

ராம:—நீர் என் அண்மையிலிருந்தால் எனக்குக் கொஞ்சம் தைரியமாக இருக்கும். ஆகவே, சென்று விரைவில் திரும்பும்.

ஹரி:—சரி. (செல்லுகிறார்)

(ஹேமன் புரண்டு கண் விழித்துத் தந்தையையும் தங்கையையும் பார்க்கிறான்.)

ஹேம:—பாபுஜி! தாங்கள் எப்பொழுது வந்தீர்கள்?

ராம:—(ஹேமனின் கையைப் பிடித்துக்கொண்டு) ஹேமா' ஹேமா! (விம்மி விம்மி அழுகிறார். சுவர்ணலதாவும் அழுகிறாள்.)

ஹேம:—(அழுதுகொண்டே) அப்பா! பயப்படாதீர்கள். என் உடம்புக்கு ஒன்றுமில்லை. மனத்தைத் திடப்படுத்திக்கொள்ளுங்கள். என்மேலிருக்கும் பிரேமையா தங்களை இவ்வளவு கோழையாக்கிவிட்டது?

சுவர்ணு! வீணுக என் அழுகிருய்? நீ அழுவதைப் பார்க்க எனக்கும் துயரம் உண்டாகிறது. நீ இங்கு இருந்துகொண்டு வீணில் துக்கப்படாதே. உள்ளே போயிரு. (சுவர்ணு உள்ளே செல்லுகிருள்.)

ஹரி:—(நடந்துகொண்டே) என்ன விந்தை! காட்டில் விடப்பட்டவள் எப்படியோ ஹேமனிடம் வந்து சேர்ந்திருக்கிருளே? நல்ல வேளையாக ராமகாந்தர் அவளை அறிந்துகொள்ளவில்லை. இனி இங்கிருந்தால், நாம் செய்த மோசம் வெளியாகிவிடும். இதற்கென்ன செய்யலாம்? (கொஞ்ச தூரத்தில் கோபாலன் வருவதைக் கண்டு ஒரு கடிதம் எழுதிக் கையில் வைத்துக் கொள்கிருர். அருகாமையில் வந்தவுடன்)

கோபால், தயவுசெய்து இக்கடிதத்தைப் பாபு விடம் சேர்த்துவிடுங்கள். (கடிதத்தைக் கொடுத்து விட்டுச் செல்லுகிருர். கோபால் கடிதத்தைப் பெற்றுக் கொண்டு வீட்டைகிருன்.)

ராம:—மருந்துக்கடை வெகு தூரத்தி லிருக்கிறதோ?

கோபால்:—அப்படி ஒன்றும் தூரமில்லை. சமீபந்தான். டாக்டரிடம் போய்விட்டுச் சென்றேன்; அதனுல் நேரமாயிற்று. ஹரிதாசர் இந்தக் கடிதத்தைத் தங்களிடம் கொடுக்கச் சொன்னுர்.

ராம:—(கடிதத்தை வாங்கிப் பிரித்துப் படிக்கிருர்) பாபுஜி அவர்களுக்கு ஹரிதாசன் எழுதியது:

நான் ஒரு கேஸ் விஷயமாக அவசரமாய் ராம் நகர் திரும்பவேண்டியிருப்பதால் தங்களிடம் நேரிற்

சொல்லிப்போக நேரமில்லை. மன்னிக்கவும்.

இப்படிக்கு,

ஹரிதாசன்.

கோபால், ஹரிதாசர் வேறு ஏதாகிலும் சொன்னாரா?

**கோபால்:**—வேறு ஒன்றும் சொல்லவில்லை. கடிதம் மட்டுந் தான் கொடுத்தார். (கோபாலன் உள்ளே செல்லுகிறான்.)

### பயிற்சி

**['சியாமா' என்னும் ஒரு நவீன நாடகத்தின் 1-வது காட்சியாகும் இப்பாடம்.]**

i. **விளக்க உரை:**—இயல், இசை, நாடகம்—வேறுபாடு அறிக.

தற்கால நடைபற்றி இந்நாடகத்தில் பல ஆங்கிலச் சொற்கள் விரவியுள்ளன. அவைகளைப் பொறுக்கி எடுத்து எழுதுக. மாணவர் தமது கட்டுரைகளில் இவ்வித பிறமொழிச் சொற்களை அறவே விலக்கவேண்டும்.

பல ஆண்டுகளாகப் பிரிந்து வாழ்ந்தவர்கள் எதிர்பாராத விதமாகச் சந்திப்பதே 'விதியின் வலி' யென்று அறிக.

ii. **இலக்கணம்:**—

வந்த டாக்டர் தேநீர் அருந்திச் சென்றார்.

இந்த வாக்கியத்தில் வந்த, அருந்தி, சென்றார் என்று மூன்று வினைச்சொற்கள் இருக்கின்றன. இவற்றில் பொருளை முடித்து நிற்கும் வினைச்சொல் 'சென்றார்' என்பது. இது **வினை முற்று** எனப்படும். வினைமுற்று பயனிலையாக இருக்கும்

ஆனால், 'வந்த' என்னும் வினை கருத்து முடியாமல் இருப்பதால் அது **எச்ச வினை** எனப்படும். வந்த என்பது 'டாக்டர்' என்னும் பெயர்ச்சொல்லைத் தழுவி நிற்கிறது. பெயர்ச்சொல்லைத் தழுவிநிற்கும் வினைச்சொல் பெயரெச்சம் ஆகும். 'அருந்தி' என்பதும் எச்ச வினை; ஆனால் அது 'சென்றார்'' என்னும் வினையைத் தழுவி நிற்கிறது. மற்றொரு வினைச் சொல்லைத் தழுவி நிற்கும் எச்சவினை வினையெச்சம் எனப்படும்.

iii. கட்டுரை :—1. இந்நாடகத்தை நடிக்கப் பயிலவும்.

2. கோபாலன் ராம காந்தருக்கு அனுப்பவேண்டிய தந்திச் செய்தியை எட்டுச் சொற்களில் எழுது.

3. கோபாலனது இயல்புகளைப்பற்றி நான்கு வாக்கியங்கள் வரை.

---

# 25. சித்திர விளக்கம்

எதிர்ப்புறத்திலுள்ள சித்திரத்தை உற்றுநோக்கு,

1. இது தாமரைத் தடாகமென்று எதனால் அறிகிறாய்?

2. தெய்வ ஒளி வட்டம், மரங்கள், நாகம் இவைகளைப் படத்தில் காட்டு.

3. தேவிகளின் கரத்தில் இருப்பது என்ன? துதிக்கையின் நுனியில் காண்பது யாது?

4. இது என்ன பறவை? ஏன் சிறகை விரித்திருக்கிறது?

5. இறைவன் இத்தருணம் எழுந்தருளியுள்ள காரணம் என்ன?



6. பின்வரும் செய்யுட் கருத்தை இப்படம் எவ்வாறு விளக்குகிறது?

7. இப்படத்திற்கு ஒருபெயர் அமை.

கரையின் வாய் ஈரக்கும் தந்தி; கரவு நீர் நகுவின் ஈர்க்கும்;
வரையுடன் வரையெதிர்ந்து மற்பொரு வதுபோல், வாயில்
நுரைபெற ஒன்றுக்கொன்று நோக்கியே தாக்கி அங்கம்
உரைபடத் தசைகள் சிந்த உதிரமும் பெருக அன்றே.

இடிநிகர் கரவால் கால்கரம் ஓய்ந்தே
ஏக்கமாய் உயிர் தடுமாறிப்
படிவமும் உருகி வால் அசைவற்றுப்
பரிவுடன் அரற்றுப்பேர் ஒலியால்
"இடியனல் அப்பாய்க் கால் வெளி பூவாய்
எண்ணும் மூர்த்தியின் முதலாய்
அடிகளாம் ஆதிமூலமே", எனும் அம்
முறை அரிசெவி நுழை போழ்தே.

செங்கண்மாலும் நடந்துவேகமாய்ச் செல்லவே செழுந்தூரமாம்
பங்கயப்புனல் மேவு தும்பியின் பயமகன்றிட, வானுறை
செங்கதிர்த்திரள் கோடிபோலவே தேசுகொண்ட அத் திகிரியை
மங்கைநாயகன் ஏவியே முந்தி வந்து நின்றனன் கரையின்வாய்.

அருஞ்சொல் விளக்கம் :—தந்தி, தும்பி—யானை. கரவு-முதலை. வரை—மலை. மற்பொருவது போல்—மல் யுத்தஞ் செய்வது போல். உதிரம்—இரத்தம். இடிநிகர்—மேக இடியை ஒத்த. அப்பு, புனல்—தண்ணீர். கால்—காற்று. வெளி—ஆகாயம். பூவாய்—பூமியாய் (பஞ்ச பூதங்கள் வடிவமாய்). மும்மூர்த்தி—பிரமன், திருமால், சிவன். அரி—திருமால், விஷ்ணு. பங்கயம்—தாமரை. தேசு—ஒளி. திகிரி—சக்கராயுதம். செங்கதிர்த் திரள்—சிவந்த கிரணங்களையுடைய சூரியன். மங்கை நாயகன்—லக்ஷ்மீபதி, திருமால்.

# 26. புத்திமானே பலவான்

அடியிற்காணும் கதையில் விடுபட்டுள்ள வார்த்தைகள் சில இவை. கோடிட்ட இடங்களுக்குப் பொருத்தமான சொற்களைத் தெரிந்து எடுத்து ஆங்காங்கு எழுது:

| | | |
|---|---|---|
| உழவன் | சமர்ப்பிக்க | திருநீறிட்டுக் |
| சஞ்சீவி | ஆணையைத் | நட்புப்பூண்டு |
| பிணமும் | உபாயங்களால் | மிருகேந்திரன் |
| நமனைக் | உத்தரவிட்டது | மல்லாந்து |

வடதிசையிலுள்ள விந்திய மலையை யடுத்த **சண்பகாரண்யம்** என்னும் பெரிய வனத்தில் பிங்களன் என்னும் ஒரு சிங்கம் தனது வல்லமையினால் — என்னும் பட்டப்பெயர் பெற்று மிருகங்களுக்கெல்லாம் அரசனாக ஆட்சி செய்துவந்தது. அதே காலத்தில் அவ்வனத்தில் சம்புகன் என்னும் நரியொன்று, 'புத்திமான் பலவானாவான்' என்கிறபடி தனது மதி வலிமையால் சிறிதும் பெரிதுமான விலங்குகள் பலவற்றைத் தந்திரமாகப் பிடித்துக் கொன்று தின்று வாழ்ந்துவந்தது. ஏனைய மிருகங்கள் இந்நரியைக் காணும்போதெல்லாம் — காண்பதுபோல் அஞ்சி அதனிடத்திற் பொறாமை கொண்டு, தங்களுக்கெல்லாம் இறைவனாகிய சிங்கத்தினிடம் சம்புகனைப்பற்றிக் குறை கூறி, அது செய்துவரும் கொடுமைகளை முறையிட்டுக் கொண்டன. மிருகேந்திரனாகிய பிங்களன், சதுரன் என்னும் பூனையை ஏவி, சம்புகனை அழைத்துவரச் சொல்லிற்று.

பூமிக்குள் பல வாயில்கள் கூடிய ஓர் அரண் போன்ற வீடமைத்து அதில் வசித்துவந்த சம்புகனிடம் சதுரன் சென்று, அரசருடைய — தெரிவித்தது. நரியும் அரசரிடம்

வருவதாக ஒப்புக்கொண்டு பூனையை அவ்விரவு தன் இல்லத்தில் தங்கிச் செல்ல வேண்டிற்று. அதுவும் அவ்வாறே இணங்கி அங்குத் தங்க, சம்புகன் அதற்குச் சில கீரைகளை உணவாக அளித்தது. பூனை அவைகளைத் தின்ன வெறுத்து, மாமிச போசனம் வேண்டிற்று. உடனே சம்புகன் அண்மையிலிருந்த ஒரு குடியானவன் வீட்டிற்கு, அங்குள்ள எலிகளைப் பிடித்துத் தின்னலாமென்று சதுரனை அழைத்துச் சென்றது. முந்திய இரவில் அக்குடியானவன் வீட்டுக் கோழியொன்றை நரி திருடிச் சென்றிருந்ததால், அதைப் பிடிக்கப் புறக்கடை வாசலில் அவன் ஒரு வலையைக் கட்டியிருந்தான். சம்புகன் அங்கு வந்ததும், சதுரனை முதலில் உள்ளே நுழையச் சொல்லிற்று. சதுரன் அவ்வாறு செய்யவே வலையில் சிக்கிக்கொண்டு கூச்சலிட்டது. அச்சத்தத்தைச் செவியுற்ற — தடியுடன் ஓடிவந்து பூனையைப் புடைக்க அது வலையை அறுத்துக்கொண்டு உயிர் தப்பி ஓடி மிருகராஜனுகிய பிங்களனிடம் சேர்ந்தது. நிகழ்ந்ததை அரசனிடம் அது தெரிவிக்க, மற்றும் பல மிருகங்களை அனுப்பி நரியைப் பிடித்துக் கட்டிக்கொண்டு வரச் சிங்கம் உத்தரவிட்டது.

நரியும் மன்னனிடம் வந்து சேர்ந்தது. எல்லோரும் நடுநடுங்கப் பிங்களன் கர்ஜித்து நரியை நோக்கி, "சிறிதும் அச்சமின்றி அடாத செயல்களை நீ செய்துவந்தது உண்மையா?" என்று கேட்டது. சம்புகன் அதுவரையில் தான் செய்துள்ள தீவினைகளை மறைக்காமல் ஒப்புக்கொண்டது. அதனுல் மிருகேந்திரன் நரியைக் கொன்றுவிட — அப்பொழுது சம்புகன், "மகாராஜரே! நான் தங்களது கண்டனைப்படி இறக்கச் சித்தமாயிருக்கிறேன்.

ஆனால் இதுவரை நான் தேடியுள்ள திரளான திர வியத்தை வனத்தின்கண் ஓரிடத்தில் புதைத்து வைத்திருக் கிறேன். தாங்கள் என் பெயரை எப்பொழுதும் நினைவில் வைத்துக்கொள்ளும்பொருட்டு அதைத் தங்கட்குச் — எண்ணுகிறேன். அதுகாறும் என்னை மன்னிக்கவேண் டும்'' என்று பிரார்த்தித்தது.

பணம் என்றால் — வாய்திறக்கு மல்லவா? பிங்களன் நரி கூறிய பெருஞ்செல்வத்தில் ஆசையுள்ளதாய் அதை மன்னித்து, அதைத் தனது முக்கிய மந்திரிகளில் ஒன்றாக வும் நியமித்தது. மேலும், மற்றப் பிராணிகளைப் பார்த்து, "சம்புகனுக்குக் கீழ்ப்படிந்து அதனிடம் மரியாதையாகப் பழகவேண்டும் இல்லாவிடில் உங்களைக் கொல்ல நேரி டும்'' என்று சிங்கம் எச்சரித்தது. அது முதல் எல்லா மிருகங்களும் சம்புகனிடம் — வாழ்ந்தன.

சிறிது காலத்திற்குப் பிறகு சம்புகன் சுயேச்சையாக வாழ விரும்பிக் காசி யாத்திரை சென்று வருவதாக அரச னிடம் அனுமதிபெற்று, சுந்தரன் என்னும் மானையும், முசலி என்னும் முயலையும் துணையாக அழைத்துக் கொண்டு வீடு வந்து சேர்ந்தது. சுந்தரனை வாயிற்புறத் தில் நிறுத்திவிட்டு, முயலைமட்டும் தன் வீட்டிற்குள் அழைத்துச் சென்றது. அங்கு அதைக் கொன்று தின்று விட்டு, வெகுநேரமாகக் காத்திருந்த மானிடம் பிறகு வந்து ஒரு சிறு பொட்டணத்தை அதனிடம் கொடுத்து அதை மன்னனிடம் கொடுக்க ஏவிற்று. முயலைப்பற்றிச் சுந்த ரன் கேட்க அது உள்ளே இருப்பதாக நரி தெரிவித்தது.

மான் அரசனிடஞ் சென்று பொட்டணத்தைக் கொடுக்கவும், அதைத் திறந்து பார்க்கவே அதில் முய

யின் தலையைக் கண்டு பிங்களன் மிக்க வருத்தமுற்றது. அத்தருணத்தில் மந்தரன் என்னும் கீரிப்பிள்ளை பெரு மூச்சுடன் ஓடிவந்து பின்வருமாறு கூறிற்று: "அரசே! நான் இன்றைக் காலையில் வனத்தின்கண் செல்லும் போது சம்புகன் நெற்றியில் — கையில் உருத்திராட்ச மாலை யுடன் வரக் கண்டேன். அதனது தவ வடிவத்தைப் பார்த்து அதன் அருகிற் சென்றேன். சரேலென்று என்னை அறைந்து கொல்ல முயன்றது. நான் உயிர் தப் பித் தங்களிடம் ஓடிவந்துள்ளேன். இவ்விஷயத்தைத் தாங்கள் விசாரித்து நியாயம் பிறப்பிக்க வேண்டுகிறேன்."

சிறிது நேரத்திற்கெல்லாம் மேகவர்ணன் என்ற காகம் பறந்தோடிவந்து முறையிட்டதாவது: "மிருகேந் திரனே! நானும் என் மனைவியும் பறந்து செல்லும்போது சம்புகன் பிணம்போல் — படுத்துக் கிடந்தது. அது உண் மையில் இறந்து கிடக்கிறதா வென்றறிய அதன் அருகில் என் மனைவி சென்று கொத்திற்று. திடீரென்று சம்புகன் எழுந்து எனது மனைவியைப் பிடித்துக் கொன்றுவிட்டு என்னையும் பிடிக்க ஓடிவந்தது. நான் உயிர் பிழைத்து நேரில் தங்களிடம் பறந்து வந்துளேன்." இக்குறைகளைச் செவியுற்ற மிருகராஜன் மறுமுறை சம்புகனைத் தன்னிடம் அழைத்துவர ஆக்ஞாபித்தது. சம்புகனும் இராஜ சபை யில் ஆஜராகித் தன் குற்றங்களை ஒப்புக்கொண்டது. பிங்களன் அதைச் சிரச்சேதஞ்செய்ய மறுபடியும் உத்தர விட்டது. அத்தருணம் சம்புகன் அரசனைப் பார்த்து, "மன்னாதி மன்னனே! தங்களது உத்தரவுப்படி நான் உயிர் துறக்கச் சித்தமாயிருக்கிறேன். ஆனல் மூப்பு, நரை, சாக்காடு இவைகளைத் தடுக்கக்கூடிய அமிர்த — போன்ற

ஒரு மூலிகையை என் வீட்டில் வைத்திருக்கிறேன். அதைத் தங்களிடம் அளிக்க விரும்புகிறேன். தங்களது உத்தரவை வேண்டுகிறேன்" என்றது. சிங்கமும் அம் மூலிகையைக் கைப்பற்ற அவாக்கொண்டு மீண்டும் சம்புகனை மன்னித்தருளியது.

இவ்விதமாகவே, தனக்கு வந்த பல அபாயங்களை நிவர்த்தி செய்துகொண்டு சம்புகன் சுகமே வாழ்ந்து வந்தது.

[இராஜ தந்திரங்களை உட்கருத்தாகவுடைய 'குள்ள நரி ரெயினூர்டு' என்னும் ஆங்கிலக் கட்டுக் கதையைத் தழுவி இப்பாடம் எழுதப்பட்டுள்ளது. இது பஞ்ச தந்திரக்கதை போன்றது.]

### பயிற்சி

i. வினுக்கள் :—1. 'புத்திமான் பலவானுவான்' இதை விளக்கவும்.

2. சதுரன், முசலி, மந்தரன், மேகவர்ணன் இவைகளுக்குச் சம்புகன் செய்த தீங்குகள் யாவை?

3. பிங்களனைச் சம்புகன் எவ்விதங்களில் ஏமாற்றியது?

4. பணத்தைப் பற்றிய பழமொழியைக் கூறி, அதை விளக்குக.

5. பின்வரும் சொற்றொடர்களை வாக்கியங்களில் அமைத்துக் கூறுக: சிரச்சேதம், சிறிதும் பெரிதுமான, செவியுற்று, நடுங்கி, திருநீறிட்டு.

ii. சொல்விளக்கம் :—

மிருகேந்திரன் - மிருகங்களுக்கு அரசன்; சிங்கம். நமன் - யமன். அரண் - கோட்டை. இல்லம் - வீடு. சமர்ப்பிக்க -

கொடுக்க. திருநீறு - விபூதி. சிரச்சேதம் - தலையை வெட்டுதல். மூப்பு - கிழத்தனம். நரை - மயிர் வெளுத்தல். சாக்காடு - சாதல். அமிர்த சஞ்சீவி - மரித்தவர்களை உயிர்பெறச் செய்யும் ஒரு மருந்து.

iii. இலக்கணம் :—

(க) சிங்கம் நரியை அழைத்தது. 'அழைத்தது' என்னும் வினைமுற்று பயனிலை எனப்படும்.

எது அழைத்தது ?—சிங்கம்.

தொழிலின் கர்த்தாவாகிய 'சிங்கம்' எழுவாய் ஆகும்.

எதை அழைத்தது ?—'நரியை'—தொழிலின் பயனை அடைந்த 'நரியை' என்பது செயப்படுபொருள்.

ஒரு வாக்கியத்தில் எழுவாயும் பயனிலையும் முக்கிய உறுப்புக்கள் இவை இல்லாமல் வாக்கியங்கள் அமையா.

ஒவ்வொரு வாக்கியத்திலும் பயனிலைக்கு முன் யார் அல்லது எது அல்லது எவை என்று சேர்த்துக் கேள்வி கேள். வரும் விடை எழுவாய் ஆகும். எழுவாய் முதல் வேற்றுமையி லிருக்கும்.

அதேவிதம் யாரை அல்லது எதை அல்லது எவற்றை என்று சேர்த்துக் கேள்வி கேள். வரும் விடை செயப்படு பொருள் ஆகும். செயப்படுபொருள் இரண்டாம் வேற்றுமை யில் இருக்கும்.

(உ) பின்வரும் வாக்கியங்களில் எழுவாய், பயனிலை, செயப்படுபொருளைக் கண்டுபிடி :

1. வனத்திலுள்ள மிருகங்களைப் பிங்களன் ஆண்டுவந்தது.

2. மான் அரசனிடம் சென்று பொட்டணத்தைக் கொடுத்தது.

3. மன்னனே, என் பெயர் மேகவர்ணன்.

4. போ.
5. அவர் யார்?
6. சம்புகனை அழைத்து வாருங்கள்.
7. அவர்கள் வருகிறார்கள்.

நான்காவது வாக்கியத்தில் நீ என்ற எழுவாய் மறைந்திருக்கிறது. இது தோன்றா எழுவாய் எனப்படும். ஏழாவது வாக்கியத்தில் செயப்படுபொருள் உண்டா? மூன்றாவது வாக்கியத்தில் பயனிலை 'மேகவர்ணன்.' பெயர்ச்சொல் பயனிலையாக வருமிடத்து, அது பெயர்ப் பயனிலை எனப்படும் அதேவிதம் ஐந்தாவது வாக்கியத்தில் 'யார்' என்பது வினாப் பயனிலை.

iv. கட்டுரை :—1. இப்பாடத்தில் வந்துள்ள நேர் கூற்றுக்களைக் கண்டுபிடி. அவைகளை அயற்கூற்றுகளாக மாற்றி எழுது.

மாதிரி: மந்தரன் ஓடிவந்து பின்வருமாறு கூறிற்று: "அரசே நான் இன்றைக் காலையில் வனத்தின்கண் செல்லும் போது சம்புகன் நெற்றியில் திருநீறிட்டுக் கையில் உருத்திராக்ஷ மாலையுடன் வரக்கண்டேன்." (நேர் கூற்று)

மந்தரன் அரசனிடம் ஓடிவந்து, தான் அன்றைக் காலையில் வனத்தின்கண் செல்லும்போது சம்புகன் நெற்றியில் திருநீறிட்டுக் கையில் உருத்திராட்ச மாலையுடன் வரக் கண்டதாகத் தெரிகிறது. (அயற் கூற்று)

2. நான்காவது பத்தியின் கருத்தை அறிய ஆறு வினாக்கள் எழுதுக.

# 27. விசித்திரம் ஆனால் உண்மை

## மனித உடலின் இரசாயனம்

மனிதனுடைய உடலானது சராசரி 140 இராத்தல் கனமுள்ளது. அதில் காணப்படும் இரசாயனப் பொருள்களைக் கடையில் வாங்கினோமானால் ஐந்து ஷில்லிங்குக்கு வாங்கலாம். மனிதனுடைய உடலில் சுமார் 10 காலன் தண்ணீர் இருக்கிறது; 7 சோப்புக் கட்டிக்குப் போதுமான கொழுப்பு இருக்கிறது; 9,000 காகிதப் பென்சலுக்குப் போதுமான கரிப்பொருள் இருக்கிறது; 2,200 தீக்குச்சிகளுக்குப் போதுமான பாஸ்வரம் இருக்கிறது; ஒரு வேளை மருந்துக்குப் போதுமான மக்னீசியம் இருக்கிறது; ஓர் ஆணி செய்வதற்கு வேண்டிய இரும்பு இருக்கிறது; ஒரு கோழிக் கூட்டுக்கு அடிக்கப் போதுமான சுண்ணாம்பு இருக்கிறது. ஒரு நாயின்மீதுள்ள உண்ணிகளைத் தொலைப்பதற்குப் போதுமான கந்தகம் இருக்கிறது. ஆக மொத்தம் விலை சுமார் ஐந்து ஷில்லிங்.

உன் எடை எத்தனை இராத்தல்? கணக்குப்படி உன் உடலிலுள்ள இரசாயனப் பொருள்களின் மதிப்பு எத்தனை ரூபாய்? (ஒரு ஷில்லிங்=13 அணா)

## தானே இயங்கும் நீர்மூழ்கிக் கப்பல்கள்

கடற்கண்ணிகளைப் போடுவது ஓர் ஆபத்தான வேலை ஒரு காந்தக் கடற்கண்ணியைப் போட்டுவிட்டுத் திரும்புவது சுலபமன்று. இதை எளிதில் செய்யக்கூடிய முறையொன்று அமெரிக்காவில் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறதாம்.

வெகு தூரத்திலிருந்தபடியே இயக்கக்கூடிய நீர் மூழ்கிக் கப்பல்களில் (சப்மரீன்களில்) கண்ணிகளைப் பிணித்து ஒரு குறிப்பிட்ட இடத்திலிருந்து எத்திசையி லாவது, வேண்டிய இடத்திற்கு அவற்றைச் செலுத்த முடியும். குறிப்பிட்ட இடத்தில் தாமாகவே கண்ணிகள் சுழன்றுவிடக்கூடிய விசை அமைப்புகள் அக்கபபல்களில் இருக்கின்றன.

## ரேடியம்

உலகில் மிகவும் உயர்ந்த மதிப்புடைய உலோகம் தங்கமென்று பலர் நினைக்கின்றனர். அதனினும் பல மடங்கு உயர்ந்த விலையுடையது **ரேடியம்** என்னும் உலோகம். இது சற்றேறக்குறைய 40 வருடங்களுக்கு முன் கண்டுபிடிக்கப்பட்டது. இதுவரையில் உலக முழு வதிலும் 26 அவுன்ஸ் நிறையுள்ள ரேடியமே கண்டு எடுக் கப்பட்டிருக்கிறது. எக்ஸ்-ரே மூலம் வைத்திய சிகிச்சை செய்ய இந்த உலோகம் மிகப் பயன்படுகிறது. பிளவை களைக் குணப்படுத்துவதற்கு இந்த உலோகம் இன்றி யமையாதது. ஆயினும், வேண்டிய அளவு இது கிடைத் தற்கின்மையின், இதனாற் பெறும் பயனைப் பேரளவில் மக்கள் அடைய முடியவில்லை. ஐக்கிய அமெரிக்காவில் ஓர் அவுன்ஸ் ரேடியத்தின் விலை 3,36,000 பவுன் ஆகச் சொல் லப்படுகிறது. ரேடியத்தின் உதவியால் ரசவாதங்கூடச் செய்யலாமென்று சில விஞ்ஞானிகள் கூறுகின்றார்கள். 1898-ஆம் ஆண்டில் போலந்து நாட்டுப் பெண்மணி க்யூரி அம்மையாரால் இவ்வரிய உலோகம் கண்டுபிடிக்கப் பட்டது.

ரேடியம் கொடிய விஷத்தன்மையுடையது. அதன் ஒரு சிறிய அணுக்கூட மனிதனைக் கொல்லும் வன்மை யுடையது. வைத்தியசாலைகளில் பிளாட்டினத்தாற் செய்த ஊசிகளில் அதன் சிறிய அணுக்கள் வைக்கப்பட்டிருப்ப துண்டு.

## நச்சுப் புகை

"பாஸ்ஜென்" அல்லது "கார்பொனைல் குளோரைட்" என்பது நாசகாரிக்கு ஆதாரமான பொருள். இந்த வஸ்துவைச் சுலபமாய்த் திராவகமாக்கிவிடலாம். அதேபோல மிகச் சுலபமாய்ப் புகை மயமாகவும் ஆக்கி விடலாம். இந்த வஸ்துவின் வாசனை முகருவதற்கும் இன்பமானதாயிருக்கிறது. அன்றியும், எந்தவகையான நிறமும் அற்றதாய்த் தெளிவாகவும், எல்லாவற்றினும் மிகக் கொடிய விஷமாகவு மிருக்கிறது. எனவே, இந்த வஸ்துவானது நவீன யுத்தத்தில் நாசகாரியாகப் பெரிதும் உபயோகப்படுகிறது. முன்னரிருந்த நச்சுப் புகைகள் வியர்வை யுண்டாக்கல், எரிச்சலுண்டாக்கல், புண்ணாக்கு தல் போன்றவைகளுக்கு மாறாக, அவற்றினின்று தப்பிக் கொள்ளப் பல எதிர்முறைகள் கண்டுபிடிக்கப்பட்டுவிட்ட தால், அவ்விஷப் புகைகள் இப்பொழுது வழக்கற்றுப் போய்விட்டன.

## பயிற்சி

i. 1. இப்பாடத்தில் வந்துள்ள அறிவுக்கலைச் சொற்களைக் கண்டெழுதி, அவற்றின் விளக்கவுரை அறிக.

2. இராத்தல் = 1 பவுண்டு எடை. காலன் = $2\frac{1}{2}$ (பெரிய) படி.

3. ரேடியத்தின் குணங்களைப்பற்றி நான்கு வாக்கியங்கள் அமைக்க.

ii. இலக்கணம் :—

ஓர் எழுவாயும், ஒரு பயனிலையும், ஒரு செயப்படுபொருளும் கொண்ட வாக்கியத்திற்குத் தனி வாக்கியம் என்று பெயர். பல பெயரெச்சம், வினையெச்சம் முதலிய அடைமொழிகள் சேர்ந்துள்ள நீண்ட வாக்கியம் தொடர் வாக்கியம் எனப்படும்.

இரும்பு துருப் பிடிக்கும்.

இது ஓர் எழுவாயும், ஒரு பயனிலையும் கொண்ட தனி வாக்கியம்.

அவர்கள் கடற்கண்ணிகளைப் போடுகிறார்கள்.

இது ஓர் எழுவாயும், ஒரு பயனிலையும், ஒரு செயப்படுபொருளும் கொண்ட தனி வாக்கியம்.

பயிற்சி :—பின் வரும் வாக்கியங்களின் எழுவாய், பயனிலை, செயப்படுபொருள்களை மாதிரியிற் காட்டியபடி தனித்தனியே பிரித்தெழுது.

(க) தீக்குச்சிகள் செய்யலாம்.

(ங) ஒரு வேளை மருந்துக்கான மக்னீசியம் இருக்கிறது.

(ச) அவள் பெயர் சுலோசனை.

(ஞ) இதை எடுத்தது எவன் ?

(ட) நச்சுப்புகைக்கு எதிர்முறைகள் கண்டுபிடித்திருக்கிறார்கள்.

(ண) அவை வழக்கற்றுப்போய்விட்டன.

(த) ரேடியம் அணுக்கள் வைக்கப்பட்டிருக்கின்றன.

| எண் | எழுவாய் | பயனிலை | செயப்படு பொருள் |
|---|---|---|---|
| (க) | (நாம்) | செய்யலாம் | தீக்குச்சிகள் |
| (ங) | மக்னீசியம் | இருக்கிறது | ——— |
| (ச) | | | |
| (ஞ) | | | |
| (ட) | | | |
| (ண) | | | |
| (த) | | | |

## 28. கடிதம் வரைதல்

தொலைவிலுள்ளவர்களுக்குச் சமாசாரங்களைச் சாதாரணமாகக் கடிதங்கள் மூலம் அறிவிக்கிறோம். கடிதங்களும் கட்டுரையினத்தைச் சேர்ந்தனவே. ஆதலால் இவைகளை எழுதுவதிலும் கருத்துக்களை முறைப்படுத்தி, செவ்விய நடையில் தெளிவாக எழுதுவது இன்றியமையாததாகும். மேலும், கடிதங்களை எழுத நேர்த்தியான காகிதம், நல்ல எழுதுகோல், நல்ல மை இவைகளை உபயோகித்தல் நலம். ஒருவர் எழுதும் கடிதத்தின் எழுத்து அழகும், தெளிவும் அவரது குணதிசயத்துக்கு அறிகுறியாகும். எழுதப்படுவோர் எதிரிலிருந்தால் எவ்வாறு உரையாடுவோமோ அவ்வித நடையில் எழுதுவது சிறந்த முறையாகும்.

கடிதம் எழுதுவதில் பின்வரும் அம்சங்களைக் கவனிக்க வேண்டும்: 1. எழுதுவோர் விலாசம், 2. தேதி, 3. தலைப்

யில் மரியாதை முறை, 4. சமாசாரம் (உள்ளுறை), 5. முடிவில் மரியாதை முறை, 6. கையொப்பம், 7. கடிதம் போய்ச் சேரவேண்டிய விலாசம். தலைப்பிலும் முடிவிலும் இருக்கவேண்டிய மரியாதை அடைமொழிகள் எழுதுவோர்க்கும் எழுதப்படுவோர்க்கும் உள்ள சம்பந்தத்தைப் பொறுத்திருக்கும்.

மகா-ா-ா-ஸ்ரீ, நமஸ்காரம், க்ஷேமம், ஸ்ரீமதி, சிரஞ்ஜீவி முதலிய வடமொழிப் பதங்களுக்கு முறையே திருவாளர், வணக்கம், நலம், திருநிறை செல்வி, திருநிறைசெல்வன் முதலிய தமிழ்ப்பதங்களை உபயோகித்தால் எழுத்துப் பிழைகள் நேரிடா. மேலும், இக்காலத்தில் தனித் தமிழ்ச் சொற்களை உபயோகிப்பதே முறை. இருபாலர்க்கும் பொதுவாக 'ஸ்ரீ' என்னும் அடைமொழியை அரசாங்கக் கடிதங்களில் உபயோகிக்கவேண்டுமென்பது துரைத்தனத்தாரது தற்போதைய உத்தரவு.

I

12, கவரைத் தெரு,

துறையூர்,

16—3—41.

அன்புள்ள மாசிலாமணி,

சென்ற மாதத்தில் இரவலாக நீ எடுத்துச் சென்ற எங்கள் வீட்டு எலிப்பொறியை, இதைக் கொண்டுவரும் ஆளிடம் தயை செய்து கொடுத்தனுப்ப வேண்டுகிறேன்.

வீட்டில் எலித் தொந்தரவு பொறுக்க முடியவில்லை. அவசரம். பிற நேரில்.

அன்புக்குரிய
**காந்திமதிநாதன்**

*விலாசம்:*

திரு. தி. வி. மாசிலாமணி,
47, முதலியார் தெரு,
துறையூர்.

---

II

நாகமங்கலம்,
(வழி) அரியலூர்,
8—10—41.

அகத்தியர் மருந்துச் சாலையினர் அவர்கட்கு,
பந்தர் தெரு,
சென்னை.

ஐயன்மீர்,

தங்கள் விலைப்பட்டியில் கண்டுள்ள அடியிற்காணும் மருந்துகளைப் பெட்டியில் வைத்துப் பந்தோபஸ்து செய்து, ரெயில் பார்சலாக அரியலூர் ஸ்டேஷனுக்கு அனுப்பி, ரெயில் ரசீதை வி. பி. தபால்மூலம் தலைப்பில் குறித்த விலாசத்துக்குத் தயை செய்து அனுப்பவேண்டுகிறேன். இவைகள் வியாபார நிமித்தம் தருவிக்கப்படுவதால் விலையில் தாராளமான தள்ளுபடி எதிர்பார்க்கிறேன்.

1. சியவனப் பிராசம் .... 1 சேர் டப்பிகள் 12
2. அரைக்கிரை விதைத் தைலம் .... புட்டிகள் 24
3. வில்வாதி லேகியம் .... டப்பிகள் 12

4. கஸ்தூரி மாத்திரை: 100 கொண்ட புட்டிகள் 25
5. கல்நார் பற்பொடி: 1 அணுப் பொட்டணம் 100

தாங்கள் விற்பனை செய்யும் மருந்துகளைப்பற்றிய விளம்பர அறிக்கைகளும் சேர்த்து அனுப்பவும்.

இங்ஙனம்,
தங்கள் நம்பிக்கைக்குரிய
**வை. நாகலிங்க செட்டியார்**

பயிற்சி

1. மேல்வகுப்புக்கு மாறியதாக உன் தகப்பனுக்கு ஒரு கடிதம் எழுது.

2. புத்தகங்கள் அனுப்பும்படி ஒரு புத்தக வியாபாரிக்கு எழுது.

3. விருந்துக்கு வருமாறு உனது நண்பன் ஒருவனுக்கு ஓர் அழைப்புக் கடிதம் எழுது.

4. அதை ஏற்றுக்கொண்டதற்கு அவன் அனுப்பும் கடிதத்தின் மாதிரியையும் எழுது.

5. நீங்கள் கடிதம் எழுதுவதில் விலக்கவேண்டுமென்று 22-வது பாடத்தில் குறிப்பிட்டுள்ளது என்ன?

---

# 29. கடல் தோண்டப்பட்ட கதை

முன்னொரு நாள்சகரன் —என்றும்
மூவுல காண்டிட எண்ணியங்கே
மன்னிய பரிவேள்வி—மிக
மாட்சிமை யாகவே செய்வதற்காய்ப்
பன்னருங் குணம்வாய்ந்த—நல்ல
பரிதனைக் கொண்டுடன் அலங்கரித்தே

மன்னவர் திறங்காண—இந்த
மண்ணுல கெங்கணும் விடுத்திடவே

கண்டனன் இந்திரனும்—அதைக்
கரந்துடன் பாதாள லோகமதில்
கொண்டநல் தவத்திருந்த—சற்றும்
கோதிலாக் கபிலரின் அருகினிலே
கொண்டுடன் கட்டிவிட்டான்—உடன்
கோபமாய் அறுபதி னுயிரம்பேர்
மண்டினர் சகரமைந்தர்—அவர்

மாநில மெங்குமே தேடினரே
தேடியுங் காணவில்லை—அவர்
திறமுடன் பாதலம் சென்றதனைத்
தேடிடத் துணிந்தனரே—அன்று
திடமுடன் நிலந்தனை வெட்டிடவே
நாடினர் இருப்புக்கோல்—ஏற்ற
நல்லமண் வெட்டிகள் குந்தாலி
ஓடினர் ஆடினரே—அங்கே
ஓலமிட் டார்த்தவர் வெட்டினரே

தோண்டினர் தோண்டினரே—எங்கும்
தோண்டிய மண்ணதும் மலையாகத்
தோண்டினர் சகரரங்கே—அங்குத்
தோண்டிய பள்ளமும் கடலாக
வேண்டிய வழியமைத்தார்—பரி
மேய்ந்திடும் பாதலம் சென்றனரே
மாண்டனர் முடிவிலந்தோ—புகழ்
மாமுனி கபிலரின் சினத்தீயால்

சகரரும் தோண்டிடவே—கடலே
சாகரம் என்றொரு பெயர்கொண்டாய்

பகரரும் மாட்சிமையாய்—இந்தப்
பாரினைச் சூழ்ந்தலை வீசுகிறாய்
புகலரும் நன்னிதிகள்—என்றும்
போற்றியே மறைத்தனை உன்னகத்தே
சகலரும் தேடிடுவார்—உன்னைச்
சார்ந்தவை கொண்டிட மூழ்கிடுவார்
பல்வளங் கொண்டிடு வார்

—திரு. P. R. இராஜசூடாமணி

பயிற்சி

1. சகரர் யாவர்? இக்கதை எந்த இதிகாசத்தில் உள்ளது? (கேட்டறிக)

2. இப்பாட்டு கொண்டிச்சிந்து வகையைச் சேர்ந்தது. இதன் இராகத்தை அறிந்து பாடு.

3. மூவுலகு=சுவர்க்கம், பூமி, பாதாளம். பரிவேள்வி= அசுவமேதம். கரந்து=ஒளித்து. பாதலம்=பாதாளம். குந்தாலி= மண் தோண்டும் கருவி. இருப்புக்கோல்=கடப்பாரை. சினத் தீயால்=கோபாக்னியால்.

---

# 30. மரங்கொத்தியின் கடிதம்

"நாவல் நிலையம்,"
தோப்புத் தெரு,
ஆரணிய நகர்,
விக்கிரம, ஆனி, கஎ

பிரிய மாணவர்களே!

சிவப்பான சிறிய கொண்டையும் பொன்னிற முதுகும் வாய்ந்த கண்கவர் உருவமுள்ள என்னைக் காடுகளிலும் தோப்புக்களிலும் பன்முறை பார்த்திருப்பீர்கள்

நான் யார் தெரியுமா? மரங்கொத்தி. மரங்கொத்தி என்ற என் பெயரைக் கேட்டதுமே நானும் என் இனத்தாரும் மரங்களைக் கொத்தி அவைகட்குத் தீங்கிழைக்கும் சத்துருக்களென்று கருதி, எங்களைக் கண்டிக்கவும் துடிப்பீர்கள். நீங்கள் அவ்வாறு நினைப்பது தவறென்றும், நாங்கள் தருக்களின் மித்திரரென்றும் எடுத்துரைக்கும்பொருட்டே உங்களுக்கு இக்கடிதம் விடுக்கின்றேன்.

விருட்சங்கள் என் வரவை ஆவலுடன் எதிர்பார்க்கின்றன. ஏன் தெரியுமா? அவைகளை அரித்துக் குடைந்து ஜீவசத்தைக் கொள்ளைகொள்ளும் பூச்சி புழுக்களை நான் விழுங்கிவிடுவதால் அம்மரங்கள் செழிப்பாக வளரப் பேருதவி புரிகிறேன்.

என் காலில் முன்னே இரண்டு விரல்களும், பின்னே இரண்டு விரல்களும் இருப்பதால் அவைகளின் நுனியிலுள்ள கூரிய நகங்களால் மரங்களைப் பற்றிக்கொண்டு கிளியைப்போல் நன்றாக ஏறிச்செல்வேன்.

உளிபோன்ற உறுதியான எனது அலகினால் மரக்கட்டையை 'டக் டக்' என்று தட்டி, பூச்சி புழுக்கள் ஒளிந்து நிற்குமிடத்தை நான் உணர்வேன். உடனே மரப்பட்டைகளைப் பெயர்த்து, மரப்பிளவுகளில் எனது நீண்ட நாவைச் செலுத்துவேன். அங்குள்ள பூச்சி புழுக்கள் என் நாவின் பசையில் ஒட்டிக்கொள்ளும். அக்கணமே அவற்றைக் 'கபக்' என்று விழுங்கிவிடுவேன்.

இவ்விதம் நூற்றுக்கணக்கான சிறு ஜந்துக்களைப் பிடித்து விழுங்கி வாழ்கிறேன். கோடையில் மரப் பொந்து

களில் கூடு கட்டி ஐந்து வெண்மை நிறமான முட்டையிட்டு என் கணவனும் நானும் அடைகாப்பதுண்டு.

என் முற்பிறப்பு வரலாறுபற்றி ஒரு கதை வழங்குகிறது. கதை கேட்பதில் உங்களுக்கு விருப்பம் அதிகமல்லவா?

ஆதிகாலத்தில் தேவதைகளும் தேவர்களும் இப்பூவுலகின்கண் வந்து மக்களிடையே நடமாடுவதுண்டு. ஒரு மாயா தேவதை ஒரு மூதாட்டி வடிவங்கொண்டு அரணியத்திலிருந்த குடிசை யொன்றினுள் நுழைந்தாள். அன்று பனியும் குளிரும் பொறுக்கமுடியாமலிருந்தது. சிற்றிலுள் பன்னிறச் சீலையுடுத்தும் தலையிற் சிவப்புக் குல்லா யணிந்தும் ஒரு மாது பணிகாரங்கள் சுட்டுக் கொண்டிருந்தாள். மாயா மூதாட்டி அவள்பாற் சென்று, தான் களைப்பும் பசியும் மேலிட்டு வருந்துவதால் தனக்கு ஒரு பணிகாரம் தர வேண்டினள். அவள் ஒரு சாதாரணப் பிச்சைக்காரியென நினைத்து, அந் நங்கை சரியென்று கூறிப் புதிதாக ஒரு பணிகாரத்தைச் செய்யலானாள். அத்துணை பெரியதை விருந்தினளுக்குக் கொடுக்க மனமிசையாமல், அதைவிடச் சிறிய தொன்றைச் செய்தனள். அதுவும் பெரிதென நினைத்து, அதினுஞ் சிறிய மற்றொன்றைச் செய்தாள். அதையுங் கொடுக்க மனமொப்பாமல் சின்னஞ் சிறியதாக வேறொரு பணிகாரம் சுட்டாள். இவ்விதஞ் செய்துகொண்டிருந்தாளே யொழிய ஒன்றையுங் கொடுக்க மனமிசையவில்லை.

இதனை யுணர்ந்த மாயா தேவதை, மிகுந்த சீற்றமடைந்து அம்மங்கையைப் பார்த்து, "பேராசை பிடித்த பேயே, உன் பெண்ணுருவின் அளவுக்கேற்ப உன்

இருதயம் இராமல் மிகச் சிறியதாக இருப்பதால் நீ ஒரு பட்சியாக மாறி மரங்கள்தோறும் அலைந்து, அவைகளைக் குடைந்து இரை தேடக் கடவாய்" என்று சபித்து உருக்கரந்தாள். அக்கணமே அம்மாது பன்னிறச் சிறகும், குல்லாய் போன்ற தலைக்கொண்டையுமுள்ள சிறு பட்சியாக மாறிவிட்டாள். அப்பட்சியே மரங்கொத்தி.

அன்றுமுதல் அவளது சந்ததியாராகிய நாங்கள் மரங்களைக் கொத்தி உணவு தேடி வாழ்கிறோம். கடிதம் நீடித்துவிட்டது. என் குஞ்சுகள் கத்துகின்றன. அவைகளுக்கு இரை தேடிவர வேண்டும். பிற பின்.

இங்ஙனம்,
உங்கள் அன்புக்குரிய,



## பயிற்சி

i. வினாக்கள் :—

1. இது ஒரு கற்பனைக் கடிதம், எவ்விதம்?

2. இரைதேடல் எந்தப் பாராவில் விவரிக்கப்படுகிறது?

3. மரக்கொத்திக்குச் சிவப்புக் கொண்டையும், பொன்னிற முதுகும் வாய்த்தது எவ்வாறு?

4. பின்வரும் சொற்களுக்கு அதே பொருளுள்ள வேறு சொற்கள் இப்பாடத்தில் கண்டுபிடி: ஜனங்களிடையே, பூர்வ ஜென்மம், வசீகரம், மரம், கிழவி, மாது, க்ஷணம்.

ii. பின்வருவன ஒவ்வொரு வாக்கியத்தின் இரு பகுதிகள். பொருள் பொருந்துமாறு இரண்டிரண்டாகப் பொறுக்கிச் சேர்.

| | |
|---|---|
| 1. நீங்கள் அவ்வாறு | உருவமுள்ளது. |
| 2. மரங்கொத்தி கண் கவர். | ஏறிச்செல்வேன். |
| 3. மரங்களில் நன்றாக | நீடித்துவிட்டது. |
| 4. பூச்சி புழுக்கள் என் நாவில் | அதிகமல்லவா? |
| 5. கடிதம் | ஒட்டிக்கொள்ளும். |
| 6. கதை கேட்பதில் விருப்பம் | நினைக்கிறீர்கள். |

iii. இலக்கணம் :—

1. எதிர்மறை வாக்கியங்களாக மாற்றுக:

மாதிரி—நீங்கள் என்னைப் பன்முறை பார்த்தீர்கள். (உடன்பாடு)

நீங்கள் என்னைப் பன்முறை பார்க்கவில்லை. (எதிர்மறை)

(அ) விருப்பம் அதிகமல்லவா?
(ஆ) முட்டைகளை நான் அடைகாப்பதுண்டு.
(இ) உணவு தேடி வாழ்கிறோம்.
(ஈ) நன்றாக ஏறிச் செல்வேன்.
(உ) மூதாட்டி வருவாள்.

2. வினா வாக்கியமாக மாற்று:

மாதிரி—ஒரு கதை வழங்குகிறது.

ஒரு கதை வழங்குகிறதா?

அங்குள்ள புழுக்கள் என் நாவில் ஒட்டிக்கொள்ளும். எங்குள்ள, எவை, எதன், எதில், என்ன செய்யும்—இந்த வினாப் பதங்களைத் தனித்தனி உபயோகிக்க.

3. செயப்பாட்டு வினைகளாக மாற்றி யமை.

மாதிரி:— நான் கூடு கட்டினேன்.

கூடு என்னால் கட்டப்பட்டது.

(அ) அந்த விஷயத்தை மனத்தில் சிந்தித்தேன்.
(ஆ) இக்கடிதம் விடுக்கின்றேன்.
(இ) நான் முட்டைகளை அடைகாப்பதுண்டு.
(ஈ) அவள் வேறொரு பணிகாரம் சுட்டாள்.

---

# 31. ஓவியர்மணி இரவி வர்மா



1. மலரினில், நீல வானில்,
மாதரார் முகத்தில் எல்லாம்
இலகிய அழகை யீசன்
இயற்றினன், சீர்த்தி யீந்த

உலகினி லெங்கும் வீசி
　　யோங்கிய இரவி வர்மன்
அலகிலா அறிவுக் கண்ணால்
　　அனைத்தையும் நுகரு மாறே.

2. மன்னர் மாளிகையில் ஏழை
　　மக்களின் குடிவில் எல்லாம்
உன்னருந் தேசு வீசி
　　உளத்தினைக் களிக்கச் செய்வான்
நன்னர் ஓவியங்கள் தீட்டி
　　நல்கிய பெருமான், இந்நாட்
பொன்னணி யுலகு சென்றான்
　　புவிப்புகழ் போது மென்பான்.

3. அரம்பை யூர்வசி போலுள்ள
　　அமர மெல்லியலார் செவ்வி
திறம்பட வகுத்த எம்மான்!
　　செய்தொழில் ஒப்புநோக்க
விரும்பியே கொல்லாம் இன்று
　　விண்ணுல கடைந்து விட்டாய்?
அரம்பையர் நின்கைச் செய்கைக்(கு)
　　அழிதல்அங் கறிவை திண்ணம்.

—கவி சி. சுப்பிரமணிய பாரதியார்

பயிற்சி

[சித்திர மெழுதுவதில் ஒப்புயர்வற்று விளங்கிய நம் நாட்டு இரவி வர்மா என்பவரைப்பற்றிய இப்பாடலைப் படிப்பது மாணுக்கர்களுக்கு அழகுக் கலைகள் பயிலுவதில் சுவை யூட்டுமென்று கருதப்படுகிறது.]

i. ஓவியர் மணி=சித்திரம் எழுதுவோரில் இரத்தினம் போன்றவர். புவி=பூமி. இலகிய=விளங்கிய. சீர்த்தி=கீர்த்தி. நன்னர்=நன்ருக. தீட்டி=வரைந்து. அணிபொன் உலகு=அழகிய தேவலோகம். அமர மெல்லியலார்=தேவ ஸ்திரீகள்.

ii. 1. இரவி வர்மா விண்ணுலகு ஏகியதற்குக் கவி இரு காரணங்களைக் கற்பனையாகக் கூறுகிருர். அவை யாவை?

2. இரவி வர்மா வரைந்த படங்களைப் பார்த்திருக்கிருயா? அவர் எழுதிய ஆறு படங்களின் பெயரை எழுது. (109-ம் பக்கத்திலுள்ள படமும் முதலில் இவரால் எழுதப்பட்டதே.)

3. படத்தை உற்றுநோக்குக. இவர் கம்பீரத் தோற்றமுள்ளவரா? கண்ணில் ஒளியும், முகத்தில் தீரமும் தோன்றுகின்றனவா? இவர் இந்துவென்று எவ்வாறு ஊகிக்கிருய்? அவரது சட்டையின்மேல் தொங்குவது யாது?

iii இலக்கணம் :—

1. 'சீதையைக் கண்டேன்,' என்பதற்குப் பதிலாகக் 'கண்டேன் சீதையை' என்று மாற்றிக் கூறுவதுண்டு. சாதாரணமாக ஒரு வாக்கியத்தில் எழுவாயும் செயப்படுபொருளும், இவைகளைத் தழுவும் சொற்களும் முன்னதாகவும், பின்னரே பயனிலையும் நிற்கும். ஆனல் சில வாக்கியங்களிலும், பிரதானமாகச் செய்யுளிலும் இவ்வரிசை மாறிப் பயனிலை முன் நிற்பதுண்டு. இப் பாடச் செய்யுளில் இவ்வாறு மாறியிருப்பதை அறிக. முதற் செய்யுளை அன்வயப்படுத்தி (வசன நடை வரிசையில்) எழுது.

2. மதங்கள் பரவுவதற்குப் பிரசங்கமேடைச் சொற்பொழிவுகள் பெரிதும் உதவுகின்றன.

இவ் வாக்கியத்தில் எழுவாய்,—சொற்பொழிவுகள்; பயனிலை,—உதவுகின்றன. பிரசங்கமேடை,— இச்சொற்ருெடர் 'சொற்பொழிவுகள்' எனும் எழுவாயைத் தழுவும் அடைமொழியாகும். மதங்கள் பரவுவதற்குப் பெரிதும்,— இச் சொற்கள் பயனிலையைத் தழுவும் அடைமொழிகளாம்.

இதே விதம் ஒவ்வொரு வாக்கியத்திலும் எழுவாயைத் தழுவும் சொற்களையும், பயனிலையைத் தழுவும் சொற்களையும், செயப்படுபொருளைத் தழுவும் சொற்களையும் கண்டறிக.

---

# 32. படக்காட்சி

[திரு. சா. கணேசன்]

குறிப்பு :—நிதானமாக ஐந்து நிமிஷம் கருத்தறிந்து படி. பிறகு நிறுத்திவிட்டு, படித்த வரையிலுள்ள சொற்களை எண்ணிக் கணக்கிடு. ஒரு நிமிஷத்தில் எத்தனை வார்த்தைகள் படித்தாய்?

1. சினிமா, மக்களுக்கு அறிவும் மகிழ்ச்சியும் அளிக்கிறது. இக் கருத்து எந்தப் பத்தியில் கூறப்படுகிறது?
2. மூன்றாவது பத்தியின் முக்கியக் கருத்து யாது?
3. வில்லியம் பிட்டைப்பற்றி யாது கூறப்படுகிறது?
4. ரேடியோ நிகழ்ச்சிகளை நீ கேட்பதுண்டா?

சினிமா, பொது ஜனங்களின் சர்வ கலாசாலை என்று சொல்லலாம். மேலும், போதனை செய்வதோடு நிற்காமல் அவர்களுக்கு அது மகிழ்ச்சியையும் கொடுக்கிறது.

ஆனால், இன்றைய நிலையில் நம் நாட்டுச் சினிமாக் கொட்டகைகள் தம் கடமைகளைச் செய்து வருகின்றனவா என்று கேட்டால், பெரும்பாலும் இல்லை என்றுதான் சொல்லவேண்டியிருக்கிறது. ஒரு தமிழ் சினிமாக் கொட்டகைக்குள் நுழைந்து திரும்பிவருவதற்குள் நமது

---

* அகில இந்திய ரேடியோவில் 29-7-40-ல் பேசியது: திருச்சி நிலைய அதிகாரியின் அனுமதிபெற்றுச் சேர்க்கப்பட்டுள்ளது.

காதும், கண்ணும், மனமும் படும் பாட்டைக் கூற முடியாது. சில படங்களில் கேவலமானவற்றைப் பார்க்கவும், சகிக்க முடியாததுமான பாஷை கலந்துள்ளதைக் கேட்கவும் நேரிடுகின்றன.

ஒரு நல்ல சினிமாப் படம் என்றால் எப்படி இருக்க வேண்டும்? சாதாரணமான ஒரு நல்ல புத்தகம் எப்படி இருக்கவேண்டுமென்று எதிர்பார்க்கிறோமோ அப்படித்தான் சினிமாவும். நல்ல புத்தகம் என்றால், அதில் உயர்ந்த விஷயம் கொடுக்கப்பட்டிருந்தால்தான் ஒப்புக்கொள்ளுவோம். ஆசிரியரின் நடையும், விஷயத்தை விளக்குகின்ற முறையும் எடுத்துக்கொண்ட விஷயத்திற்கு ஏற்றதாக அமையவேண்டும். இது இரண்டாவது இலட்சணம். மூன்றாவதாக, ஆசிரியர் அந்த நூலில் எவ்வளவு தூரம் ஈடுபட்டிருக்கிறார் என்பதைக் கவனிக்கவேண்டும். அதாவது, ஆசிரியர் வேறு, விஷயம் வேறு என்று பிரிந்து நிற்காமல், நூல் முழுவதிலும் ஆசிரியர் நமக்குக் காட்சி தர வேண்டும். ஆசிரியர் தம் நூலோடு லயித்து நிற்க வேண்டும். இந்த மூன்று இலட்சணங்களும் சினிமாவுக்கும் பொருந்தும்.

நல்ல சினிமாப் படத்தில் உயர்ந்த விஷயம் இருக்க வேண்டும். எது உயர்ந்த விஷயம்? மக்களை உயர்த்தக் கூடிய விஷயந்தான் உயர்ந்தது. உண்மை ஒன்றுதான். மனத்தில் படர்ந்துள்ள மாசுகளை அகற்றி மக்களை உயர்த்த முடியும். உண்மையென்பது கேவலம் நடந்ததோ, நடப்பதோ மட்டும் அல்ல. ஆனால் எப்படி நடந்திருக்க வேண்டும், நாம் எப்படி வாழவேண்டுமென்பதை உணர்த்துவதுதான் உண்மை. இத்தகைய விஷயத்திற்கு

ஏற்றாற்போல் சினிமாக் கதையின் அமைப்பும் இருக்க வேண்டும். இந்த அமைப்போடு ஒட்டியதுதான் சினிமா 'டெக்னிக்' என்பதும்.

சினிமாவில் நாம் எதிர்பார்க்கும் மூன்றாவது விஷயம், கதை எழுதியவர், 'டைரெக்ட்' செய்பவர், பாத்திரங்களாக நடிப்பவர்கள் ஆகியோர் கதைபோடு தம்மை எவ்வளவு தூரம் ஈடுபடுத்திக்கொண்டிருக்கிறார்கள் என்பது தான். இந்த ஈடுபாடு எவ்வளவு முக்கியம் என்பது சில படங்கள் அருவருக்கத்தக்க விதம் இருப்பதால் தெரியும்.

புராணப் படமோ, சரித்திரப் படமோ, சமூகப் படமோ, பிரசாரப் படமோ—எந்தப் படமாக இருந்தாலும் சரி—ஆசிரியர் முதல் நடிகர்கள் வரை எல்லோரும் கதையின் ஒவ்வொரு சம்பவத்திலும் தம்மை மறந்து ஈடுபட்டுவிடவேண்டும். எல்லோரும் ஈடுபட்டுத் தயாரிக்கும் படத்தில் அநாகரிகங்கள் புகுவதற்கு இடமே இராது.

நல்ல முறையில்—நம் நாட்டுப் பண்புகளை வளர்ப்பதற்குரிய முறையில்—படங்களைத் தயார் செய்தால், இப்பொழுது சினிமா பார்க்கக்கூடாது என்று சொல்லும் பெரியவர்களும் அம்மனப்பான்மையை மாற்றிக்கொண்டு விடுவார்கள். அது மட்டுமா? சினிமா பார்க்கவேண்டியது அவசியம் என்றுகூட ஏற்பட்டுவிடும். எல்லாப் படங்களிலும், எல்லாக் காட்சிகளிலும் நீதிகள் புகுத்தப்பட வேண்டியது அவசியமில்லை. தொட்ட தொட்ட இடமெல்லாம் நீதிகள் தொங்கிக்கொண்டு இருக்கவேண்டியதில்லை. சினிமாக் கலையின் ஜீவாதாரமான படப்பிடிப்பை வைத்துக்கொண்டு எத்தனையோ அற்புதங்களைக் காட்ட

லாம்; படங்களை அழகுக் களஞ்சியங்களாகச் செய்யலாம். வெறும் அழகு எதற்கு என்று யாரும் ஒதுக்கிவிட முடியாது. தோட்டத்தில், உண்பதற்கு உரிய கீரைத்தண்டு தான் ஏராளமாய் இருக்கிறதே, ரோஜாப்பூ எதற்கு என்று யாரேனும் சொல்லுவார்களா? ரோஜா அழகின் அறிகுறியல்லவா? இலக்கியத்தில் ஏராளமான வசன நூல்கள் இருக்கும்பொழுது கவிதை எதற்கு என்று சொல்லுவோமா? அதுபோலத்தான் சினிமாவில் அழகுக் காட்சிகளும்.

கடைசியாக ஒரு வார்த்தை. வெகு காலத்திற்கு முன்னால் இங்கிலாந்தில் வில்லியம் பிட் என்று ஒரு பிரதம மந்திரி இருந்தார். அவருடைய அறைக்குள் "மூடனாக நுழையும் ஒருவன் ஞானியாக வெளியே வருவான்" என்று ஜனங்கள் சொல்வது வழக்கம். அவர் அவ்வளவு மேதாவி. அவருடன் சிறிது நேரம் சம்பாஷிக்கும் பாக்கியம் பெற்றவன் அவ்வளவு அறிவு பெற்றுவிடுவான் என்று ஜனங்கள் கருதினார்கள். பிரதம மந்திரி பிட்டைப்போலவே நமது படக்கூடங்களும் விளங்கவேண்டும். ஒரு படக்கூடத்திற்குள் மூடனாகப் பிரவேசிக்கும் ஒருவன் அறிவாளியாக வெளியே வரவேண்டும். அத்துடன், பகல் முழுவதும் வாழ்க்கைப் போராட்டத்தில் ஈடுபட்டு அலுத்துப்போய்ச் சலிப்புடன் படக்கூடத்தின் உள்ளே செல்பவன் உள்ளமும் உடம்பும் பூரிக்கக் குதூகலத்துடன் வெளியே வரவேண்டும்.

பயிற்சி

[ரேடியோ நிகழ்ச்சிகளைக் கேட்பதில் மாணவர்க்கு அவா எழுப்புவதற்கானது இப் பகுதி.]

i. இப்பாடத்திற் காணும் ஆங்கிலச் சொற்களை எழுதுக.

ii. **இலக்கணம் :**

பொன் + மணி = பொன் மணி
வாழை + பழம் = வாழைப்பழம்
புளி + காய் = புளியங்காய்
மண் + பானை = மட்பானை

மேற்கண்ட உதாரணங்களில் இரு பதங்கள் சேரும் பொழுது எவ்விதம் எழுதுகிறோம்?

பொன் + மணி—இவைகளில் பொன் என்னும் பதம் **நிலைமொழி** என்றும், அதனோடு சேர வரும் மணி என்னும் பதம் **வருமொழி** என்றும் சொல்லப்படும். **ன்** என்பது நிலைமொழியில் ஈற்றெழுத்து: **ம** என்பது வருமொழியில் முதலெழுத்து. பொன்மணி என்பதில் இவ்வெழுத்துக்கள் மாறாமல் இயல்பாகவே இருப்பது **இயல்புப் புணர்ச்சி** ஆகும். ஆனால் 'வாழைப்பழம்' முதலிய ஏனைய உதாரணங்களில் சில எழுத்துக்கள் நடுவில் தோன்றியும், திரிந்தும் இருக்கின்றன. இவ்விதம் சொற்கள் சேருவது **விகாரப் புணர்ச்சி**யாகும்.

---

# 33. பொருளடக்கம்

எந்த நூலின் ஆரம்பத்திலும் **பொருளடக்கம் அல்லது** உள்ளுறை அச்சிட்டிருப்பதைக் கவனித்திருப்பீர்கள். அதன் உபயோகம் யாது? குறிப்பிட்ட பகுதியை நாம் எளிதிலும் விரைவிலும் கண்டறிய உள்ளுறை உதவியாகும்; இல்லாவிடில் ஒவ்வொரு பக்கமாகப் புரட்டிப் பார்த்து, வேண்டிய பகுதியைக் கண்டறிய நெடுநேரமாகுமல்லவா? பொருளடக்கத்தை உபயோகிக்கப் பழகிக் கொள்வது நலம்.

இப்போது, இப்புத்தகத்தில் உள்ளுறை யேட்டைப் புரட்டி, பின்வரும் வினக்களுக்கு விடை கண்டுபிடி. எவ்வளவு சீக்கிரத்தில் கண்டுபிடிக்க முடிகிறதென்று பார்.

1. கதையாகவுள்ள பாடங்களின் எண்களையும், அவை ஆரம்பிக்கும் பக்கங்களையும் பொறுக்கி எழுது. இவைகளில் நீ அதிகமாக விரும்பும் கதை எது?

2. 12, 45, 69, 78, 96, 108 பக்கங்களில் எந்தப் பாடங்கள் ஆரம்பிக்கின்றன?

3. பள்ளுப்பாட்டு, தேவாரம், விதியின் வலிமை, மண்ணுலகம், இந்திரநாதனின் படம், பத்திரிகைச் செய்தி—இவை எந்தப் பக்கங்களில் இருக்கின்றன?

4. மரங்கொத்தி எழுதிய கடிதம் எத்தனையாவது பாடம்? பக்கம் என்ன?

5. பயிற்சிப் பாடம் IV எதைப் பற்றியது? V எதைப்பற்றியது?

6. சுவாமி விவேகாநந்தர் கடிதத்தின் தேதி யாது?

7. சியவனப்பிராசம், திரிவேணி, பத்மஜா, வீர மார்த்தாண்ட தேவர், இரவி வர்மா, ரேடியம் இப் பெயர்கள் வந்துள்ள பக்கங்களின் இலக்கத்தைக் கண்டு பிடி.

---

# செய்யுட் பகுதி

## 1. நல்வழி

புண்ணியமாம் பாவம்போம் போனநாட் செய்த அவை
மண்ணிற் பிறந்தார்க்கு வைத்தபொருள்—எண்ணுங்கால்
ஈதொழிய வேறில்லை யெச்சமயத் தோர்சொல்லுந்
தீதொழிய நன்மை செயல். 1

சாதி யிரண்டொழிய வேறில்லை சாற்றுங்கால்
நீதி வழுவா நெறிமுறையின்—மேதினியில்
இட்டார் பெரியோர் இடாதார் இழிகுலத்தோர்
பட்டாங்கி லுள்ள படி. 2

வருந்தி யழைத்தாலும் வாராத வாரா
பொருந்துவன போமினென்றால் போகா—இருந்தேங்கி
நெஞ்சம் புண்ணாக நெடுந்தூரந் தாநினைந்து
துஞ்சுவதே மாந்தர் தொழில். 3

உள்ள தொழிய வொருவர்க் கொருவர்சுகங்
கொள்ளக் கிடையா குவலயத்தில்—வெள்ளக்
கடலோடி மீண்டும் கரையேறி னாலென்
உடலோடு வாழு முயிர்க்கு. 4

ஆற்றுப் பெருக்கற் றடிசுடுமந் நாளுமவ்வா
றூற்றுப் பெருக்கா லுலகூட்டும்—ஏற்றவர்க்கு
நல்ல குடிப்பிறந்தார் நல்கூர்ந்தா ரானாலும்
இல்லையென மாட்டா ரிசைந்து. 5

ஆண்டாண்டு தோறு மழுது புரண்டாலும்
மாண்டார் வருவரோ மாநிலத்தீர்—வேண்டா
நமக்கு மதுவழியே நாம்போ மளவும்
எமக்கென்னென் றிட்டுண் டிரும். 6

ஒருநா ளுணவையொழி யென்றா லொழியாய்
இருநாளைக் கேலென்றா லேலாய்—ஒருநாளும்
என்னோ வறியா யிடும்பைகூ ரென்வயிறே
உன்னோடு வாழ்த லரிது. 7

செய்தீ வினையிருக்கத் தெய்வத்தை நொந்தக்கால்
எய்த வருமோ இருநிதியம்—வையத்
தறும்பாவ மென்னவறிந் தன்றிடார்க் கின்று
வெறும்பானை பொங்குமோ மேல்? 8

சேவித்துஞ் சென்றிரந்துந் தெண்ணீர்க்கடல் கடந்தும்
பாவித்தும் பாராண்டும் பாட்டிசைத்தும்—போவிப்பம்
பாழி னுடம்பை வயிற்றின் கொடுமையால்
நாழி யரிசிக்கே நாம். 9

நீரு நிழலு நிலம்பொதியு நெற்கட்டும்
பேரும் புகழும் பெருவாழ்வும்—ஊரும்
வருந்திருவும் வாழ்நாளும் வஞ்சமிலார்க் கென்றுந்
தருஞ்சிவந்த தாமரையாள் தான். 10

பாடுபட்டுத் தேடிப் பணத்தைப் புதைத்துவைத்துக்
கேடுகெட்ட மானிடரே கேளுங்கள்—கூடுவிட்டிங்
காவிதான் போயினபின் பாரே யநுபவிப்பார்
பாவிகா ளந்தப் பணம். 11

வேதாளஞ் சேருமே வெள்ளெருக்குப் பூக்குமே
பாதாள மூலி படருமே—மூதேவி
சென்றிருந்து வாழ்வளே சேடன் குடிபுகுமே
மன்றோரஞ் சொன்னார் மனை. 12

நீறில்லா நெற்றிபாழ் நெய்யில்லா வுண்டிபாழ்
ஆறில்லா வூருக் கழகுபாழ்—மாறில்
உடற்பிறப் பில்லா வுடம்புபாழ் பாழே
மடக்கொடி யில்லா மனை. 13

ஆன முதலி லதிகஞ் செலவானால்
மான மழிந்து மதிகெட்டுப்—போனதிசை
எல்லார்க்குங் கள்ளனா யேழ்பிறப்புந் தீயனாய்
நல்லார்க்கும் பொல்லனா நாடு. 14

ஒன்றை நினைக்கி னதுவொழிந்திட் டொன்றாகும்
அன்றி யதுவரினும் வந்தெய்தும்—ஒன்றை
நினையாத முன்வந்து நிற்பினு நிற்கும்
எனையாளு மீசன் செயல். 15

மரம்பழுத்தால் வெளவாலை வாவென்று கூவி
யிரந்தழைப்பார் யாவருமங் கில்லை—சுரந்தமுதங்
கற்றா தரல்போற் கரவா தளிப்பரேல்
உற்றா ருலகத் தவர். 16

தாந்தாமுன் செய்தவினை தாமே யநுபவிப்பார்
பூந்தா மரையோன் பொறிவழியே—வேந்தே
ஒறுத்தாரை யென்செயலாம் ஊரெல்லா மொன்றா
வெறுத்தாலும் போமோ விதி. 17

ஆறிடு மேடு மடுவும்போ லாஞ்செல்வம்
மாறிடு மேறிடு மாநிலத்தீர்—சோறிடுந்
தண்ணீரும் வாருந் தருமமே சார்பாக
உண்ணீர்மை வீறு முயர்ந்து. 18

கல்லானே யானாலுங் கைப்பொருளொன் றுண்டாயின்
எல்லாருஞ் சென்றங் கெதிர்கொள்வர்—இல்லானை
இல்லாளும் வேண்டாள்மற் றீன்றெடுத்த தாய் வேண்
செல்லா தவன்வாயிற் சொல். [டாள் 19

தேவர் குறளுந் திருநான் மறைமுடிவும்
மூவர் தமிழும் முனிமொழியுங்—கோவை
திருவா சகமுந் திருமூலர் சொல்லும்
ஒருவா சகமென் றுணர். 20

தண்ணீர் நிலநலத்தாற் றக்கோர் குணங்கொடையாற்
கண்ணீர்மை மாறாக் கருணையாற்—பெண்ணீர்மை
கற்பழியா வாற்றாற் கடல்சூழ்ந்த வையகத்துள்
அற்புதமா மென்றே யறி. 21

—ஔவையார்

## 2. இனியவை நாற்பது

ஆற்றுந் துணையா லறஞ்செய்கை முன்னினிதே
பாற்பட்டார் கூறும் பயன்மொழி மாண்பினிதே
வாய்ப்புடைய ராகி வலவைக ளல்லாரைக்
காப்படையக் கோட லினிது. 1

யானையுடைய படைகாண்டல் முன்னினிதே
ஊனைத்தின் றூனைப் பெருக்காமை முன்னினிதே
கான்யாற் றடைகரை யூரினி தாங்கினிதே
மான முடையார் மதிப்பு. 2

குழவி பிணியின்றி வாழ்த லினிதே
கழறு மவையஞ்சான் கல்வியினிதே
மயரிக ளல்லாத மாண்புடையார்ச் சேருந்
திருவுந்தீர் வின்றேல் இனிது. 3

மான மழிந்தபின் வாழாமை முன்னினிதே
தான மழியாமைத் தானடங்கி வாழ்வினிதே
ஊனமொன் றின்றி யுயர்ந்த பொருளுடைமை
மானிடவர்க் கெல்லா மினிது. 4

குழவி தளர்நடை காண்ட லினிதே
யவர் மழலை கேட்ட லமிழ்தி னினிதே
வினையுடையான் வந்துடைந்து வெய்துறும்போழ்து
மனனஞ்சா னாக லினிது. 5

கற்றார்முற் கல்வி யுரைத்தல் மிகவினிதே
மிக்காரைச் சேர்தல் மிகமாண முன்னினிதே
எட்டுணை யானு மிரவாது தானீதல்
எத்துணையு மாற்ற லினிது. 6

—பூதஞ் சேந்தனார்

---

# 3. திரிகடுகம்

[மருத்துவ நூலில் திரிகடுகம் என்பது சுக்கு, மிளகு, திப்பிலி ஆகிய மூன்று காரமுள்ள மருந்துகளைக் குறிக்கும் (கடுகம்=காரமுள்ளது) அவை உடம்பிற்கு நலன் தரும். அது போல வாழ்க்கைக்கு நலன் தரும் மும்மூன்று உயரிய நீதிகளை ஒவ்வொரு பாட்டிலும் கூறும் நூல் திரிகடுகம் எனப்பட்டது.]

தாளாள னென்பான் கடன்படா வாழ்பவன்
வேளாள னென்பான் விருந்திருக்க வுண்ணாதான்
கேளாள னென்பான் மறவாதான் இம்மூவர்
கேளாக வாழ்த லினிது. 1

தானங் கொடுக்குந் தகைமையும் மானத்தாற்
குற்றங் கடிந்த வொழுக்கமுந் தெற்றெனப்
பல்பொருள் நீங்கிய சிந்தையும் இம்மூன்றும்
நல்வினை யார்க்குங் கயிறு. 2

தன்னை வியந்து தருக்கலும் தாழ்வின்றிக்
கொன்னே வெகுளி பெருக்கலும்—முன்னிய
பல்பொருள் வெஃகுஞ் சிறுமையும் இம்மூன்றும்
செல்வ முடைக்கும் படை. 3

தூய்மை யுடைமை துணிவாந் தொழிலகற்றும்
வாய்மை யுடைமை வனப்பாகும்—தீமை
மனத்தினும் வாயினுஞ் சொல்லாமை மூன்றும்
தவத்தில் தருக்கினார் கோள். 4

வைததனை யின்சொல்லாக் கொள்வானும் நெய்பெய்த
சோறென்று கூழை மதிப்பானும்—ஊறிய
கைப்பதனைக் கட்டியென் றுண்பானும் இம்மூவர்
மெய்ப்பொருள் கண்டு வாழ்வார். 5

நிறைநெஞ் சுடையானை நல்குர வஞ்சும்
அறனை நினைப்பானை யல்பொரு ளஞ்சும்
மறவனை யெவ்வுயிரு மஞ்சுமிம் மூன்றுந்
திறவதில் தீர்ந்த பொருள். 6

—நல்லாதனார்

# 4. திருக்குறள்

இன்னாசெய் தாரை யொறுத்தல் அவர்நாண
நன்னயஞ் செய்து விடல்.

தன்னெஞ் சறிவது பொய்யற்க; பொய்த்தபின்
தன்னெஞ்சே தன்னைச் சுடும். 2

அடக்கம் அமரருள் உய்க்கும்; அடங்காமை
ஆரிருள் உய்த்து விடும். 3

தீயினாற் சுட்டபுண் உள்ளாறும்; ஆறாதே
நாவினாற் சுட்ட வடு. 4

தினைத்துணை நன்றி செயினும் பனைத்துணையாக்
கொள்வர் பயன்றெறி வார். 5

சொல்லுதல் யார்க்கும் எளிய; அரியவாம்
சொல்லிய வண்ணம் செயல். 6

உடுக்கை யிழந்தவன் கைபோல ஆங்கே
இடுக்கண் களைவதாம் நட்பு. 7

மருந்தென வேண்டாவாம், யாக்கைக்கு அருந்தியது
அற்றது போற்றி உணின். 8

எண்ணித் துணிக கருமம் துணிந்தபின்
எண்ணுவம் என்ப திழுக்கு. 9

—திருவள்ளுவர்

# 5. நாலடியார்

எனதெனத தென்றிருக்கும் ஏழை பொருளை
எனதெனத தென்றிருப்பன் யானும்—தனதாயின்
தானுமதனை வழங்கான் பயன் துவ்வான்
யானு மதனை யது. 1

கூர்த்துநாய் கௌவிக் கொளக்கண்டும் தம்வாயால்
பேர்த்துநாய் கௌவினு ரீங்கில்லை—நீர்த்தன்றிக்
கீழ்மக்கள் கீழாய சொல்லியக்கால் சொல்பவோ
மேன்மக்கள் தம்வாயால் மீட்டு. 2

—சமண முனிவர்

# 6. அல்லியரசாணிமாலை

[அல்லி அரசாணி நீன்முக ராஜனைப்
போருக்கு அழைத்தல்]

நீன்முக ராஜனை நேரிழையும் வந்தெதிர்த்தாள்
ஆரடா நீன்முகனே அறிவுகெட்ட பாதகனே
மதுரம் புளியுமா வைகாசி தையாமா
எருது பசுவாமா எதிர்த்துவந்தா யாண்பிள்ளையாய்
உன்னைக் கெடுப்பேனே உனக்குமொரு சேவகமா

கொசுவு பருந்தாமோ கூடப் பறக்குமோ
உயரப் பறந்தாலும் ஊர்க்குருவி பருந்தாமோ
அணிப்பிள்ளை நசுக்கினால் மான்குட்டி விழுமோடா
உன்னை அதம்பண்ண அல்லியிலே நான் பிறந்தேன்.

# 7. சமரஸக் கீர்த்தனை

### பல்லவி

மார்க்கம் இது மகனே—சந்திரன்
தோற்கும் எழில் முகனே—சன் (மார்க்கம்)

### அநுபல்லவி

மூர்க்கரு டனேஉற வாடாதே—பழி
மூண்டிடும் சூதுவிளை யாடாதே—இந்தப்
பார்க்குள் ஒரு பொய்சொல்லக் கூடாதே—மது
பானம் விரும்பி மனம் வாடாதே—சன் (மார்க்கம்)

### சரணம்

கல்வி நமக்கவ சியமே—கற்றவர்க்கிந்தக்
காசினி யெல்லாமவ சியமே;
செல்வ முடன்வரும் ஜயமே-கற்றவர்க் கென்றும்
ஜீவனத்துக் கில்லை பயமே;

பலவகைப் படிப்பையும் நீங்காதே—உன்
பாடம் படிக்காமல் தூங்காதே—நீ
நல்வழி நடக்கப் பின்வாங்கதே—எந்
நாளும் நீ கடன் வாங்கி ஏங்காதே—சன் (மார்க்கம்)

—மயூரம் வேதநாயகம் பிள்ளை

# 8. குமரேச சதகம்

கடுகடுத் தாயிரம் செய்குவதில் இன்சொலால்
களிகொண் டழைத்தல் நன்று;

கனவேள்வி யாயிரம் செய்வதில் பொய்யுரை
கருத் தொடு சொலாமை நன்று;

வெடுவெடுக் கின்றதோ ரவிவேகி யுறவினில்
விவேகியோடு பகைமை நன்று;

வெகுமதிகள் ஆயிரம் செய்வதில் அரைக்காசு
வேளைகண் டுதவல் நன்று;

சடுதியிற் பக்குவம் சொல்லும் கொடைக்கிங்கு
சற்றுமிலை யென்னல் நன்று;

சம்பத்துடன் பிணியின் மெலிகுவதின் நோயற்ற
தாரித்திரியம் நன்று காண்;

மடுவினில் கரியோலமென்னவந் தருள்செய்த
மான்மருக னை முருகா!

மயிலேறி விளையாடு குகனே! புல்வயனீடு
மலைமேவு குமரே சனே!

—குருபாத தாசர்

—

# 9. நகைச்சுவைப் பாக்கள்

## i. சத்திரத்தில் கால தாமதம்

கத்துகடல் சூழ் நாகைக் காத்தன்றன் சத்திரத்தில்
அத்தமிக்கும் போதில் அரிசிவரும்—குத்தி
உலையிலிட வூரடங்கும் ஓரகப்பை அன்னம்
இலையிலிட வெள்ளி யெழும்.

—காளமேகப் புலவர்

## ii. கலியாணத்தில் சோறுண்ட சிறப்பு

வண்டமிழைத் தேர்ந்த வழுதி கலியாணத்
துண்ட பெருக்க முரைக்கக்கேள்—அண்டி
நெருங்குண்டேன் தள்ளுண்டேன் நீள்பசியி னாலே
சுருக்குண்டேன் சோறுண்டி லேன்.

—ஔவையார்

## iii. கருநாவற் பழம்

காரெனக் கறுத்து நீலம் கலந்தொளிர் கனியே உன்றன்
சீரிய கருமை யெங்கே பெற்றனை செப்பாய் என்றேன்
வீரியம் அழகொ டாண்மை மேன்மைசேர் தமிழ்
[நன் னாட்டு
நாரியர் விழியி னின்றிந் நலத்தினைப் பெற்றேன் அன்றே.

—பரலி சு. நெல்லையப்ப பிள்ளை

86615

# 10. தமிழ் அணங்கு

நீராரும் கடலுடுத்த நிலமடந்தைக் கெழிலொழுகும்
சீராரும் வதனமெனத் திகழ் பரத கண்டமிதில்
தக்கசிறு பிறைநுதலும் தரித்தநறும் திலகமுமே
தெக்கணமும் அதிற்சிறந்த திராவிடநற் திருநாடும்
அத்திலக வாசனைபோல் அனைத்துலகம் இன்பமுற
எத்திசையும் புகழ்மணக்க இருந்தபெருந் தமிழ் அணங்கே!

—ஆசிரியர் சுந்தரம் பிள்ளை

1258/73

Printed at
The Royal Printing Works,
Mount Road, Madras—MS. 175